பக்கங்கள்: இருபத்துஎட்டு + 6

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 27 வள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 28 புதன்கிழமை (14.12.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 018



21

திசை திருப்புகிறது மத்திய அரசு



23

ஈரான் அதிபர் மீது செருப்பு வீச்சு



24

சினிமாவில் ரஜினி கிரிக்கெட்டில் யுவராஜ்

# யாழ்ப்பாணத்தில் ஊடக அடக்குமுறை உண்மைகளை வெளியிட்டால் ஆபத்து

## இதுதான் அரசு வழங்கிய சுதந்திரம் சபையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில்

கொழும்பு, டிசெம்பர் 14

யாழ்ப்பாணத்தில் இன்று ஊடக அடக்குமுறை அதிகரித்துள்ளது. சுதந்திரமாக ஒரு பத்திரிகை தனது கருத்தை வெளியிடமுடியாது. ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக நடமாடவும் முடியாத நிலை. இது தான் இந்த அரசு ஏற்படுத்திய ஊடக ஜனநாயகம்.

இன்று யாழ்ப்பாணத்தின் உண்மைநிலையை அறியமுடியாது. ஒரு பத்திரிகை உண்மைகளை வெளியிட்டால், அந்த ஊடகம் மீது தாக்குதல் நடத்தப்படுகின்றது. ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டு கொலை செய்யப்படுகின்றனர். எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

வெகுஜன தொடர்பு அமைச்சுக்கான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர்

பக் 04

## வடக்கில் அரசியல் செல்வாக்கு காரணமாக ஊடக சுதந்திரத்தில் நீதித்துறை தலையீடு

சபையில் சரவணபவன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 14

வடக்கில் அரசியல் செல்வாக்கு காரணமாக ஊடக சுதந்திரத்தில் நீதித்துறை தலையிடுகிறதா என்ற சந்தேகம் அங்குள்ள பத்திரிகையாளர்கள் மத்தியில் எழுந்துள்ளது. வடக்கில் இந்த நிலை தொடர்ந்தால் ஊடக சுதந்திரம் கேள்விக்குறியாகிவிடலாம்.

- இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்று யாழ்.மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

வெகுஜன தகவல் தொடர்பாடல் அமைச்சு தொடர்பான நிதியொதுக்கீடு குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறிய

பக் 27

## உயர்தரப் பெறுபேற்றை வெளியிடுவதற்கு ஒரு வாரம் கெடு

கொழும்பு, டிசெ.14

''ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை இன்னும் ஒருவாரகாலத்துக்குள் வெளியிடாவிட்டால், மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறையிடவேண்டிய நிலை ஏற்படும்.''

- இவ்வாறு அதிரடியாக அறிவித்துள்ளது இலங்கை ஆசிரியர் சங்கம்.

உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதில் இழுபறிநிலை ஏற்பட்டுள்ளது. கல்வியமைச்சரும், பரீட்சைகள் ஆணையாளரும் வெவ்வேறான கருத்துகளை வெளியிடுகின்றனர்.

இந்நிலையில், இதுதொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலினிடம் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பக் 04

வடமராட்சியில் நேற்றுக் கோரம்

## பனையைப் பந்தாடியது பஜிரோ பயணித்த இருவர் சிதறிச் சாவு

யாழ்ப்பாணம், டிசெ.14

பருத்தித்துறை யாழ்ப்பாணம் பிரதான வீதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற கோர விபத்தில் இருவர் அந்த இடத்திலேயே பலியானார்கள். மேலும் ஒருவர் படுகாயங்களுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பாகத் தெரியவருவதாவது:

பருத்தித்துறை யாழ்ப்பாணம் பிரதான வீதியில் குஞ்சர் கடைச் சந்திக்கு அண்மித்த அறிவாலயம் சனசமூக நிலையத்துக்கு அருகில் நேற்றுக் காலை 7.10

பக் 26




நேற்று இடம்பெற்ற கோரவிபத்தில் சின்னாபின்னமாகிக் கிடக்கும் வாகனம். அதனருகே உயிரிழந்த ஒருவரின் உடலம்.

## மக்களின் காணிகளை மாதகலில் கடற்படை சுவீகரிக்க முனைகிறதா?

அரச அதிபரிடம் ஆஸ்திரேலிய நாடாளுமன்ற குழு கேள்வி

யாழ்ப்பாணம், டிசெ.14

மாதகலில் மக்கள் காணிகளைக் கடற்படையினர் சுவீகரிக்க உள்ளதாக வெளியான தகவலின் உண்மைத் தன்மை பற்றியும், ஆஸ்திரேலிய அரசின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டங்கள் உரிய வகையில் மக்களைச் சென்றடைந்தமை தொடர்பிலும் யாழ். மாவட்டத்துக்கு நேற்று விஜயம்செய்த ஆஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு அக்கறையோடு கேட்டறிந்து கொண்டது. இவ்வாறு யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

நேற்றுக்காலை யாழ். செயலகத்தில் அரச அதிபரை ஆஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு சந்தித்தது. இது தொடர்பாக அரச அதிபர் தெரிவித்தமை வருமாறு:

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்

பக் 04

## வருகிறார் நவநீதம்பிள்ளை பெப்ரவரி முதல் வாரத்தில்

கொழும்பு, டிசெ.14

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தலைவர் நவநீதம்பிள்ளை எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் வாரத்தில் இலங்கை வருகிறார் என ஐ.நா. சபை வட்டாரங்களில் இருந்து நம்பகரமாகத் தெரியவருகிறது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் வருடாந்தக் கூட்டத்தொடர் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள நிலையில், நவநீதம்பிள்ளையின் இலங்கை விஜயமானது முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையலாம் என இராஜதந்திரிகள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை, நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கும் கையோடு அந்த அறிக்கையின் பிரதியொன்றை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தலைவர் நவிப்பிள்ளைக்

பக் 28

### வவுனியா வாசியின் சடலம் சின்னக்கடையில் மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ.14

குருநகர் சின்னக்கடைப் பகுதியில் இருந்து வவுனியாவைச் சேர்ந்த ஒருவரின் சடலம் நேற்றுக் காலை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

வவுனியா, கடுவந்தபிளவைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான அப்துல் நஷார் (வயது-30) என்பரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

குறித்த நபர் யாழ். நகரில் உள்ள உண

பக் 27

## இறுதிப் போரில் சீனாவின் உதவிக்கு இலங்கை இப்போது நன்றி கூறுகிறது

கொழும்பு, டிச.14

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிப் போரின்போது சீனா இலங்கைக்கு வழங்கிய எப்போதுமே விடுபடாத - தொடர்ச்சியான - ஆதரவுக்கு இலங்கை நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.- இவ்வாறு இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய சீன இராணுவ அதிகாரிகளுடனான சந்திப்பில் தெரிவித்தார்.

தற்போது சீனாவில் மேஜர் ஜெனரல் தரத்திலான 2 அதிகாரிகள் உட்பட 32 இராணுவ அதிகாரிகள் பயிற்சிபெற்று வருகின்றனர். இனி வரும் காலங்களிலும் சீன இராணுவத் தளங்களில் இலங்கை இராணுவத்தினருக்குப் பயிற்சி வழங்கும் திட்டத்தை சீனா அதிகரிக்க வேண்டும் என்றும்

பக் 27

## வாக்காளராகப் பதிவு செய்யாதவர்கள் காரணத்தை விளக்கி கடிதம் எழுதலாம்

உதவித் தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.14

யாழ். மாவட்டத்தில் இதுவரையில் வாக்காளர்களாக பதிவுசெய்யாதவர்கள் தாம் அவ்வாறு பதிவு செய்யாததற்கான காரணத்தை குறிப்பிட்டு நேரடியாகக் கடிதம் மூலம் தனக்குத் தெரியப்படுத்துமாறு யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:

யாழ். மாவட்டத்தில் இதுவரை காலமும் தம்மை வாக்காளர்களாகப் பதிவு செய்யாதவர்கள் ஏன் தம்மால் பதிவு செய்யப்பட முடியாமல் போனது என்பது குறித்து

பக் 27

### ஆனைக்கோட்டையில் ஆயுதங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ.14

ஆனைக்கோட்டை, கூழாவடிப் பகுதியில் வீடொன்றில் இருந்து 60 கிலோ நிறையுடைய 'ரி.என்.ரி' ரக வெடிபொருள் நேற்று மானிப்பாய் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

இது

பக் 04

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்
செய்தி : 021-5678844
விளம்பரம் : 021-5679731
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் இடி மின்னல் ஏற்படக்கூடிய சாத்தியம் உள்ளது.

# பூநகரி மீனவர்களின் வலைகளை அறுத்து நாசமாக்கிய 'ட்றோலர்'கள்

பூநகரி,டிசெ.14

பூநகரிக்கடலில் அப்பகுதி மீனவர் களால் போடப்பட்டிருந்த பெருந்தொகை யான வலைகள் நேற்றுமுன்தினம் இரவு அறுத்து நாசம் செய்யப்பட்டுள்ளதாக மீனவர்கள்கவலையுடன்தெரிவித்தனர்.

இது தொடர்பாக கடற்றொழில் நீரி யல்வளத் திணைக்களத் திடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் பூநகரி இரணைமாதா நகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் தெரிவித்தது.

பூநகரி, இரணைமாதா நகர், குழ முனை ஆகிய பகுதிகளை அண்டிய கடலில் அந்தப் பகுதி மீனவர்கள் நேற்று முன்தினம் இரவு தமது சிறு தொழில் வலைகளைப் போட்டிருந்தனர். இந்த வலைகளே தாம் நேற்று அதிகாரை சென்று பார்த்தபோது மோசமாக அறுக்கப்பட்டுச் சேதப்படுத்தப்படிருந்ததாக அவர்கள் மேலும் கூறினர்.

இதனால் தமது பகுதியைச் சேர்ந்த சுமார் 230இக்கும் மேற்பட்ட மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் தமக்குப் பல இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

குருநகர் பகுதியில் இருந்து நேற்றுமுன்தினம் நள்ளிரவு அப்பகுதியில் தடைசெய்யப்பட்ட மபி வலைகளைப் பயன்படுத்தித் தொழிலில் ஈடுபட்ட 'றோலர்' படகுகளாலேயே இந்த வலைகள் அறுத்துச் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

சேதமாக்கப்பட்ட வலைகள் இப்பகுதி மீனவர்களுக்கு உதவி நிறுவனங்களால் வழங்கப்பட்டவை எனவும், சிலர் கடன் அடிப்படையில் கொள்வனவு செய்தவை எனவும் மேலும் கூறப்பட்டது. (த-6)

# தமிழ் அகதிகளை நாடு கடத்தும் ஆஸியின் முயற்சி தோல்வி

கொழும்பு, டிச.14

ஆஸ்திரேலியாவில் இலங்கைத் தமிழ் அகதி ஒரு வரை நாடு கடத்தும் திட் டத்தை தற்காலிகமாக இடை நிறுத்தி வைக்குமாறு அந் நாட்டு நீதிமன்றம் ஒன்று உத்தரவிட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவில் அகதி அந்தஸ்து கோரிய இரு இலங் கைத் தமிழ் அகதிகளை மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்ப ஆஸ்திரேலிய அரசு தீர்மானித்தது.

இந்த நிலையில் நாடு கடத்தப்படுவதை தடுக்கு மாறு தமிழ் அகதி ஒருவர் நீதி மன்றில் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவை நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட ஆஸி. நீதிமன்றம் குறித்த இலங் கைத் தமிழ் அகதி நாடு கடத்தப்படுவ தற்கு இடைக் காலத் தடை விதித்தது.

இந்தநிலையில் நாடுகடத்த தீர்மானிக்கப்பட்ட மற்றைய இலங்கை தமிழ் அகதி இலங்கைக்குதிருப்பி அனுப்பப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. விதுரன் எனப்படும் அந்த நபர் நேற்று முன்தினம் தாக்கல்செய்த மனு நிராகரிக்கப்பட்ட நிலையில் மீண்டும் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதனால் அவரையும் நாடு கடத்தும் திட்டத்திற்கு இடைகாலத் தடை பிறப்பிக்கப்படாலாம் என அறிந்துள்ள அதிகாரிகள் அவரை நாடு கடத்தும் திட்டத்திற்கானஏற்பாடுகளை கைவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சுயாதீன தொலைக்காட்சி ராஜபக்ஷ குடும்ப ஊடகம்

## கயந்த கருணாதிலக்க விமர்சனம்

கொழும்பு, டிசெ.14

தகவல் அறியும் உரிமையும் சுதந்திரமும் சட்டரீதியாக அங்கீகரிக்கப்படவேண்டும். ஆய்வாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் மாணவர்கள் உண்மையான தகவல்களைத் தெரிந்துகொள்ளவும், தெரிவிக்கவும் தடையேற்படுத்தக்கூடாது - என்று ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் கயந்த கருணாதிலக்க நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

வெகுஜன தகவல் தொடர்பாடல் அமைச்சு தொடர்பான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

கயந்தகருணாதிலக்க தொடர்ந்து உரையாற்றும்போது மேலும் கூறியவை வருமாறு:-

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தகவல்அறியும் உரிமை தொடர்பான சட்டமூலம் ஒன்றை கொண்டுவர முன்மொழிந்தபோது அதனை தூக்கி எறிந்துவிட்டீர்கள்.

ஆனால், இப்போது காலத்தின்தேவைஏற்பட்டுள்ளது. எனவே, அரசாவது இந்தச் சட்டவரைவை கொண்டுவரவேண்டும்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை ஜனாதிபதி சொகுசு நாற்காலியில் இருந்து வாசிப்பதை தொலைக்காட்சியில் கண்டோம்.

அதில் கூறப்பட்டுள்ள காணாமற் போனவர்கள் தொடர்பாக அவர் என்ன நடவடிக்கை எடுத்துள்ளார்?

பிரதீப் எக்னெலிகொட உயிருடன் இருப்பதாகக் கூறுகின்றீர்கள். ஆனால், அவர் எந்த நாட்டில் எங்கே இருக்கின்றார் என்பதை தெரியப்படுத்தவேண்டும்.

2011ஆம் ஆண்டில் ஊடகவியலாளர்களுக்குக் கணினி மற்றும் புகைப்படக்கருவிகளை வழங்க 5 கோடி ரூபா ஒதுக்கப்பட்டது. ஆனால், ஒரு புகைப்படக் கருவி கூட வழங்கப்படவில்லை.

ஊடகவியலாளர்கள் இன்று மிகவும் கஷ்டநிலையில் இருக்கின்றனர். வெளியிடங்களிலிருந்து வந்து வாடகை அறையில் தங்கியிருந்து தொழில் புரிகின்றனர். எனவே, ஊடகவியலாளர்களுக்கு என மாடிவீட்டுத் திட்டம் ஒன்றை உருவாக்கவேண்டும்.

சுயாதீன தொலைக்காட்சி சேவை இன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் குடும்பத் தொலைக்காட்சியாக மாறிவிட்டது. அதற்கு ராஜபக்ஷ குடும்பத் தொலைக்காட்சி என்று பெயர் மாற்றினால் மிக நல்லது - என்றார் கயந்த கருணாதிலக்க. (ஒ-சி)

# அரச ஊடகங்கள் பாரபட்சம் தான் எதிரணியினர் கூறுவது சரியானதே

## சபையில் ஏற்றுக்கொண்டார் நாமல்

கொழும்பு, டிசெ.14

அரச ஊடகங்கள் தனிப்பட்ட முறையில் ஆளும்தரப்பு செய்திகளை மட்டும் பிரசுரிக்காமல் எதிர்த்தரப்பினதும், பொது மக்களினதும் தேவையறிந்து நன்மையான செய்திகளைப் பாரபட்சமின்றி பிரசுரிக்கவேண்டும். தனியாக ஜனாதிபதியினதும், அரச தரப்பினரதும் செய்திகளை மட்டும் வெளியிடுவதாலேயே குடும்ப ஊடகம் என்று விமர்சிக்கப்படுகின்றது. இதனை நானும் ஏற்றுக்கொள்கிறேன் - என்று நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதியின் புதல்வருமான நாமல் ராஜபக்ஷ நேற்று நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

வெகுஜன ஊடக, தகவல் தொழில்நுட்ப அமைச்சுகளுக்கானநிதி ஒதுக்கீடுகள்தொடர்பான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி என்ற வகையில் எனது தந்தை பத்து, பதினைந்து நிகழ்வுகளில் கலந்துகொள்கின்றார். அதேபோன்று சபாநாயகரும், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயவும் கலந்துகொள்கின்றனர். இறுதியாக விளையாட்டுச் செய்திகளில் எனது செய்தியையும் வெளியிடுகின்றனர்.

இதனைப் பார்க்கும்போது எதிர்க்கட்சி உறுப்பினர் கயந்த கருணாதிலக்க, 'குடும்ப ஊடகம்' என்று விமர்சிப்பதை நான் ஏற்றுக்கொள்ளவேண்டியுள்ளது.

எதிர்காலத்தில் அரச ஊடகங்கள் இப்படியான ஒரு விமர்சனத்திற்கு இடமளிக்காது நடுநிலையில் செயல்படவேண்டும்.

2005ஆம் ஆண்டுக்குப் பின்னர் தகவல் ஊடகத்துறையில் பெரும் வளர்ச்சி காணப்பட்டுள்ளது. ஊடகவியலாளர்களும் பொறுப்புணர்வுடன் செயல்படவேண்டும். இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் செய்திகளை வெளியிடவேண்டும்.

ஊடகங்கள் இனப்பற்றை ஊட்டவேண்டுமேயன்றி, இனவெறியை, இனக்குரோதத்தைத் தூண்டக்கூடியதாக அறிக்கைகளை வெளியிடக்கூடாது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியதுபோல், ஊடகவியலாளர்கள் வட்டியில்லாக் கடன் வழங்குவதற்கான அனுபவ காலம் 25 வருடம் என்று கட்டுப்படுத்தாமல் 10, 15 வருடங்கள் பணியாற்றியவர்களுக்கும் இந்தக் கடன் வழங்கப்படவேண்டும் என்பதில் உடன்படுகின்றேன். அதனை நானும் முன்மொழிகின்றேன் - என்றார் நாமல் ராஜபக்ஷ. (ஒ-சி)

# இலங்கை இனப்பிரச்சினைக்கு விரைவான நிரந்தர அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும்

## கனேடிய எதிர்க்கட்சியின் பிரையன் ரொப் வலியுறுத்து

ஹொரண்டோ, டிசெ.14

**இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான ஓர் அரசியல் தீர்வை விரைந்து காண வேண்டும் - என்று கனேடிய எதிர்க்கட்சியான புதிய ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த பிரையன் ரொப் தெரிவித்துள்ளார்.**

**ஐக்கிய நாடுகள் சபையின் உலகளாவிய மனிதவுரிமைப் பிரகடனம் விடுக்கப்பட்ட 64 ஆவது ஆண்டு நிறைவுதினத்தை ஒட்டி விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் அதனைத் தெரிவித்துள்ளார்.**

**புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவராக இருந்த தமிழர்களின் நண்பரான அமரர் யக் லேய்டனின் மறைவையடுத்து புதிய ஜனநாயகக் கட்சியின் தலைமைக்குப் போட்டியிடும் முன்னணித் தலைவர்களில் ஒருவர் பிரையன் ரொப்.**

**அவர் விடுத்துள்ள அந்த** அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

ஐக்கிய நாடுகள் சபையின் உலகளாவிய மனிதவுரிமைப் பிரகடனம் விடுக்கப்பட்ட 64 ஆவது ஆண்டு நிறைவுநாளில் மனிதர்களது வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாக இருக்கும் முறைகேடுகள் இன்னமும் அகோரமாகவும் ஏதோ சாதாரணமான ஒரு விடயம் போலவும் இருக்கின்றன.

கனடாவில் வாழும் நாங்கள் உலகம் முழுவதும் அச்சுறுத்தல்களுக்கு உட்பட்டு வாழ்கின்ற சமூகங்கள் பற்றிச் சிந்திக்கவும் எழுதவும் மீண்டும் மீண்டும் முடிந்த மட்டும் உரத்துப் பேசவும் வேண்டிய நேரம் இது.

கடந்த ஆண்டுவரை புதிய ஜனநாயகக் கட்சி சார்பாக யக் லேய்டன் மனிதவுரிமைக்காகக் குரல் கொடுத்தார். புதிய ஜனநாயகக் கட்சி மனிதவுரிமைக்காக பலத்த எதிர்ப்புக்கு மத்தியிலும் எப்போதும் போராடி வரும் கட்சி.

இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு எதிரான மனிதவுரிமை முறைகேடுகள், போர்க் குற்றங்கள் தொடர்பாக ஒரு சுதந்திரமான விசாரணை தேவையென்று கேட்ட யக் லேய்ட்டன் அவர்களது வேண்டுகோளை நான் ஆதரிக்கிறேன்.

இப்படிப் பாதிக்கப்பட்டவர்களது குடும்பங்களைச் சேர்ந்த அநேகர் இன்று புதிய கனேடியர்களாக இருக்கிறார்கள்.

நான் எமது அரசையும் ஏனையோரையும் கேட்டுக் கொள்வது யாதெனில், இலங்கையின் இனப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தர அரசியல் தீர்வைத் தேடுங்கள். மனிதவுரிமை முறைகேடுகள் எங்கு எப்போது நேர்ந்தாலும் அதனைப் பலமாகக் கண்டியுங்கள் என்பதேயாகும். - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-சி)

# நிகழ்வுகள் இன்று

**வாசிப்பு மாத நிகழ்வு**

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் பொதுநூலகத்தின் வாசிப்பு மாத நிறைவு நாள் நிகழ்வு முற்பகல் 10 மணிக்கு சுன்னாகம் பொதுநூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வலி.தெற்கு பிரதேச சபைத் தலைவர் தி.பிரகாஷ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண மேலதிக மாகாணப் கல்விப்பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன் கலந்து கொள்வார். (த-313)

**தியானப் பயிற்சி**

வாழ்க்கையில் சமநிலை பெறுவதற்கான தியானப் பயிற்சி தொடர்பான விளக்கமும் பயிற்சியும் மாலை 5 மணிக்கு நல்லூர் துர்க்கா தேவி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(த-313)

**புகைப்படக் கண்காட்சி**

அலயன்ஸ் பிரான்ஸிஸ் டீ யாழ்ப்பாண நிறுவனத்தால் தண்ணீர் குடப் பெண் என்ற தொனிப் பொருளில் புகைப்படக் கண்காட்சி நிகழ்வு யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப்பீடம், நுண்கலைத் துறையின் கலைக்கூடத் தொகுதியில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப்புகைப்படக் கண்காட்சி தொடர்ந்து நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வரை முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை நடைபெறவுள்ளது.

இப்புகைப்படக் கண்காட்சி நிகழ்வு மேற்படி நிறுவனத்தினர், யாழ்.பல்கலைக்கழகத்தின் கலைப் பீடத்தினர், நுண்கலை வட்ட மாணவர்கள் ஆகியோர் இணைந்து நடத்தவுள்ளனர். (எ)

# வடக்கு மாகாண சபைத் தேர்தலை தமிழ்க் கூட்டமைப்பு தடுக்கவேண்டும்

## யாழ்ப்பாணச் சமூகத்தின் ஒரு சாரார் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.14

வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் இருக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கோரிக்கை விடுத்துள்ளனர் யாழ்ப்பாணச் சமூகத்தின் ஒரு சாரார்.

இது தொடர்பான மகஜர் ஒன்று நேற்று உதயன் விருந்தினர் விடுதியில் வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் மாவை சேனாதிராசாவிடம் கையளிக்கப்பட்டது.

இந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ்த் தேசியத்தினது வாழ்விலும் எதிர்காலத்திலும் அக்கறையுள்ள தமிழ் சிவில் சமூகம் என்ற அடிப்படையில் நாம் பின்வரும் விடயங்களை எமது நாடாளுமன்றப் பிரதிநிதிகளான உங்களது கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறோம்.

1. அரசுடனான பேச்சு அரசியல் தீர்வு தொடர்பிலானது.

அ) பல சுற்றுப்பேச்சுகளின் பின்னர் பேச்சுகளின்போது பேச்சளவில் முன்னேற்றங்கள் ஏற்பட்டிருப்பது போல் தென்பட்டபோதிலும் அரசிடமிருந்து மூன்று முக்கிய விடயங்கள் தொடர்பில் எழுத்து வடிவில் விளக்கம் கிடைக்கப் பெறும் வரை அடுத்தசுற்றுப்பேச்சுக்கான திகதியை நிர்ணயிக்கப் போவதில்லை என்ற தீர்மானத்தை கடந்த ஓகஸ்ட் 4 ஆம் திகதி நீங்கள் எடுத்திருந்தீர்கள். உங்களது அறிக்கையில் அது வரையிலான பேச்சுகளை 'ஏமாற்றும்' தன்மையானவை என வர்ணித்திருந்தீர்கள். இந்நிலைப்பாட்டை த.தே. கூட்டமைப்பு எடுத்திருந்தமை தமிழ் மக்கள் மத்தியில் வரவேற்பைப்பெற்றது என்பதை சிவில் சமூகத்தினர் என்ற வகையில் நாம் அறிந்துள்ளோம்.

இது இவ்வாறிருக்க கடந்த செப்டெம்பர் 14 ஆம் திகதி திடீரென பேச்சுகள் மீள ஆரம்பிக்கப்படும் என்ற அறிவிப்பு தங்களிடமிருந்து வந்தபோது நாம் பெருவியப்படைந்தோம். பேச்சில் மீளக் கலந்து கொள்ளும் உங்களது இந்தத் தீர்மானமானது தங்களது ஓகஸ்ட் 4 திகதியிட்ட அறிக்கையை முற்றிலும் அர்த்தமற்றதாக்கிய செயற்பாடாகவே நாம் கருதுகின்றோம்.

குறிப்பாக ஐ.நா. மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் - அரசுக்கெதிரான சர்வதேச அழுத்தம் அதிகரித்து வந்து கொண்டிருந்த காலப்பகுதியில் - பேச்சில் மீளக் கலந்து கொள்ள சம்மதம் தெரிவித்த தங்கள் முடிவானது அரசைக் காப்பாற்றும் விதத்தில் அமைந்து விட்டது என நியாயமான விமர்சனம் ஒன்று முன்வைக்கப்படுகின்றது. இதற்கான விளக்கத்தை தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டியது தங்களது தார்மீகக் கடமையாகும்.

அண்மையில் டிசம்பர் முதலாம் திகதி நடைபெற்ற பேச்சைத் தொடர்ந்து நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு த.தே.கூட்டமைப்பு பெயர்களைப் பிரேரிக்கத் தவறியமையால் பேச்சில் விரிசல் நிலை அடைந்திருக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், தொடர்ந்து பேச்சுகள் டிசம்பர் 6 அன்று இடம்பெற்றன. வடக்குக் கிழக்கு இணைப்பு, பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் தொடர்பில் அரசு தமது நிலைப்பாட்டில் விடாப்பிடியாக நிற்பதாகக் கூறப்படுகின்றது. இவை மூன்றும் மறுக்கப்படின் தொடர்ந்து பேசுவதில் அர்த்தமில்லை. பேச்சுகளில் உண்மையில் என்ன நடைபெறுகின்றது என்பது தொடர்பிலான விளக்கத்தை தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டியது தங்களது கடமையாகும்.

ஆ) டில்லியில் கடந்த ஓகஸ்ட் 23 மற்றும் 24 திகதிகளில் இந்திய காங்கிரஸ் உறுப்பினர் சுதர்சன நாச்சியப்பனால் கூட்டப்பட்ட தமிழ் கட்சிகள் மகாநாட்டில் 'தேசியம்', 'சுயநிர்ணயம்' என்ற வார்த்தைப் பிரயோகங்கள் உள்ளடங்கிய தீர்மானமொன்றில் த.தே.கூட்டமைப்பு சார்பில் பங்குபற்றிய அதன் ஆரம்பகால அங்கத்துவ கட்சிகளின் உறுப்பினர்கள் கையெழுத்திட மறுத்தமை எமக்குப் பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியது.

கருத்தொருமிப்பு ஏற்படாததால் கையெழுத்திடவில்லை என்ற விளக்கம் எந்த வகையிலும் ஏற்புடைத்தன்று. இந்த வார்த்தைப் பிரயோகங்கள் உள்ளடக்கப்படுவதை எதிர்த்த தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் புளொட் போன்ற அமைப்புகள் த.தே.கூட்டமைப்பில் அண்மைக்காலத்தில் தம்மை இணைத்துக் கொண்டவர்கள்.

(இந்த வார்த்தைப் பிரயோகங்களை எதிர்த்த மற்றைய இரு உதிரிக் கட்சிகள் ஈ.பி.ஆர்.எல்.எவ். (பத்மநாபா அணியும்) ஈ.என்.டி.எல்.எவ்வும்)

மேற்சொன்ன தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் புளொட் ஆகிய கட்சிகளை அண்மைக்காலத்தில் உள்வாங்கி, கடந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் நீங்கள் போட்டியிட்டமை யாவரும் அறிந்தது.

த.தே.கூட்டணியின் கொள்கைகளுக்கு எதிராக அவர்கள் செயற்படுமிடத்து த.தே.கூட்டணியின் அடிப்படை அரசியற்கோட்பாடுகளுக்கு உட்பட வேண்டிய கடப்பாட்டை அவர்களுக்கு நீங்கள் இடித்துரைத்திருக்க வேண்டும் அல்லது அவர்களது நிலைப்பாட்டுக்கான விளக்கத்தை கேட்டிருக்க வேண்டும்.

த.தே.கூட்டணி அவ்வாறான வலியுறுத்தலை மேற்கொள்ளாமல் போனதை அல்லது அவர்களின் விளக்கத்தை கோராதுவிட்டதை அவர்களது கொள்கை நிலைப்பாட்டை நீங்களும் - த.தே.கூட்டணியும் ஒப்புக் கொள்வதான சமிக்ஞையாகவே கருத வேண்டியுள்ளது.

இலக்கற்ற ஒற்றுமை என்பதில் அர்த்தமில்லை. தமிழ் அரசியல் கட்சிகளுக்கிடையிலான ஒற்றுமை என்பது தமிழ்த் தேசிய அரசியலுக்குத் துணை செய்வதாக, வலிமை சேர்ப்பதாக இருக்க வேண்டும். அதனை அழிப்பதற்கான ஒற்றுமையில் பயனேதுமில்லை.

இ) த.தே.கூட்டணியினது அரசியல் தீர்வு தொடர்பான நிலைப்பாடு தொடர்பாக, அரசோடு பேச்சுகளில் கலந்துகொள்கின்றவர்களும் கட்சியின் பிரதான சர்வதேச தொடர்பாளர்களுமாகிய சம்பந்தன், சுமந்திரன் ஆகியோரும் செய்து வருகின்ற பொது வெளிப்படுத்தல்கள் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளிலிருந்து முரண்படுவதை நாம் அவதானித்து வருகின்றோம்.

தீர்வு 'தேசியம்', 'சுயநிர்ணயம்' என்ற அடிப்படைகளிலன்றி தமிழர்கள் சிறுபான்மையினர், சம உரிமைகள் தேவை என்ற அடிப்படையிலேயே முன்வைக்கப்படுவதாக மீளவும் மீளவும் தெரிவிக்கப்படுகின்றது.

(உதாரணமாக, சுமந்திரனால் ஏப்ரல் 26ஆம் திகதி வழங்கப்பட்ட அமரர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் நினைவுப்பேருரை, சம்பந்தனது 04 ஒக்டோபர் 2011 திகதியிட்ட கல்முனை மாநகரசபைத் தேர்தலை ஒட்டிய அறிக்கை போன்றவை)

சிறுபான்மையினங்கள் கோரி நிற்பது மொழி மற்றும் கலாசார உரிமைகளையே. தம்மை ஒரு தேசமாகக் கருதுகின்ற மக்களைக் கொண்ட ஒரு தேசிய இனத்துக்கே தன்னாட்சி உரிமைகளை தமக்கிருக்கும் சுயநிர்ணயத்திற்கான உரிமையின் அடிப்படையில் கேட்கும் உரிமை உள்ளது.

தமிழர்களாகிய நாம் எம்மை ஒரு தேசமாகக் கருதியே எமக்குரித்தான சுயநிர்ணயத்திற்கான உரிமையின் அடிப்படையில் சுயாட்சியை கோருகின்றோம்.

அதேபோன்று சமவுரிமைகளைக் கேட்பதானது சுயாட்சியைக் கேட்பதாகாது. சட்டத்தின் ஆட்சியும், நல்லாட்சியும் பூர்த்தி செய்யப்படும் ஒரு நாட்டில் சகலரதும் 'சமவுரிமைகள்' பாதுகாக்கப்படும். தமிழர்களது பிரச்சினைகள் வெறுமனே சட்டத்தின் ஆட்சியை உறுதி செய்வதினூடாக தீர்க்கப்பட முடியாதவை.

சுயாட்சியைப் பெற்றுக் கொள்வதினூடாகவே எமது அரசியற்பிரச்சினைகள் தீர்க்கப்படலாம்.

தொடர்ந்து வந்த ஆட்சியாளர்களின் செயற்பாடுகளினால் ஏற்பட்ட பட்டறிவின் பயனாகவே எமது முன்னைய தலைவர்களும் மக்களும் ஈற்றில் 1976இலும் 1977இலும் தமிழ்த்தேசம், சுயநிர்ணய உரிமை, சுயாட்சி என்ற அரசியல் கோட்பாடுகளை தமது அரசியல் அபிலாசைகளாகக் கொள்ளும் நிலைப்பாட்டை வந்தடைந்தனர்.

பின்னர் வந்த எமது 30 வருட வாழ்வும், அரசியல் வரலாறும் இந்த அடிப்படையிலேயே இயங்கியது. இப்போது ஒருசிலருக்கு ஏற்புடையதாக இல்லை என்பதற்காக இந்த அடிப்படைகளை விட்டுவிட்டோ, அல்லது மறைத்தோ எமது அரசியல் பயணத்தை நாம் தொடரமுடியாது.

தேசியம், சுயநிர்ணயம் என்று கூறுவதன் மூலம் தனிநாட்டைக் கோருவதாகப் பொருள் கொள்ள வேண்டிய அவசியமில்லை. இந்த அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதற்குரிய நிறுவன ரீதியான ஏற்பாடுகள் தொடர்பாக நாம் பேச்சு மேசையில் பேசித் தீர்மானித்துக் கொள்ளலாம்.

ஆனால் தேசியம், சுயநிர்ணயம் என்ற அடிப்படையிலான ஒரு தீர்வுக்கு நாம் செல்லத் தவறுவோமாயின் நாம் உண்மையான சுயாட்சியைப் பெற்றுக் கொள்ள முடியாததாகிவிடும். இந்த அடிப்படைகளை ஏற்றுக்கொள்ளாத, உள்ளடக்காத எந்த ஒரு அரசியல் தீர்விலும் பிரயோசனம் இல்லை. மாறாக இந்த அடிப்படைகளை ஏற்றுக் கொள்கின்ற தீர்வு மட்டுமே நீடித்து நிலைக்கக் கூடிய ஓர் அரசியல் தீர்வைத் தருவதோடு, இத்தீவின் இனங்களுக்கிடையில் நீடித்து நிலைக்கக்கூடிய நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும், வெளியார் தலையீட்டுக்கான தேவையையும் இல்லாமல் செய்யும்.

தமிழர் ஒரு தேசிய இனம், தமிழர் ஒரு தேசம், எமக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்ற அரசியல் நிலைப்பாட்டை நாம் எடுத்தமையில் எந்தத் தவறும் இல்லை என்ற மனவுறுதி உங்களிடத் தில் எப்போதும் வெளிப்பட வேண்டும்.

இத்தகைய மனவுறுதி உள்ளவர்கள்தான் தமிழர் சார்பில் பேச வேண்டும். பேச முடியும். தனியே இவற்றை கோஷங்களாக முன்வைப்பதனூடாக நாம் இந்த இலக்கை அடைந்து கொள்ள முடியாது என்பது உண்மையே. அரசியல் உபாயங்கள் மிகவும் அவசியம். ஆனால் அரசியல் உபாயங்களுக்காக எமது இந்த அரசியல் அடிப்படைகளை, அபிலாஷைகளை விட்டுக் கொடுத்து விட முடியாது. இவை பேரம் பேசும் பொருட்களல்ல. விட்டுக் கொடுப்போமெனின் எதற்காக நாம்அரசியல் செய்கின்றோம் என்ற கேள்விக்கு மக்களுக்கு விடை கூற வேண்டியிருக்கும்.

2. மாகாண சபைத் தேர்தல் தொடர்பானது.

எதிர்வரும் 2012 இல் வடக்கு மாகாணசபைத் தேர்தல் நடைபெறவிருப்பதாக அரச தரப்பில் கூறப்பட்டு வருகின்றது. இத்தேர்தலை த.தே.கூட்டணி சந்திக்குமானால் அதில் அமோக வெற்றி பெறும் என்பதில் எமக்கு சந்தேகமில்லை. ஆனால், இதனையே அரசும் விரும்புகின்றது என்பதில் உள்ள சூட்சுமத்தை விளங்கிக் கொள்ள வேண்டும்.

இலங்கையின் அரசியல் யாப்பின் ஓரங்கமான 13ஆம் திருத்தத்தின் நடைமுறை வடிவத்திற்கப்பால் எவற்றையுமே தீர்வு தொடர்பில் கருத்தில் கொள்ள விரும்பாத அரசு, 13ஆம் திருத்தத்தை ஏற்க மாட்டோம் என்ற தேர்தல் விஞ்ஞாபனத்தின் அடிப்படையில் மக்களிடமிருந்து ஆணை பெற்ற த.தே.கூட்டணியை மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட வைத்து அத்தேர்தலில்அது வெற்றி பெறுவதையும் விரும்புகின்றதென்றால் அதற்கான உள்நோக்கம் பூடகமானதல்ல.

மாகாண சபை முறைமையினை தழிழர்கள் ஒரு தீர்வாக ஏற்றுக் கொண்டுவிட்டதாகப் பிரசாரம் செய்வதற்காகவே அரசு இதனை முயற்சிக்கின்றது.

அமெரிக்க, இந்திய அரசுகளும் 13ஆவது திருத்தத்தை தீர்விற்கான ஆரம்பப்புள்ளியாக ஏற்றுக் கொள்ளுமாறு வலியுறுத்துவதிலிருந்து இவ்வரையறைக்கப்பால் செல்லுவதை அவர்கள் விரும்பவில்லை என்பதைச் சுட்டுவதாக கருத முடியும்.

ஆகவே, மாகாண ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் இன்னும் மேலதிகமாக கேட்டு வாங்கலாம் என்ற உபாயம் ஆபத்தானது. 13 ஆவது திருத்தம் என்ற வரையறைக்குள்ளிருந்து ஓர் எல்லைக்கப்பால் பிரயாணிக்க முடியாது என்பதை சட்ட அறிஞர்கள் பலரை உங்கள் மத்தியில் வைத்திருக்கின்ற உங்களுக்கு நாங்கள் சொல்ல வேண்டியதில்லை.

கட்டம் கட்டமாக அரசியல் தீர்வைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற சிந்தனையும் மேற்சொன்ன காரணங்களுக்காக சாத்தியப்படாது. 13ஆவது திருத்தத்தை அல்லது அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் சில திருத்தங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு தீர்வுப் பொதியை இடைக்காலத் தீர்வாகக் கருதவும் முடியாது. மக்களுடைய அன்றாடப் பிரச்சினைகளுக்குக் கூடத் தீர்வுகளைத் தர முடியாத இவ்வகை இடைக்காலத் தீர்வுகளால் எந்தப் பயனும் இல்லை.

இவ்வ எல்லாவற்றிற்கும் மேலதிகமாக பிரிந்த வடக்குக் கிழக்கில் த.தே.கூட்டமைப்பு போட்டியிடுவதனால் ஏற்படக் கூடிய அரசியல் அபத்தத்தையும் மனதில் கொள்ள வேண்டியுள்ளது. வடக்குக் கிழக்கு இணைப்பு என்பது ஒருபோதும் விட்டுக் கொடுக்கப்பட முடியாதது, பேச்சுக்கு உட்படுத்த முடியாதது.

இதை த.தே.கூட்டமைப்பு இந்திய, அமெரிக்க அரசுகளுக்கு வலியுறுத்த வேண்டுமே அன்றி, இந்த அழுத்தங்களுக்குப் பயந்து தமிழ்த் தேசத்தின் ஒட்டுமொத்த அரசியல் எதிர்காலத்தை மீள முடியா பாழுக்குள் தள்ளக்கூடாது.

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல்கள் எமது அரசியல் தீர்வு தொடர்பில் நாம் முன்நோக்கி நகர்வதற்கு ஒரு பெரும் தடைக்கல்லாக அமையும். மேலும் குறிப்பாகச் சொல்லுவதாயின் மாகாண சபையை த.தே.கூட்டமைப்பு கைப்பற்றும் தருவாய் என்பது எமது நீண்ட அரசியல் பயணத்தின் அவல முடிவாக அமைந்து விடும்.

அத்தகைய நிகழ்வு ஈற்றில் முற்றுமுழுதான அரசியல் முள்ளிவாய்க்காலா கவும் அமைந்து விடும். இது நடைபெ றாமல் தடுக்கும் வரலாற்றுக்கடமை த.தே. கூட்டமைப்பிடமே இன்று உள்ளது.

பேச்சுகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகச் சொல்லப்படும் இந்தத் தறுவாயில் மாகாண சபைத் தேர்தலுக்கான அறிவிப்பு பொருத்தமற்றது எனவும் தேவையற்றதெனவும் த.தே.கூட்டமைப்பு நிலைப்பாடெடுக்கவும் அதை பேச்சு மேசையிலும் சர்வதேசத்திடமும் வலியுறுத்தவும் தேவையான நியாயப்பாடு த.தே.கூட்டமைப்பிடம் உள்ளது.

அதேபோல், இன்னுமொரு தேர்தலில் தமிழ் மக்களின் ஆணையைப் பெற்றுத்தான் த.தே.கூட்டமைப்பு தமிழ் மக்களின் அபிலாஷைகளை அரசுக்கும் உலகுக்கும் அறிவிக்க வேண்டுமென்றுமில்லை.

அரசு இதனை மீறி தேர்தல்களை நடத்துமாயின் தேர்தலில் த. தே. கூட்டமைப்பு நேரடியாகப் பங்கெடுக்கக் கூடாது. மாறாக, தமிழ்த் தேசிய விரோத சக்திகள் அல்லது அரச சார்பு சக்திகள் மாகாண சபையைக் கைப்பற்றுவதைத் தடுக்க நாம் வேறு மாற்று உபாயங்கள் தொடர்பில் சிந்திக்கலாம். இவை தொடர் பில் த.தே. கூட்டமைப்பு மக்களோடு கலந்தாலோசிக்க வேண்டும்.

தேர்தல் அரசியலுக்கப்பால் ஓர் அரசியல் விடுதலை இயக்கமாக செயற்பட வேண்டும் என்ற நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட ஓர் இயக்கமாகவே தமிழ் மக்கள் த.தே.கூட்டமைப்பைக் கருதுகின்றார்கள். இந்தக் குறிக்கோளின் அடிப்படையில் த.தேகூட்டமைப்பு தொடர்ந்து செயற்படும் என்ற நம்பிக்கையிலேயே தமிழ் மக்கள் தொடர்ந்து வந்த சகல தேர்தல்களிலும் த.தே. கூட்டமைப்புக்கு தமது ஆணையை வழங்கி வருகிறார்கள்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தருணத்தில் இந்த விண்ணப்பத்தை, எமது தேசத்தின் ஆன்ம வெளிப்பாடாக உங்களிடத்து முன்வைக்கின்றோம்.

இலட்சக் கணக்கில் மரணித்த எம்மக்களினது எதிர்பார்ப்பும் இதுவே. தொடர்ச்சியான ஒடுக்கு முறைக்குட்பட்டிருக்கும் எமது மக்களின் அவாவும் இதுவே. ஒரு கௌரவமான, நீடித்து நிலக்கக்கூடிய, அரசியல் தீர்வொன்றை அடைய சரியான முடிவை மக்களின் அபிலாசைகளுக்கமைவாக எடுப்பீர்கள் என்ற நம்பிக்கையில் நிறைவு செய்கின்றோம் - என்றுள்ளது.

### அறிக்கையில் கையெழுத்திட்டோர் விவரம்

அதி வணக்கத்துக்குரிய கலாநிதி. இராயப்பு ஜோசப், மன்னார் கத்தோலிக்கப் பேராயர்.

கலாநிதி. ஆறு. திருமுருகன்.
தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை
நிறுவுனர், சிவபூமி அறக்கட்டளை, யாழ்ப்பாணம்

செல்வி சாந்தா அபிமன்னசிங்கம்
ஜனாதிபதி சட்டத்தரணி, யாழ்ப்பாணம்.

வைத்திய கலாநிதி ச. ரவிராஜ்
சத்திரசிகிச்சை நிபுணர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.
தலைவர், யாழ் மருத்துவ சங்கம்.

பேராசிரியர். க. கந்தசாமி
விஞ்ஞான பீடாதிபதி
யாழ் பல்கலைக்கழகம்.

பேராசிரியர். இ. விக்கினேஸ்வரன்,
கணித, புள்ளிவிபரவியற்றுறைப் பேராசிரியர்,
தலைவர், யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்.

பேராசிரியர். ப. புஸ்பரட்ணம்
தலைவர், வரலாற்றுத்துறை,
யாழ் பல்கலைக்கழகம்.

திரு. தி. இராஜன்
மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக ஆர்வலர்கள் கூட்டமைப்பு

கலாநிதி. ஆ. ச. குசை.
புவியியற்றுறை, யாழ் பல்கலைக்கழகம்

திரு. க. ச. இரத்தினவேல்
சிரேஷ்ட சட்டத்தரணி, கொழும்பு.
நிறைவேற்றுப் பணிப்பாளர்,
மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையம்.

வைத்திய கலாநிதி. (திருமதி). சி. உதயகுமார்.
பொது வைத்திய நிபுணர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

வைத்திய கலாநிதி. சி. சிவன்சுதன்.
பொது வைத்திய நிபுணர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

திரு. அ. பஞ்சலிங்கம்
ஓய்வு பெற்ற அதிபர்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி/கொக்குவில் இந்துக் கல்லூரி

திருமதி. நாச்சியார் செல்வநாயகம்,
சிரேஷ்ட விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை,
யாழ் பல்கலைக்கழகம்.

வைத்திய கலாநிதி. சி. குமாரவேள்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

திரு. அ. இராசகுமாரன்,
விரிவுரையாளர், ஆங்கில மொழிப் போதனை நிலையம்
செயலாளர், யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்.

வைத்திய கலாநிதி. செ. கண்ணதாசன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
நோயியற்றுறைத் துறை, மருத்துவ பீடம்,
யாழ் பல்கலைக்கழகம்

திரு. நா. இன்பநாயகம்
தலைவர், கிராமிய உழைப்பாளர் சங்கம்

வைத்திய கலாநிதி. ச. பகீரதன்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

வைத்திய கலாநிதி. ஏ. கமலநாதன்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

திரு. வே. அரசரட்ணம்
முன்னாள் கூட்டுறவு உதவி ஆணையாளர்
அம்பாறைத் தமிழர் மகா சபை

திரு. பொ. தியாகராஜா
முன்னாள் தலைவர், பரந்தன் இரசாயனப் பொருட்கள் கூட்டுத்தாபனம்.

திரு. து. இராமகிருஷ்ணன்
முன்னாள் தொழில்நுட்ப உத்தியோகஸ்தர்
அம்பாறைத் தமிழர் மகா சபை

திரு. சு. தவபாலசிங்கம்,
தலைவர், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்
யாழ் பல்கலைக்கழகம்.

திரு. எஸ். கிருபாகரன்
தலைவர், கலைப்பீட மாணவர் ஒன்றியம்
யாழ் பல்கலைக்கழகம்.

திரு. எஸ். சிவசொருபன்
தலைவர், வணிக பீட மாணவர் ஒன்றியம்
யாழ் பல்கலைக்கழகம்.

திரு. ஏ. பிரசன்னா
தலைவர், விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம்,
யாழ் பல்கலைக்கழகம்.

திரு. செ. ஜனகன்
தலைவர், மருத்துவ பீட மாணவர் ஒன்றியம்,
யாழ் பல்கலைக்கழகம்.

திரு. அ. றொ. மதியழகு
தலைவர், மாதகல் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்

திருமதி. ஆ. மரியம்மா ஜெயமணி
மாதகல் மேற்கு மகளிர் அபிவிருத்திச் சங்கம்

திரு. க. செல்வரட்ணம்
தலைவர், பண்டத்தரிப்பு ப.நோ.கூ. சங்கம்

திரு. கி. பவளகேசன்
மட்டக்களப்பு மாவட்ட கல்வி அபிவிருத்தி அமைப்பு

வணபிதா. எஸ். ஜெயபாலன் குருஸ்
பங்குத் தந்தை, வங்காலை, மன்னார்.

வைத்திய கலாநிதி. எஸ். சிவதாசன்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

திருமதி. ம. தயாளினி
மட்டக்களப்பு மாவட்ட பெண்கள் அபிவிருத்தி அமைப்பு

வைத்திய கலாநிதி. அ. யோ. தனேந்திரன்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

திரு. எஸ். ஜெபசேகரம்
வணிக சங்கத் தலைவர், யாழ்ப்பாணம்

நல்லைக் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்
யாழ்ப்பாணம்

அதி வணக்கத்துக்குரிய கலாநிதி. எஸ். ஜெபநேசன்
முன்னாள் தென்னிந்தியத் திருச்சபைப் பேராயர்.

பேராசிரியர். சி.க. சிற்றம்பலம்
ஓய்வுநிலைத் தகைசால் வரலாற்றுப் பேராசிரியர்,
முன்னாள் பீடாதிபதி, பட்டப்பின் படிப்புகளுக்கான பீடம், யாழ் பல்கலைக்கழகம்.

பேராசிரியர். இ. குமாரவடிவேல்
சிரேஷ்ட பௌதிகவியல் பேராசிரியர்,
முன்னாள் பதில் துணைவேந்தர்,
யாழ் பல்கலைக்கழகம்.

பேராசிரியர். வி.பி. சிவநாதன்,
தலைவர், பொருளியற்றுறை, யாழ் பல்கலைக்கழகம்.
தலைவர், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்.

திரு. க. சூரியகுமாரன்
யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனப் பிரதிநிதி, வடமராட்சி வடக்கு க. தொ. கூ. சங்க சமாசப் பிரதிநிதி

வணபிதா. கி. ஜெயக்குமார்,
பங்குத் தந்தை, ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம்

திரு. எஸ். அரசரட்ணம்
முன்னாள் வங்கியாளர்
அம்பாறைத் தமிழர் மகா சபை

கலாநிதி. து. குணராஜசிங்கம்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
உடற்றொழியல் துறை,
மருத்துவ பீடம், யாழ் பல்கலைக்கழகம்

வைத்திய கலாநிதி. க. பிரேமகிருஷ்ணா
உணர்வழியியல் வைத்திய நிபுணர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

வைத்திய கலாநிதி. பூ. லக்ஷ்மன்
இருதய நோய் சிகிச்சை நிபுணர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

வணபிதா. இ. இரவிச்சந்திரன்
இயக்குநர், யாழ் மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழு, யாழ்ப்பாணம்

திரு. கா. சந்திரலிங்கம்
ஓய்வு பெற்ற அதிபர்
அம்பாறைத் தமிழர் மகா சபை

திரு. சி. அ. ஜோதிலிங்கம்
சட்டத்தரணி, அரசியல் ஆய்வாளர்,
பாடசாலை ஆசிரியர்

திரு. வி. புவிதரன்,
சிரேஷ்ட சட்டத்தரணி, கொழும்பு

திரு. பி.நி. தம்பு
சிரேஷ்ட சட்டத்தரணி, கொழும்பு

திரு. கு. குருபரன்
விரிவுரையாளர், சட்டத்துறை
யாழ் பல்கலைக்கழகம், சட்டத்தரணி

வைத்திய கலாநிதி. கே. [illegible]
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

வைத்திய கலாநிதி. க. சுரேஸ்குமார்
பெண்ணியல் மற்றும் மகப்பேற்று சிகிச்சை நிபுணர், போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

வைத்திய கலாநிதி. [illegible]
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

வைத்திய கலாநிதி. ப. நந்தகுமார்
சுகாதார வைத்திய அதிகாரி, தெல்லிப்பளை

வைத்திய கலாநிதி. சு. மோகனகுமார்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

திரு. ஜே. தோ. சிம்சன்
ஆசிரியர், மன்னார்.

வணபிதா. எஸ். எம். பி. ஆனந்தகுமார்
செயலாளர், யாழ் மறைமாவட்ட குருக்கள்மார் ஒன்றியம்.

வைத்திய கலாநிதி. ம. வாசுதேவன்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

திரு. கி. சேயோன்
மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் தன்னார்வலர்கள் அமைப்பு

திரு. ஜி. ரஞ்சித்குமார்
மட்டக்களப்பு மாவட்ட மீனவர் அபிவிருத்தி அமைப்பு

திரு. ச. அ. பிலிப் மோய்
ஆசிரியர், யாழ்ப்பாணம்

திரு. த. நிஷாந்தன்
மட்டக்களப்பு மாவட்ட விவசாய அபிவிருத்தி அமைப்பு

திரு. அ. சிற்றம்பலம்
தலைவர், மாதகல் விவசாய சம்மேளனம்

திரு. க. சவுந்தரநாயகம்
தலைவர், தூய அந்தோனியார் கடற்றொழிலாளர் சங்கம்

திரு. க. அருமைதுரை
தலைவர், தூய [illegible] கடற்றொழிலாளர் சங்கம்

திரு. ஆர். ஜோன்பிள்ளை
நானாட்டான்

வணபிதா. அ. அகஸ்ரின்
பங்குத் தந்தை, சக்கோட்டை, யாழ்ப்பாணம்

வணபிதா. அகஸ்ரின் புஸ்பராஜ்
பங்குத் தந்தை, நானாட்டான், மன்னார்

வணபிதா. எல். ஞானதிக்கம்
பங்குத் தந்தை, வஞ்சியன்குளம்

திரு. க. சுகாஷ்
சட்டத்தரணி, யாழ்ப்பாணம்.

திரு. தி. அர்ச்சுனா
சட்டத்தரணி, யாழ்ப்பாணம்.

திரு. அ. சந்தியாப்பிள்ளை
நீதி சமாதானப் பகுதி
யாழ் மறைமாவட்ட கத்தோலிக்கப் பொதுநிலையினர் கழகம்

# ஊடகவியலாளர்களுக்கு வட்டியில்லாக் கடன் வழங்காமல் கடத்தலுக்குப் பயன்படும் வெள்ளைவான்காரருக்கு வழங்கலாம்

கொழும்பு, டிசெ.14

''இப்பொழுது அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் ஊடகங்கள் 'கறுப்பு-செம்பட்டை நாய் விற்பனைக்குண்டு' என்றும் சிவந்த வெள்ளை பெண்ணுக்கு மணமகன் தேவை' என்றும் விளம்பரம் செய்து பிழைக்கும் கேவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. ஊடகங்கள் எல்லாமே இன்று அரசின் ஊதுகுழல்களாகவே செயல்படுகின்றன- இவ்வாறு விமர்சித்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான கயந்த கருணதிலக்க.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற தகவல் ஊடகத்துறை அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த காலங்களில் இந்த ஊடக நிறுவனங்களின் தமிழ், சிங்கள, ஆங்கில ஏடுகள் அனைவராலும் விரும்பிப் படிக்கக் கூடியதாகவும் விற்பனையில் அதியுயர்நிலையிலும் இருந்தன.

ஆனால் இப்போது அந்த நிறுவனங்கள் அச்சிடும் பத்திரிகைகள் கடைக்குச் சென்ற அதே நேரத்திலேயே திரும்பி வருகின்றன. இதனால் பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளது.

இதனை ஈடுசெய்ய நாய் விற்பனை, மணமகன் தேவை போன்ற விளம்பரங்களைப் பிரசுரித்தே பணம் தேடவேண்டிய நிலை அவற்றுக்கு ஏற்பட்டுள்ளது- என்றும் கருணதிலக்க கிண்டல் அடித்தார்.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது.

### நாடாளுமன்ற உறுப்பினரின் தகவல் அறியும் உரிமை மறுக்கப்படக்கூடாது.

சபை கூடிய போது ஜே.வி.பி உறுப்பினர் அஜித் குமார சிறப்புரிமை பிரச்சினை ஒன்றை முன் வைத்தார். ''பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு விட்டது. யுத்தம் முடிந்து 30 மாதங்கள் கடந்து விட்டன. வடக்கு கிழக்கு உட்பட சகல பகுதிகளிலும் சிவில் நிர்வாகம் பலப்படுத்தப்பட்டுள்ளது. எவரும் எந்த பகுதிக்கும் சென்று வரமுடியும். சுதந்திரமாக செல்லலாம்; தடையில்லை என்று அரசு பீற்றுகின்றது.

ஆனால் நாடாளுமன்ற உறுப்பினர்களான எங்களுக்கே வட பகுதியில் சில இடங்களுக்குச் செல்ல முடியவில்லை, மீள்குடியேற்றம், கைதிகள் விடுவிப்பு, புனர்வாழ்வு நடவடிக்கைகள் தொடர்பாக நேரில் சென்றுமக்களைச் சந்திக்க முடியவில்லை.

முறைப்படி பாதுகாப்பு அமைச்சு படைத்தளபதி மற்றும் பொலிஸாருக்கும் அறிவித்து விட்டே அங்கு நாம் சென்றோம்.

ஆனால் இராணுவத்தினர் என்னையும் என்னுடன் வந்தவர்களையும் அந்தப் பிரதேசங்களுக்குச் செல்லவோ மக்களைச் சந்திக்கவே அனுமதிக்கவில்லை. அப்டியானால் வடக்கில் இப்பொழுதும் இராணுவ ஆட்சிதான் நடக்கிறதா? இராணுவத்தினரின் அடாவடித்தனமும் அராஜக நடவடிக்கைகளும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரான எனது தனிமனித சுதந்திரத்தையும் அடிப்படை உரிமைகளையும் மீறுகின்ற ஒரு செயலாகும். எனவே சபாநாயகர் இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அஜித் குமார தனது சிறப்புரிமை பிரச்சினையை முன் வைத்தார்.

### சபாநாயகரின் அனுதாபம்

இதனை மிகவும் அவதானமாகக் கேட்ட சபாநாயகர் ''இராணுவமோ பொலிஸாரோ நாடாளுமன்றஉறுப்பினர்ஒருவரின், ஆளும் தரப்பையோ எதிர் தரப்பையோ சேர்ந்தவராயினும் அவரது சிறப்புரிமைகளில் தலையிட முடியாது.

இந்த விடயத்தில் அவர்கள் நடந்து கொண்ட விதம் கண்டிக்கத்தக்கது. இதனை பொலிஸ் மா அதிபரின் கவனத்துக்கு கொண்டு வந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்'' என்றும் கூறினார்.

### விவசாயிகள் போராட்டம் பிளாஸ்டிக் கூடைகள் விவகாரம்

''பழவகைகளையும் மரக்கறிவகைகளையும் பிளாஸ்டிக் கொள்கலன்களில் மட்டுமே பொதி செய்யப்பட்ட வேண்டும் என அரசாங்கம் கட்டாயப்படுத்தியுள்ளது. இதனை ஆட்சேபித்து விவசாயிகளும்,வர்த்தகர்களும் போராட்டங்களை நடத்துகின்றனர்.எனவே இந்தவிடயத்தை சிறிது காலத்துக்குப் பிற்போட வேண்டும்'' என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சபையிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்தார்.

### பரிசீலனை செய்யப்படும் என்கிறார் அமைச்சர்

''எதிர்க்கட்சித்தலைவர் கூறிய விடயங்களை நாம் மீள் பரிசீலனை செய்வோம். அதே வேளை மரக்கறி மற்றும் பழவகைகளை சாக்குகளில் பொதி செய்து நீண்ட தூரம் எடுத்துச் செல்லும் போது அவை பழுதடைந்து விடுகின்றன. இதனால் விவசாயிகளுக்கும் வியாபாரிகளுக்கும் தான் நட்டம் ஏற்படுகின்றது.

இதன் காரணமாகவே பிளாஸ்டிக் கூடைகளில் பொதி செய்யும் முறையைக் கட்டாயப்படுத்தி உள்ளோம். இதனால் ஏற்படும் நன்மைகள் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது என்று நான் நம்புகின்றேன். எனினும் இந்த விடயத்தை சிறிது காலம் பிற்போடுவது தொடர்பாக'' மீள் பரிசீலனை செய்வோம் என்றார் அமைச்சர் தினேஸ் குணவர்த்தன.

### நாமல் ராஜபக்ஷவின் நடுநிலைப் பேச்சு

இவ்வளவு காரசாரமான கருத்து இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளையிலும் அதனை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ அமைதியாகவே கேட்டுக் கொண்டிருந்தார். இத்தகைய ஆரவாரங்கள் அடங்கிய பின் நாமல் ராஜபக்ஷ பேசுவதற்கான சந்தர்ப்பம் வந்தது. தனது குடும்பத்தைப் பற்றி விமர்சிக்கப்பட்டதால் நாமல் ராஜபக்ஷ சூடாகஏதாவது பதில் கொடுப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவரது பேச்சு அதற்கு எதிர்மாறாக இருந்தது. அரச ஊடகங்கள் இப்படிப் பக்கச் சார்பாக நடந்து கொள்வதால்தான் விமர்சனங்களும் எழுகின்றன. எனவே அரச ஊடகங்கள் நடுநிலையாக , பக்கச் சார்பின்றி செயற்பட வேண்டும் என்று நாமல் அமைதியாகக் கூறினார்.

நாமல் ராஜபக்ஷவின் பெருந்தன்மையை சபையில் இருந்தவர்கள் பலரும் பாராட்டினர். தொடர்ந்து பேசிய நாமல் கடந்த ஏழு வருடங்களில் ஊடகத் துறையில் பாரிய அபிவிருத்தி காணப்பட்டுள்ளது.

முன்பு 13 தொலைக்கட்சி சேவைகள் மட்டுமே இருந்தன. இன்று அது 20 ஆக அதிகரித்துள்ளது.30 வானொலிச் சேவைகள் இருந்த நிலை சடுதியாக இன்று 49 சேவையாக உயர்ந்துள்ளது. 126 அச்சுப்பத்திரிக்கைகள் வெளிவந்த நிலையில் இன்று அந்த எண்ணிக்கை 166 ஆக உயர்ந்துள்ளது. என்று சுட்டிக்காட்டினார்.

அரசுக்கெதிரான இணையத் தளங்கள் முடக்கப்பட்டதை அவர் மறுத்தார். ''அவை கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டும் என்பது தான் அரசின் நோக்கம். தாய்லாந்து நாட்டில் அந்த நாட்டின் பாதுகாப்பு கருதி 48 இணையத் தளங்கள் முடக்கப்பட்டுள்ளன. ஆனால் இங்கு அப்படி மோசமான நிலை இல்லையே'' என்றார் நாமல் ராஜபக்ஷ.

### வெள்ளை வான்களுக்கு கடன் வழங்கலாமே

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கேலியும் கிண்டலுமாக ஒரு விடயத்தைக் கூறினார்.

இம் முறை ஊடகவியலாளர்களுக்கு வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு வட்டி இல்லாக் கடன் தருவதாகக் கூறிய உள்ளார். ஆனால் இது நடக்குமா? மாறாக ஊடகவியலாளர்கள் வெள்ளை வான்களில் கடத்தப்படுகின்றனர், காணாமல் போகின்றனர், தாக்கப்படுகின்றனர் எனவே வெள்ளை வான் உள்ளவர்களுக்காகத்தான் கூடுதல் கடன் வழங்கப்பட்டுள்ளது போலும் என்றார்.

### நாமல் ராஜபக்ஷவை அமைச்சராக்குங்கள்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடா




ளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன், நாமல் ராஜபக்ஷவுக்கு பாராட்டுப் பத்திரம் வழங்கினார்.

''நாமல் எந்த விடயத்தையும் யதார்த்தமாகவும் சரியான வழியிலும் சிந்தித்து செயற்படுபவர் இவரைப் போன்றவர்கள் தான் அமைச்சரவையில் இருக்க வேண்டும். எனவே நாமல் ராஜபக்ஷவை ஊடகத்துறை அமைச்சராக நியமிக்க வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

### போர் முடிந்த பின்னரும் ஊடக அச்சுறுத்தல்

''போர் முடிந்து 30 மாதங்கள் கடந்து விட்டன. இனிமேலாவது தமிழ் ஊடகங்கள் தைரியமாக உள்ளதை உள்ளபடி எழுதலாம். கருத்துக்களைச் சுதந்திரமாக வெளியிடலாம் என்று எதிர்பார்த்து இருந்தோம். ஆனால் இன்னும் அச்சுறுத்தல்கள் நீங்கவில்லை. ஜனாதிபதியே ஒரு தமிழ்ப் பத்திரிகையின் ஆசிரியரைச் சந்தித்து ''இன்னும் உங்கள் பத்திரிகை அரசை விமர்சிக்கும் போக்கை மாற்றிக் கொள்ளவில்லைதானே'' என்று கேட்டுள்ளார்.

''இப்படியான நிலையில் எப்படி ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்படும்?'' என்று கேள்வி எழுப்பினார் யாழ். மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் சரவணபவன்.

சரவணபவன் பேசும்போது வழமையாக பெரும்பான்மை உறுப்பினர்கள் தான் இடையூறு செய்வார்கள். ஆனால் நேற்று சபைக்கு தலைமை தாங்கிய குழுக்களின் தலைவர் சந்திரகுமாரும் அடிக்கடி தனது கருத்தையும் கூறிக்கொண்டே இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### ரங்கா-தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மோதல்

விவாதத்தில் உரையாற்றிய ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினரான ஸ்ரீரங்கா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சீண்டிவிட்டார். ''வன்னியில் கூரையில்லாத வீடுகளில் மக்கள் தவிக்கும் போது அந்த மக்களின் பிரதிநிதிகள் கொழும்பில் கிரிக்கெட் ஆடுகின்றனர்; சடுகுடு விளையாடுவதனால் மட்டும் தமிழர்களின் பிரச்சினை தீராது'' என்று கூறிய ஸ்ரீரங்கா சில நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களையும் குறிப்பிட்டார்.

இது கூட்டமைப்பினரை உசுப்பிவிட்டது. அப்போது சபையில் இருந்த செல்வம் அடைக்கலநாதன், பொன்செல்வராஜா, சுமந்திரன், சுரேஸ்பிரேமச்சந்திரன் ஆகியோர் கடுமையாக ஸ்ரீரங்காவை விமர்சித்தனர்.

தமிழ் உறுப்பினர்களின் இந்தச் சொற்போர் சபையில் இருந்த பெரும்பான்மை உறுப்பினர்களுக்கு வேடிக்கையாக மாறிவிட்டது. அவர்கள் சந்தர்ப்பம் பார்த்து உசுப்பிவிடவும் தவறவில்லை.

மாலையில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் தொழில் உறவுகள் அமைச்சுக்கான விவாதம் இடம் பெற்றது. அவற்றிற்கான நிதி ஒதுக்கீடுகள் அங்கீகரிக்கப்பட்டன. (ங-02)

---

## ஆனைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து மேலும் தெரியவருவ தாவது:

கூழாவடிப் பகுதியில் இராணுவ முகாமுக்கு அருகில் உள்ள குறித்த வீட்டில் திருத்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது சந்தேகத்துக்கு இடமான வகையில் 10 எஸ்லோன் குழாய்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததை வேலை செய்தவர்கள் கண்டு பிடித்தார்கள். பின்னர் இதுகுறித்து வீட்டு உரிமையாளர் மானிப்பாய் பொலிஸாருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து பொலிஸார் எஸ்லோன் குழாய்களிலிருந்து வெடிபொருளை மீட்டனர்.

இதுகுறித்து மேலதிக விசாரணையைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ங-14-86)

---

## உயர்தர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்மேலும்தெரிவித்தவைவருமாறு:-

உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவது குறித்து கல்வி அமைச்சுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முற்றிலும் மாறுபட்ட கருத்துகளைத் தெரிவிக்கின்றனர்.

புதிய பாடத்திட்டம், பழைய பாடத்திட்டம் என போலிக் காரணிகளைச் சோடித்து நியாயம் தேடுவதற்கு இவர்கள் முயற்சிக்கின்றனர்.

பாடத்திட்டங்கள், பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகுவதில் தாமதம் ஏற்படாதவாறு பரீட்சை வைப்பதற்கு முன்னர் 'இஸட் ஸ்கோர்' குறித்து சிந்தித்திருக்கவேண்டும்.

பரீட்சை அதிகாரிகளின் அசமந்தப் போக்கே இதற்குக் காரணம். பரீட்சைப் பெறுபேறுகள் இன்னும் ஓரிரு நாள்களில் வெளியாகும் என பரீட்சைகள் ஆணையாளர் கூறுகின்றார். ஆனால், இன்னும் மூன்று வாரங்களுக்குப் பின்னரே பெறுபேறுகள் வெளியாகும் என பிரதிக் கல்வியமைச்சர் கூறுகின்றார். யார் சொல்வதை நாம் நம்புவது?

பரீட்சை எழுதிவிட்டு மாணவர்கள் பலத்த எதிர்பார்ப்புகளுடன் பெறுபேறுகளுக்காகக் காத்திருக்கின்றனர்.

இன்னும் ஒருவார காலத்துக்குள் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடாவிட்டால், இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறையிடுவோம்.

பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதில் காலத்தை இழுத்தடிப்பதானது, மாணவர்களின் உரிமையை மீறும் செயலாகும். இதனடிப்படையிலேயே நாம் முறைப்பாடு செய்வதற்குத் தீர்மானித்துள்ளோம் - என்றார். (ஒ-சி)

---

## யாழ்ப்பாணத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கூறியதாவது:

ஊடகவியலாளர்கள் கடத்தப்படுகின்றனர்; தாக்கப்படுகின்றனர்; கொலை செய்யப்படுகின்றனர். ஆனால், அவர்களுடன் தொடர்புடையவர்கள் எவரும் கைதுசெய்யப்படவில்லை. காணாமல் போனவர்கள் கண்டுபிடிக்கப்படவும் இல்லை.

பிரதீப் எக்னெலிகொட எங்கே? லசந்த விக்கிரமதுங்கவை கொலை செய்தவர்கள் எங்கே? இன்று ஊடகவியலாளர்களுக்கும் பாதுகாப்பு இல்லை.

ஓர் அரசின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டவேண்டியது ஊடகங்களின் கடமை. ஆனால், இங்கு பல இணைய தளங்கள் மூடப்பட்டுள்ளன.

ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கின்றோம்; கௌரவிக்கின்றோம் என்று கூறிக்கொண்டே மறுபுறம் ஊடக அடக்குமுறைக்குத் தூபம் போடுகின்றது அரசு.

25 வருடங்களுக்கு மேல் பணிபுரியும் ஊடகவியலாளர்களுக்கு வட்டியில்லாக் கடன் வழங்குவதாகக் கூறப்பட்டுள்ளது. 25 வருடங்களாகப் பணிபுரிந்த ஊடகவியலாளர்கள் இப்போது எங்கே இருக்கிறார்கள்? தலைமறைவாகிவிட்டனர்; கடத்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கு எப்படி கடன் வழங்கப் போகின்றீர்கள்?

எனவே, பத்து வருடங்களுக்கு மேல் பணியாற்றியவர்களுக்கு வட்டியில்லாக் கடன் வழங்கவேண்டும் - என்றார் ரணில். (ஒ-சி)

---

## மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தித்திட்டங்கள், மக்களின் மீள்குடியமர்வு விடயங்கள், விவசாயம், முதலீட்டு வாய்ப்புகள், கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகள், வேலைவாய்ப்பு, வைத்திய சாலைகளின் தேவைகள் குறித்த விடயங்கள் தொடர்பாக அவர்கள் அக்கறையோடு கேட்டறிந்து கொண்டனர்.

வலிகாமம் வடக்குப் பகுதியில் பலாலி விமான நிலையம் மற்றும் காங்கேசன்துறை துறைமுகத்தை அண்டிய பகுதிகளில் மக்களின் மீள்குடியமர்வு தொடர்பாகவும் கேள்விகளைக் கேட்டனர்.

மக்கள் இன்னும் மீளக்குடியமராமை குறித்தும் கேள்வி எழுப்பினர். அத்துடன் மீள்குடியவதற்கான இறுதித் திகதி ஏதாவது நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதா என்றும் வினவினர்.

மாதகலில் ஆஸ்திரேலிய அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட இறங்குதுறையை மக்கள் பயன்படுத்துகின்றனரா? அத்துடன் குறித்த பகுதியில் உள்ள காணிகளை கடற்படையினர் சுவீகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது உண்மையா என்றும் அவர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்கு காணி சுவீகரிப்புக்காக கடற்படை கோரிக்கை விடுத்த போதிலும் நாம் மக்களின் தனிப்பட்ட காணிகளை வழங்கமுடியாது என்று அவர்களிடம் தெரிவித்தேன் என்று அரச அதிபர் குறிப்பிட்டார்.

ஆஸ்திரேலிய தொழிற்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மரியா லம்பாஜினா தலைமையில் 6 பேர்கொண்ட குழுவினர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர். (ங-15)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இலங்கையின் "வித்தையை" சர்வதேசமே பொறுத்திருந்து பார்!

இலங்கையில் மீண்டும் ஒரு கிளர்ச்சி ஏற்படாதிருப்பதற்கு, இங்கு வாழும் இனங்களிடையே அரசியல் சமநிலை தேவை; அது சரிவரப் பேணப்பட வேண்டும். இனங்களுக்கு இடையில் ஒற்றுமை அவசியம்.

இவ்வாறு கருத்து வெளியிட்டிருப்பவர் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றின் பாதுகாப்புச் செயலாளர் ஜெப்ரி வேன் ஓடன். அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்து இங்குள்ள அரசியல், பொருளாதார நிலைமைகளை நேரில் அவதானித்தும் பல தரப்புகளுடன் கலந்துரையாடிய பின்னரும் ஜெப்ரி இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்.

உலகின் அபிவிருத்தி அடைந்த, 27 செல்வந்த நாடுகள் அங்கத்துவம் வகிக்கும் செல்வாக்குள்ள அமைப்பே ஐரோப்பிய ஒன்றியம். அதன் பாதுகாப்புச் செயலாளர் வெளியிட்டுள்ள கருத்து, கவனத்தில் கொள்ளத்தக்கதாகும்.

போர் முடிந்துவிட்டது. இனி நாட்டை எல்லா இன மக்களும் சேர்ந்து அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் செல்வோம் என்று அரச பிரதானிகள் வெளியே கூறிவருகின்றனர். ஆனால், அதற்கு அத்திபாரமாக அமைய வேண்டிய இனங்களுக்கு இடையே அரசியல் சமநிலையை உண்டாக்குவதில் விருப்பம் கொள்ளவில்லை, அதற்கான வழிமுறையைக் கண்டறிந்து, உய்த்துணர்ந்து செயற்படுவதற்கு விரும்பவில்லை. அந்தத் திசை நோக்கி திரும்பிப் பார்க்கவும் அது முனைப்புடன் செயற்படவில்லை என்பவற்றைத் தமது நேரடி, விஜயத்தின்போது அறிந்து கொண்டதாலேயே, ஜெப்ரி தமது மேற்கண்ட கருத்தை அப்பட்டமாக வெளியிட்டிருக்கிறார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளில், பல இன மக்கள் குழுமங்கள் வாழ்கின்றனர். எனினும் எண்ணிக்கையைக் கருத்தில் கொள்ளாமல் அவர்கள் மத்தியில் அரசியல் சமநிலை பேணப்படுகிறது. அதுபோன்று, இனங்களுக்கு இடையிலான ஒற்றுமையும் மேலுயர்ந்து நிற்கிறது. இதனை முன்வைத்தே ஜெப்ரி வேன் ஓடன் தமது எண்ணத்தை வெளிப்படுத்தி உள்ளார். அவரது கருத்தை இலங்கை அரசு பற்றிக் கொள்ளுமா என்பது சந்தேகமே.

எங்களுக்குப் புத்திமதி சொல்வதற்கு இவர் யார் என்ற நினைப்பில், அரச தரப்பு இதனை ஒரு காதால் கேட்டு மறு காதால் வெளிவிடும் என்று நம்பலாம்.

முப்பது வருடகாலமாக நாட்டின் வடக்கு, கிழக்கில் குடிகொண்டிருந்த பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டு விட்டது. அதனால் இங்கு சமாதானத்தையும் சுதந்திரத்தையும் நிலைநிறுத்த அரசு வீச்சுடன் செயற்படும் என்று போர் முடிந்த கையோடு அரசு தம்பட்டம் அடித்தது.

ஆனால் தமிழ் மக்களின் அர்த்தபுஷ்டியான அரசியல் சுதந்திரத்துக்கான திசையில், மூன்று வருடங்கள் கழிந்தும் அரசு இன்னும் ஓர் அங்குலம் தானும் காலடி எடுத்து வைக்கவில்லை.

நாட்டில் சுமார் அறுபது வருடங்களாக நீடித்துவரும் இனப்பிரச்சினைக்கு, நியாயமான தீர்வு ஒன்றை முன்வைப்பதில் நெஞ்சார்ந்த விருப்பம் இன்றி, காலத்தை வாங்கி, வேளைக்கு ஒரு பேச்சு என்ற வகையில் செயற்பட்டு வருகிறது. தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை ஓரங்கட்டிவிட்டு, எவ்வாறு தமிழர்கள் பொதுநிலையில் நின்று ஏற்றுக்கொள்ளக் கூடிய நியாயமான தீர்வை வழங்க முடியும்?

சர்வதேசம் எங்களுக்கு கட்டளை இடமுடியாது. இது எமது உள் விவகாரம். எவரும் எமது விடயத்தில் தலையிட முடியாது என்ற வீறாப்புடன் செயற்பட முனைந்துள்ள, இல்லை இல்லை, அவ்வாறே செயற்படும் அரசினால் எவ்வாறு இனங்களுக்கு இடையே சமநிலையைத் தோற்றுவிக்க முடியும்?

சிங்கள மக்கள் பெரும்பான்மையினர் என்பதாலும், தமிழர்கள், முஸ்லிம்கள் சிறுபான்மையினர் என்பதாலும், சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து வழங்கக் கூடாது. ஏற்றத்தாழ்வு பேணப்பட வேண்டும் என்று ஐம்பதுகளில் தோற்றுவிக்கப்பட்ட இனப் பாகுபாடும் துவேசமும் இன்னும் ஒழியாதிருக்கும்போது, ஜெப்ரி ஓடன் விதந்துரைக்கும் இன அரசியல் சமநிலை என்பது அரசை நோக்கி அவர் வீசும் குண்டு என்றே தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் அர்த்தப்படுத்துவர்.

எங்களுக்குப் புத்திமதி கூறுவதற்கு இவர் யார்? என்று உள்ளே தமக்குள் புழுங்குவர் என்பது நிச்சயம். மொத்தத்தில் இனவாதத்தில் ஊறித் திளைத்த இன்றைய அரசுக்கு ஜெப்ரி ஓடனின் ஆலோசனை நாசகரமானதாகவே இருக்கும் என்பதில் இரண்டு கருத்துக்கு - நிலைப்பாட்டுக்கு- இடம் இருக்க இயலாது.

இலங்கை இறைமை உடைய நாடு, அதன் விவகாரங்களில் மேற்கு நாடுகள் - ஏகாதிபத்தியவாதிகள் - தலையிடவோ, செல்வாக்குச் செலுத்தவோ இடம்கொடுக்கவோ முடியாது என்ற வீறாப்புப் பேசும் விமல் வீரவன்ச, மற்றும் கலாநிதி குணதாச போன்றவர்கள் ஜெப்ரி ஓடனின் கருத்தை அல்லது யோசனையை இலங்கை மீது வீசப்பட்ட அணுகுண்டாக வர்ணிப்பர் என்று எதிர்பார்க்கலாம். இத்தகையோரை விஞ்சி தமிழ் மக்களுக்கு அரசியல் சமநிலை வழங்க இன்றைய அரசு ஏறெடுத்தும் பார்க்காது என்பது நிச்சயத்திலும் நிச்சயம்.

வேண்டுமானால், பாம்புக்குத் தலையையும் மீனுக்கு வாலையும் காட்டும் விலாங்கைப் போன்று, சர்வதேச அழுத்தங்களுக்கு இடம் கொடுக்காமல் அரசு நழுவி வழுவி நீந்திக் கொண்டு-

தமிழ் மக்களுக்கு உரிய நியாயமான உரிமைகளைத் தானும் வழங்காது இழுத்தடிக்கும்.

போர்க்குற்றச்சாட்டுகளைத் திசை திருப்புவதற்கு எவ்வாறு ஒரு நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்ததோ, அதேவகையில் தனது சொந்த வழியில், பிரத்தியேகமான கண்துடைப்புத் தீர்வுத் திட்டம் ஒன்றை மட்டும் வெளிப்படுத்தக் கூடும். அவ்வளவுதான்.

மொத்தத்தில், இலங்கை அரசிடம் இருந்து உனக்கும் பெப்பே, உன் அப்பனுக்கும் பெப்பே என்ற வித்தையே இது விடயத்தில் நீளும்; அது மட்டும் நிச்சயம். சர்வதேசமே வேண்டுமானால் நீ, பொறுத்திருந்து பார்!

## செயற்குழ வெற்றிடங்களுக்கு விசுவாசிகளை நியமித்து பதவியை பாதுகாக்க ரணில் முயற்சி

### இது ஜனநாயகமற்ற செயல் என்கிறார் மா. ச. உறுப்பினர் மைத்திரி

கொழும்பு, டிசெ.14

கட்சிச் செயற்குழுவில் நிரப்பப்படவேண்டிய வெற்றிடங்களுக்கு தனது விசுவாசிகளை நியமிப்பதன் மூலம் கட்சியின் பதவி நியமனங்களை ஜனநாயகமற்ற முறையில் மேற்கொள்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் தீர்மானித்துள்ளதாகவும், இது கட்சிக்குள் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் அதனை வன்மையாகக் கண்டிப்பதாகவும் ஐ.தே.கவின் தென்மாகாண சபை உறுப்பினரும் சட்டத்தரணியுமான மைத்திரி குணரட்ண நேற்று முன்தினம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய மாநாட்டைத் தீர்மானிப்பதற்கான செயற்குழுக் கூட்டம் அடுத்தவாரம் நடைபெறவுள்ள நிலையில் கட்சிக்குள் தற்போது ஏற்பட்டிருக்கும் நிலைமை குறித்து மைத்திரி குணரட்ண கருத்து வெளியிட்டார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு: -

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் கட்சியின் யாப்பையும் மீறி அவருக்குச் சார்பான ஆள்களை செயற்குழுவில் நியமித்து ஜனநாயக ரீதியாக அன்றி நட்பு ரீதியில் வெற்றி பெறுவதற்கு கட்சித்தலைவர் ரணில் முயல்கிறார். இதனை நான் ஆட்சேபிக்கிறேன்.

தனக்கு விருப்பமான 20 பேரை நியமிக்க அவருக்கு கட்சி யாப்பில் அதிகாரம் இருக்கின்ற போதும் அவர் ஜனநாயகத்தை மீறி இப்படிச் செயற்படுகின்றார். (ஒ-சி)

## தியத்தலாவை வைத்தியசாலையில் ஒருவாரத்தில் 9 சிசுக்கள் மரணம்

### விசாரணை நடத்தக்கோரி சுகாதார அமைச்சுக்கு மகஜர்

தியத்தலாவை தள வைத்தியசாலையில் கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 9 சிசுக்கள் இறந்துள்ளன என்றும், இதுகுறித்து உடன் விசாரணை நடத்தவேண்டும் எனக் கோரியும் சுகாதார அமைச்சுக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளனர் பாதிக்கப்பட்ட தாய்மார்கள்.

இதேவேளை, தியத்தலாவை வைத்தியசாலையில் கடந்த வாரம் அதிக சிசுமரணங்கள் நிகழ்ந்துள்ளதை அந்த வைத்தியசாலையின் பணிப்பாளர் ஜி.ரஞ்சித் அத்தபத்து உறுதிப்படுத்தியுள்ளார். குறித்த வைத்தியசாலையில் மகப்பேற்றுச் சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கு பிறந்த சிசுக்களில் ஒரு வாரத்தில் மட்டும் 9 சிசுக்கள் இறந்துள்ளமை தமக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது எனப்பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

வைத்தியசாலையில் பிறந்த குழந்தைகளுக்குத் தடுப்பூசி ஏற்றப்படுகிறது என்றும், தடுப்பூசி ஏற்றப்பட்ட குழந்தைகளுக்கு ஒவ்வாமை காரணமாக முகத்திலும் ஏனைய உடற்பகுதிகளிலும் வீக்கம் ஏற்படுகிறது என்றும் இறந்த குழந்தை ஒருவரின் தாயார் கண்ணீருடன் தெரிவித்தார்.

குறித்த வைத்தியசாலையில் கடந்த வாரம் இடம்பெற்ற அந்த சிசு மரணங்கள் தொடர்பாக முழு விசாரணை நடத்தப்படவேண்டும் எனப் பாதிக்கப்பட்ட தாய்மார் சுகாதார அமைச்சுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த சிசு மரணங்கள் குறித்து தியத்தலாவை வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் கேட்ட போது அவர் கூறியவை வருமாறு:-

கடந்த வாரத்தில் அதிக சிசுமரணங்கள் நிகழ்ந்துள்ளன. இது ஒரு தள வைத்தியசாலையாக இருப்பதால் அருகிலுள்ள ஏனைய வைத்தியசாலைகளிலிருந்து மகப்பேற்றுக்காகக் கர்ப்பிணித்தாய்மார்கள் சேர்க்கப்படுகின்றனர்.

அவர்கள் இங்கு மகப்பேற்றுக்காக மட்டுமே சேர்க்கப்படுவதால் பிறக்கும் குழந்தைகளுக்கு உள்ள நோய்களைக் கண்டு பிடிக்க முடியவில்லை. குழந்தை பிறப்பதற்கு முதலே பல நோய்களால் சிசுக்கள் பாதிக்கப்பட்டிருக்கலாம் - என்றார் அவர். (த-சி)

## உயர்தரப் பரீட்சை முடிவுகள் இந்தவாரத்தில் வெளியாகும்

கொழும்பு, டிசெ.14

இந்த ஆண்டுக்கான ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகள் இந்த வாரத்துக்குள் வெளியிடப்படும் என பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

பரீட்சைத் திணைக்களம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அதிகாரிகளுக்கிடையே கடந்த 12ஆம் திகதி இடம்பெறவிருந்த பேச்சுவார்த்தைகளில் வெட்டுப் புள்ளிகளைத் தீர்மானிப்பதற்கான இறுதித் தீர்மானம் எடுக்கப்பட விருந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையின் வெட்டுப் புள்ளிகளை நிர்ணயிப்பது தொடர்பாகப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவின் ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்பட்டதும் உடனடியாகப் பரீட்சை முடிவுகளை வெளியிடப் பரீட்சைத் திணைக்களம் தயாராகவுள்ளதாகவும் பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (த-ஞ)

## வீடமைப்புத்திட்ட நன்கொடை 1½ லட்சம் ரூபாவாக உயர்ந்தது

கொழும்பு, டிசெம்.14

சமூகசேவைகள் அமைச்சின் அங்கவீன முற்றோருக்கான தேசிய செயலகம் வீடமைப்புத் திட்ட நிதி நன்கொடையை ஒன்றரை லட்சம் ரூபாவாக உயர்த்தியுள்ளது. இதுவரையில் ஒரு லட்சம் ரூபாவரை மட்டுமே இந்த நிதி வழங்கப்பட்டுவந்தது.

இது தொடர்பாகத் திருத்தப்பட்ட புதிய சுற்றறிக்கையை செயலகத்தின் பணிப்பாளர் எம்.பி.சி. ஜெயமானே பிரதேச செயலர்களுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

மாற்றுவலுவுள்ள ஒருவரின் பெயரில் காணி இருந்தாலோ அல்லது அவரைப் பராமரிப்பவரின் பெயரில் காணி இருந்தாலோ இந்த நன்கொடைக்கு விண்ணப்பிக்க முடியும். உள்ளூராட்சி அமைப்புக்களின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டுக் கட்டட அனுமதி பெற்று இந்த வீடமைப்புத் திட்டத்துக்கு விண்ணபிக்க முடியும். (த-121)

**நாளை**

கார்த்திகை 29, வியாழக்கிழமை 15.12.2011

திதி: பஞ்சமி மு.இ. 8.20 வரை

நட்சத்திரம் -ஆயிலியம் மு.இ. 9.56 வரை

சுபநேரம்: 7.51 - 9.21 வரை, ராகு காலம்: 1.51 - 3.21 வரை

உதயன்
14 டிசெம்பர் 2011 புதன்கிழமை

# சங்கானையில் ரூ.40 லட்சம் செலவில் புதிய பஸ்நிலையத்துக்கு அடிக்கல்

சண்டிலிப்பாய்,டிசெ.14

சங்கானை பஸ்தரிப்பு நிலையம்40 லட்சம் ரூபா செலவில் பல வசதிகளுடன் நவீன முறையில் மாற்றியமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல்லை கடந்த சனிக்கிழமை மாலை வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத் தலைவர் திருமதி என்.ஐங்கரன் நட்டு வைத்தார்.

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் பிரபல்யமாக விளங்கும் சங்கானைச் சந்தைக்கு முன்பாகப் பிரதான வீதியில் அமைந்துள்ள இந்த பஸ்தரிப்பு நிலையத்தைச் சுற்றி வங்கிகள், அரச திணைக்களம், மீன் சந்தை உட்பட நூற்றுக்கணக்கான கடைகளும் அமைந்துள்ளன.

பல நூற்றுக்கணக்கான மக்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகத் தினமும் சங்கானைக்கு வந்து போவார்கள். ஆனால் பயணிகளுக்கு வசதியாக பஸ்தரிப்பு நிலையம் அமையவில்லை. எனவே காலத்துக்கு ஏற்ற வகையில் பஸ் நிலையத்தை விஸ்தரிக்க வேண்டிய கட்டாய தேவை ஏற்பட்டுள்ளது.

மக்களின் குறைபாடுகளுக்குத் தீர்வுகாணும் முயற்சியிலும், பிரதேச சபையின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்குடனும் பஸ் நிலையத்தை அபிவிருத்தி செய்ய முன்வந்துள்ள வலிகாமம் மேற்குப் பிரதேச சபை 40 லட்சம் ரூபா செலவில் நவீன மயமான முறையில் பஸ் நிலையத்தை அமைக்க முன்வந்துள்ளது.

(ம-115)

## தொழில்நுட்ப அலுவலர் பற்றாக்குறை காரைநகரில் அபிவிருத்திப் பணி தாமதம்

யாழ்ப்பாணம்,டிசெ.14

காரைநகர் பிரதேச சபையில் போதிய தொழில்நுட்ப உத்தியோகத்தர் இல்லாமையினால் பிரதேச அபிவிருத்தி பணிகள் பாதிக்கப்படுவதாக பிரதேச சபை வட்டாரங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

தற்போது இந்தப் பிரதேச சபையில் ஒரு தொழில்நுட்ப உத்தியோகத்தரே பணியை மேற்கொண்டு வருகின்றார்.

இது குறித்துப் பிரதேச சபை உள்ளூராட்சித் திணைக்களத்துக்குச் சுட்டிக்காட்டிய போது வலி.மேற்கு பிரதேச சபையில் கடமையாற்றி வரும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரை இங்கு இடமாற்றுவதாகத் தெரிவிக்கப்பட்ட போதும் அது இதுவரை இடம் பெறவில்லை. ஒரே ஒரு தொழில்நுட்ப அலுவலர் மட்டுமே உள்ளமையால் காரைநகரில் அபிவிருத்தியைத் துரிதகதியில் மேற்கொள்ள முடியாத நிலை உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(த-26)

## பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் பழைய மாணவர் மன்ற அலுவலகம்



பருத்தித்துறை,டிசெ.14

ஹாட்லிக் கல்லூரியில் பழைய மாணவர் மன்ற அலுவலகம் மற்றும் சிற்றுண்டிச்சாலை ஆகியவற்றுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை பழைய மாணவர்கள் முன்னிலையில் இடம்பெற்றது.

பழைய மாணவர் மன்ற பிரித்தானியக் கிளையின் நிதிப் பங்களிப்புடன் இடம்பெறும் இந்த இரண்டு மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல்லை, பிரித்தானிய கிளையின் வேண்டுதலுக்கு அமைய சமய சம்பிரதாயங்களைத் தொடர்ந்து, பழைய மாணவர் மன்ற தாய்ச் சங்கத்தின் தலைவர் மு.சிவனேசன் கல்லூரி அதிபர் ந.தெய்வேந்திரராஜாவுடன் இணைந்து நாட்டி வைத்தார்.

தொடர்ந்து இடம்பெற்ற பழைய மாணவர்களுக்கான தேநீர் விருந்தில் உரையாற்றிய தலைவர், கல்லூரியின் வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ள பழைய மாணவர்களைப் பெரிதும் பாராட்டியதுடன் பழைய மாணவர் மன்றச் செயற்பாடுகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க அணி திரளுமாறு பழைய மாணவர்களைக் கேட்டுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் கல்லூரி அதிபர் ந.தெய்வேந்திரராஜா, மன்றத்தின் உப தலைவர் வைத்திய கலாநிதி கே.சிவராமன், செயலாளர் நா.ஜயபாஸ்கர் ஆகியோரும் உரையாற்றினர். (த)

## மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கினர் பொலிஸார்

சாவகச்சேரி,டிசெ.14

சாவகச்சேரிப் பொலிஸ்நிலையப் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் கல்வி பயிலும் வறுமைக் கோட்டின்கீழ் உள்ள மாணவர்களுக்குப் பாதணிகளை வழங்கியுள்ளனர்.

போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார், பாடசாலைக்கு வந்து மாணவர்களுக்குப் பாதணிகளை வழங்கினர் என்று அதிபர் ஐ.சண்முகதாஸ் தெரிவித்தார். (ஏ-207)

## சுண்டிக்குழி தபாலகம் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.14

யாழ்ப்பாணம் சுண்டிக்குழித் தபாலகத்தில் திருத்தப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

கடுமையாகச் சேதமடைந்த நிலையில் இருந்த இந்தத் தபாலகம் தபால் திணைக்களத்தினால் புனரமைக்கப்பட்டுள்ளது. தபாலகக் கூரைகளும் முழுமையாகச் சீர்செய்யப்பட்டுள்ளன. முன்பு மழை காலங்களில் தபாலகத்தில் வெள்ளம் உட்புகுவதால் தபாலகப் பணியாளர்கள் சிரமங்களை எதிர் நோக்கி வந்தனர். கடந்த பல வருடங்களாகப் புனரமைப்பு இன்றிக் காணப்பட்ட இந்த தபாலகம் தற்போது முழுமையாகப் புனரமைக்கப்பட்டுள்ளதாகத் தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(த-26)

## கட்டாக்காலிக் கால்நடைகளை கட்டுப்படுத்த மக்களின் ஒத்துழைப்பு அவசியமானது

### காரைநகர் பிரதேச சபைத் தலைவர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.14

காரைநகர் பிரதேசத்தில் கட்டாக்காலிக் கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு பிரதேச மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று பிரதேச சபைத் தலைவர் வே.ஆனைமுகன் கேட்டுள்ளார்.


அவர் மேலும் கூறுகையில்:

இந்த கட்டாக்காலிக் கால்நடைகளைக் பிடிக்கும் பணிகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன.

பிடிக்கப்படும் கால்நடைகள் பிரதேச சபையின் சட்ட விதிகளுக்கு அமைய தண்டம் விதிக்கப்பட்ட பின்னர் உரியவர்களிடம் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தக் கட்டாக்காலிக் கால்நடைகளைப் பூரணமாகக் கட்டுப்படுத்துவதற்கு மக்களின் முழுமையான ஒத்துழைப்பு அவசியம்-என்றார்.

கட்டாக்காலிக் கால்நடைகளால் காரைநகரில் பெரும்போக நெற்செய்கைகளும் பாதிப்புக்குள்ளானமை குறிப்பிடத்தக்கது. (த-26)



கோப்பாய் பிரதேச செயலகத்தினால் அண்மையில் பிரதேச செயலகத்தில் நடத்தப்பட்ட நடமாடும் சேவையில் கலந்து கொண்ட வயோதிபர் ஒருவர் அங்குள்ள ஊழியர் ஒருவருடன் சேவை ஒன்றைப் பெறுவதற்காக உரையாடுகின்றார். (த)

## யாழ். மாவட்டத்தில் விரைவில் மொழிச் சங்கம்

யாழ்ப்பாணம், டிசெ.14

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் வழிகாட்டலின் கீழ் பிரதேச மட்டங்களில் மொழிச் சங்கங்களை அமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். மாவட்டத்தில் ஏற்படுத்தப்படவுள்ள மொழிச்சங்கம் ஊடாக அனைத்துத் தேவைகளுக்கும் இங்கு தமிழ் மொழிப் பிரயோகம் அமுல்படுத்தப்படுகின்றதா என்பது குறித்துக் கண்காணிக்கப்படவுள்ளது. இந்த மொழிச்சங்கத்தின் மூலம் தமிழ், சிங்கள மொழிகள் பரிமாற்றக்கற்கை நெறிகளும் மேற்கொள்ளப்படும். மொழிக் கற்கைகளுக்கு ஆசிரியர்களை ஏற்பாடு செய்யும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

யாழ். மாவட்டத்தில் உள்ள இந்த மொழிச்சங்கம் தமிழ் மொழியின் செயற்திறனாக்கத்தை விஸ்தரிப்பதற்கு ஒரு குழுவை அமைக்கவுள்ளது. ஆர்வமுள்ள தமிழ் புலமையாளர்கள், மொழித்திறன் மிக்கவர்கள் சேவை அடிப்படையில் செயலாற்ற விரும்புபவர்கள் அனைவரும் இதில் இணைந்து செயற்படமுடியும். இதில் ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் 20ஆம் திகதி செவ்வாயக்கிழமைக்கு முன்னர் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் தொடர்புகொள்ளமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-311)

## வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பப் பெண்ணுக்கு உதவி

சண்டிலிப்பாய், டிசெ.14

வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள ஊனமுற்ற குடும்பத் தலைவரின் மனைவிக்கு வாழ்வாதார மேம்பாட்டுக்காக வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ரூபா 20 ஆயிரம் பெறுமதியான உழுந்து அரைக்கும் இயந்திரத்தை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

பிரதேச சபையால் வழங்கப்படும் மாதாந்த வேதனத்தைப் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரத்துக்காகப் பயன்படுத்தி வரும் வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி என்.ஐங்கரன் கடந்த இரு மாதங்களுக்குரிய தனது வேதனத்தில் ரூபா 20 ஆயிரம் பெறுமதியான உழுந்து அரைக்கும் இயந்திரத்தை வாங்கி மேற்படி பெண்ணுக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

தொல்புரம் மாதர் சங்கத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதேவேளை நெல்லியான் கிராமத்திலுள்ள கல்விளான் சன சமூக நிலையத்துக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவண்பவன் மாணவர்களுக்கு, இலவச கற்றல் உபகரணங்களையும் வழங்கியுள்ளார்.

(த-115)

## 20 ஆம் திகதிக்கு முன் உதவிப் பணத்தை பெற்றுக் கொள்க

யாழ்.மாவட்டத்தில் உள்ள தபாலகங்களில் வைத்து வழங்கப்படும் பொதுசன மாதாந்த உதவிப்பணத்தைப் பயனாளிகள் எதிர்வரும் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு மாவட்டத் தபால் அத்தியட்சகர் எஸ்.ஜெபரெட்ணம் அறிவித்துள்ளார். தபாலகங்கள் மற்றும் உப தபால் நிலையங்களில் வைத்து வழங்கப்படும் இந்த மாதாந்த பொதுசன உதவிப் பணத்தை உரியவர்கள் குறித்த திகதிக்கு முன்னர் பெற்று ஒத்துழைக்க வேண்டும் -என்றர் அவர். தற்பேரது வழங்கப்படும் டிசெம்பர் மாதத் துக்கானமாதாந்தப் பொதுசன உத விப்பணத்துடன் இந்த ஆண்டுக்கான் நிலுவையும் சேர்ந்து வழங்கப்படுகின்றது. (த-26)

# சட்டவிரோத மின்பாவனையை கட்டுப்படுத்த யாழ்.பொலிஸார் ஒத்துழைப்பதில்லை

## மின்சார சபை வட்டாரங்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,டிசெ.14

யாழ்.மாவட்டத்தில் சட்டவிரோத மின்பாவனையாளர்களைப் பிடிப்பதற்கு யாழ். பொலிஸார் ஒத்துழைப்பு வழங்குவதில்லை என யாழ்.மின்சார சபை வட்டாரங்கள் குற்றஞ் சாட்டியுள்ளன.

இது தொடர்பாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:

சட்டவிரோதமாக மின்சாரம் பெறுபவர்கள் குறித்து பொது மக்கள் கடிதம் மூலமாகவும், தொலைபேசி மூலமாகவும் முறைப்பாடுகளைச் செய்கின்றனர்.

அவ்வாறு மின்சாரம் பெறுபவர்களைப் பிடிப்பதற்கு யாழ். மின்சார சபை தயாராக உள்ள போதும் எம்முடன் இணைந்து செயற்படுவதற்கு யாழ். பொலிஸார் தயாராக இல்லை.

பொலிஸாரின் ஒத்துழைப்புடன் சென்று சோதனை நடத்தினால் மட்டுமே சட்டவிரோத மின் பாவனையாளர்களைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யமுடியும். அவ்வாறு ஆஜர்ப் படுத்துவதற்கு பொலிஸார் மின்சார சபையுடன் இணைந்து செயற்பட வேண்டும்.

கடந்த 26ஆம் திகதி யாழ். நகரப் பகுதிகளில் சட்ட விரோதமான முறையில் மின்சாரம் பெற்றவர்களைக் கொழும்பிலிருந்து வருகைதந்த மின்சார சபையின் விசேட குழுவினர் யாழ்.பொலிஸாரின் உதவியுடனேயே சோதனை நடத்திக் கைது செய்தனர்.இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

கொழும்பில் இருந்து வந்த மின்சார சபையின் விசேடகுழுவுடன் பொலிஸார் இணைந்து செயற்பட்டதுபோல, யாழ்.மின்சார சபையுடனும் இணைந்து செயற்பட்டால் சட்டவிரோத மின் பாவனையை முற்றாகத் தடுக்க முடியும். எனவே பொலிஸார் எம்முடன் இணைந்து ஒத்துழைக்க முன்வரவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-311)



சித்தன்கேணி உருத்திரா சனசமூக நிலைய நிர்மாணப் பணிகளுக்கான ஆரம்ப கட்டச் செலவினமாக யாழ்.மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து 50 ஆயிரம் ரூபாவை வழங்கியிருந்தார்.
அந்த நிதியுடன் மேலும் 50 ஆயிரம் ரூபாவைச் சேர்த்து சனசமூக நிலையக் கட்டடப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. எனினும் இந்த நிதி போதாமையால் சனசமூக நிலைய நிர்வாகத்தினர் தமது சொந்த முயற்சியின் மூலம் கட்டடப் பணிக்கு நிதி சேகரிப்பதற்குத் தீர்மானித்தனர். இதற்காக அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு ஒன்றை அவர்கள் நடத்தவுள்ளனர். அவர்களின் இந்த முயற்சியை நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஆரம்பித்து வைக்கிறார். (த)

# துன்னாலை வீதியில் மதகு சேதம் சாரதிகள் சிரமம்

தென்மராட்சி,டிசெ. 14

சரசாலை துன்னாலை வீதியில் கப்பூது பகுதியில் உள்ள மதகு மோசமாகச் சேதமடைந்துள்ளதால் கார் மற்றும் சிறிய ரக வாகனங்கள் வேறு மார்க்கங்களில் பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக வாகனச் சாரதிகள் தெரிவித்தனர்.

மதகின் ஒரு பகுதி உடைந்து சேதமடைந்துள்ளதால் மறு பகுதி உடையாமல் இருப்பதற்காக உயரமாக மணல் போட்டுக் குவிக்கப்பட்டுள்ளது இதனால் கார் மற்றும் சிறியரக வாகனங்களின் கீழ்ப்பகுதியை மணல்மேடு சேதப்படுத்துவதாகவும் இதனால் சிறிய ரக வாகனங்கள் வேறு மார்க்கத்தில் பயணிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த வீதியில் கனரக வாகனங்கள் மண்பிட்டியின் மீது பயணிக்கக்கூடியதாக உள்ள போதிலும் மோட்டார் சைக்கிளில் செல்வோர் இறங்கி நடந்து சென்று பயணத்தைத் தொடர்வதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-237)

# இளைஞர் சேவை மன்றங்களை புனரமைக்கும் பணிகள் ஆரம்பம்

வலி. வடக்கு டிசெ 14

யாழ் மாவட்டத்தில் உள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றங்களைப் புனரமைக்கும் பணிகள் பிரதேச செயலாளர் பிரிவுகள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் ரீதியாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிகள் முடங்கிக் கிடந்ததுடன் போதிய கவனம் செலுத்தப்படவில்லை. தேசிய சேவைகள் அலுவலர்கள் யாழ் மாவட்டத்தில் போதியளவு இல்லாத நிலையிலும் ஏற்கனவே இளைஞர் சேவைகள் மன்றத்தின் செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களைத் தற்காலிகமாக நியமனம் செய்து இந்நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் சுமார் பதினைந்துக்கும் மேற்பட்ட இளைஞர் சேவைகள் மன்ற அலுவலகங்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்ற போதிலும் அதனை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கைகளைத் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இதுவரைமேற்கொள்ளவில்லை.

இது தொடர்பாக யாழ். மாவட்ட அலுவலருடன் தொடர்பு கொண்ட போது விரைவில் இந்த வெற்றிடங்கள் நிரப்பப் படவுள்ளதாகத் தெரிவித்தார். (த-86)

# கிராம அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு இன்று ஆரம்பம்

வலி. வடக்கு, டிசெ. 14

யாழ் மாவட்டக் கிராம அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் ஆரம்பமாகவுள்ளது. யாழ் மாவட்ட அரச அதிபரினால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ள இந்தப் பயிற்சி வகுப்பு மூன்று பிரிவுகளாக நடத்தப்படவுள்ளது.

யாழ் மாவட்ட பிரதேச செயலகங்களில் உள்ள கிராம அலுவலர்கள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுப் பயிற்சி வகுப்புகள் இடம்பெறுகின்ற போதிலும் யாழ் செயலக உயர் அதிகாரிகளே பயிற்சி வகுப்புகளை நடத்தவுள்ளனர்.

தற்காலத்துக்குத் தேவையான கணினிப் பயிற்சி போன்றவைகளை வழங்காமல் தொடர்ந்து அடையாள அட்டை படிவம் நிரப்புதல், நிவாரணம் வழங்குதல் போன்ற நாளாந்தம் செய்யும் பணிகள் தொடர்பான பயிற்சிகளே தமக்கு வழங்கப்படுவதாகக் கிராம அலுவலர்கள் கூறுகின்றனர். (த-86)

# 23 வர்த்தகர்களுக்கு நீதிமன்றில் ரூ.1 லட்சத்து 21 ஆயிரம் அபராதம்

தென்மராட்சி, டிசெ.14

பாவனையாளர் பாதுகாப்பு விதிமுறைகளை மீறிய தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 23 வர்த்தகர்களுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் ஒரு லட்சத்து 21 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பாவனையாளர் பாதுகாப்பு அதி காரசபை உத்தியோகத்தர் நடத்திய திடீர் பரிசோதனையின் போது விலைப்பட்டியல் வைத்திருக்காமை, அதிக விலைக்கு பொருள்கள் விற்பனை செய்தமை, திகதி காலாவதியான பொருள்கள் விற்பனைக்கு வைத்திருந்தமை போன்ற குற்றங்களின் பேரில் 23 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டன.

வழக்குகளை நேற்று முன்தினம் தனித்தனியாக விசாரித்த நீதிவான் மா.கணேசராஜா வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து ஆறு வர்த்தகர்களுக்கு தலா 6 ஆயிரம் ரூபா வீதமும் 17 வர்த்தகர்களுக்குத் தலா 5 ஆயிரம் ரூபா வீதமும் அபராதம் விதித்தார். அபராதத் தொகை செலுத்தத் தவறின் தலா 3 மாதங்கள் சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் உத்தர விட்டார். (த- 207)

# சாவகச்சேரியில் கட்டாக்காலிகள் இன்று முதல் பிடிக்கப்படும்

சாவகச்சேரி, டிசெ. 14

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட காலபோக நெற்செய்கை செய்யப்பட்டுள்ள பகுதிகளில் கட்டாக் காலியாக திரியும் மாடுகள் இன்று புதன்கிழமை தொடக்கம் பிடிக்கப்படவுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக ஏற்கனவே சாவகச்சேரி பிரதேச சபை ஒலி பெருக்கி மூலம் சகல பகுதிகளிலும் அறிவித்திருந்தது.

எனினும் இவற்றை கட்டுப் படுத்த முடியாத நிலை காணப்படுவதால் இந்த கட்டாக் காலிகள் பிடிக்கப்படவுள்ளன. இதற்காக மன்னாரிலும் இருந்து கைதேர்ந்தவர்கள் வந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் திட்டம் முதன்முதலாக தென்மராட்சியில் தனங்கிளப்பு, மறவன்புலோ,தச்சன் தோப்பு, நாவற்குழி உள்ளிட்ட பகுதிகளிலும் தொடர்ந்து கொடிகாமம், கச்சாய், மிருசுவில், கரம்பகம், மட்டுவில், சரசாலை, கைதடி ஆகிய பகுதிகளிலும் கட்டாக்காலிகள் பிடிக்கப்படவுள்ளதாக சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் சி.துரைராஜா தெரிவித்தார். (த-131)

# மட்டுவில் வாசிக்கு ரூ.8 ஆயிரம் அபராதம்

சாரதிய அனுமதிப்பத்திரம், காப்புறுதி, தலைக்கவசம் ஆகியவை இன்றி மோட்டார் சைக்கிளில் பயனித்த மட்டுவில் கிழக்கு வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 8 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வழக்கினை விசாரித்த பதில் நீதிவான் செ. கணபதிப்பிள்ளை எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 8 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 3 மாதங்கள் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (த-207)

# மின்விநியோகத்தைச் சீர்செய்வதற்கு யாழ்ப்பாணத்தில் கட்டுப்பாட்டு அலகு

## கொழும்பில் இருந்து வந்த குழு அமைக்கிறது

யாழ்ப்பாணம், டிசெ. 14

கொழும்பு, மின்சாரசபை விசேட குழுவினர் ஏற்பாட்டில் யாழ். மின்சார சபைக்குக் கட்டுப்பாட்டு அலகு ஒன்றை அமைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என யாழ். மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் கட்டுப்பாட்டு அலகானது வடமாகாணத்தில் முதல்முறையாக அமைக்கப் படவுள்ளது.

வடமாகாணத்தில் வவுனியா வரை லக்ஷபானா மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது. ஏனைய பகுதிகளில் மின் பிறப்பாக்கிகள் ஊடாகவே மின் விநியோகம் இடம்பெற்று வருகின்றது.

இந்தக் கட்டுப்பாட்டு அலகை அமைப்பதன் மூலம் குறித்த பகுதிகளில் மின் துண்டிப்பை மேற்கொள்வதானால் அந்தப் பகுதிக்குரிய ஆளியை மட்டும் துண்டித்தால் போதும். இதனால் முழு இடங்களுக்கும் மின் துண்டிப்பு இடம்பெறுவது தவிர்க்கப்படும்.

தற்போது சுன்னாகம் முதல் முகமாலை வரையான பகுதிகளில் இரண்டு ஆளிகள் பொருத்தப்பட்டுள்ளன. இவ்வாறு அனைத்துப் பகுதிகளுக்கும் 30 வரையான ஆளிகள் இந்தக் கட்டுப்பாட்டு அலகு மூலம் பொருத்தப்படும்.

இவ்வாறு கட்டுப்பாட்டு அலகின்மூலம் ஆளிகளைப் பொருத்தி இயக்குவதால் தேவையற்ற விபத்துக்களையும் கட்டுப்படுத்த முடியும்.

இந்த வேலைத் திட்டத்துக்கான இயந்திரங்கள்,ஆளணி வளம் என்பன கொழும்பில் இருந்து வந்த விசேட குழுவினரால் எடுத்து வரப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த அலகுக்கான பொறியியலாளராக எஸ். தாருண்ஸி நியமிக்கப்பட்டுள்ளார்.

இன்னும் சில தினங்களில் இந்தக் கட்டுப்பாட்டு அலகை அமைக்கும் பணிகள் நிறைவடைந்து விடும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-311)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை - சுன்னாகம்
## வரவு செலவுத் திட்டம் - 2012

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைக் கடடளைச் சட்டத்தின் 168 ஆம் பிரிவுக்கிணங்க வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் 2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு 15.12.2011 ஆம் திகதி தொடக்கம் 21.12.2011 ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகம், உப அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் என்பதை அறியத்தருகின்றேன்.

தவிசாளர்,
வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.
12.12.2011



## கண்ணீர் அஞ்சலி



எமது வடமராட்சி வடக்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர் வாரி செல்வநாயகம் அவர்களின் மகன்

### கோபிநாத்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர்கள்,
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்.



## கண்ணீர் அஞ்சலி

### செல்வநாயகம் கோபிநாத்



13.12.2011 செவ்வாய்க்கிழமை அன்று காலமாகிய செய்திகேட்டு நாம் அதிர்ச்சியடைந்து இருப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு நாம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி

பிரிவால் துயருறும்:
விளையாட்டு விஞ்ஞான அலகு
மாணவர்கள், யாழ்.பல்கலைக்கழகம்.
(11658X3.6.9)



## முதலாம் ஆண்டு நினைவுப் பிரார்த்தனை

### திருமதி ஜெயமாலா ஸ்ரீதரன்



புவியில்
04.03.1965

விண்ணில்
25.11.2010

திதி: 14.12.2011
தேய்பிறை சதுர்த்தி

அருமை மைந்தனும் கணவனும் தவிக்க இவ் அவனிவிட்டு எங்கு சென்றீர்.

சோ.ஸ்ரீதரன் (கணவர்)
ஸ்ரீ.குககாந்தன் (மகன்)

சுதுமலை சிந்மயபாரதி வித்தியாசாலை வீதி,
சுதுமலை தெற்கு, மானிப்பாய்

(11604)(3.6.7)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் வைத்திலிங்கம் மார்க்கண்டு

தோற்றம் : 18-05-1926 மறைவு : 25-11-2010

திதி: 14-12-2011 சதுர்த்தி



அன்பின் திருவுருவமாய்
பாசத்தின் சிகரமாய்
பண்புடன் வழிகாட்டி
எம் வாழ்விற்கு
ஒளியீட்டிய ஐயாவே!
ஆண்டொன்று
சென்றாலும்
உம் நினைவு என்றும்
மாறாது.
உங்கள் ஆத்ம
சாந்திக்காக
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

124/2, பலாலி வீதி,
திருநெல்வேலி.

என்றும் உங்கள் நினைவில் வாழும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(11621) (6.7.10)


## சுமந்திரன் எம்.பி. கிரிக்கெட் விளையாடியதில் என்ன தவறு?

கொழும்பு, டிசெ. 14

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கிரிக்கெட் விளையாடியதில் என்ன தவறு உள்ளது? அரசியலுக்கும், விளையாட்டுக்கும் வித்தியாசம் உண்டு என்பதை விமர்சிப்பவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

அமைச்சர்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கலந்துகொண்டு விளையாடியமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், இது தொடர்பாகக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

அண்மையில் நாடாளுமன்றில் நடைபெற்ற சரஸ்வதி பூஜை நிகழ்வில் நான் கலந்துகொண்டேன். அரசியலில் சிற்சில நாகரிகமான செயற்பாடுகளும் உள்ளன. அதனைப் பின்பற்றி நாம் செயற்படுவதே உகந்த விடயமாகும்.

இந்த அடிப்படையிலேயே சுமந்திரன் கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றியிருப்பார். இதில் என்ன தவறு உள்ளது? இதனை ஒருபோதும் தவறு என்று கூறமுடியாது.

எமது உரிமைகளை வென்றெடுப்பதில் நாம் உறுதியாக இருப்போம். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

விளையாடுவதற்கும், அரசியலுக்கும் வித்தியாசம் உண்டு என்பதை விமர்சிப்பவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் - என்றார். (ஓ-சி)

## அஜித்குமார எம்.பி. மெனிக்பாம் செல்ல அனுமதிக்கப்படாமை குறித்து விசாரணை

கொழும்பு, டிசெ. 14

ஜே.வி.பியின் மாற்றுக்குழுவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் குமார, வவுனியா மெனிக் பாம் இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாமுக்கு செல்ல அனுமதிக்கப்படாமைக்கு காரணம் என்னவென்பதை அறிய விசாரணை நடத்துமாறு பொலிஸ் மா அதிபருக்கு தாம் உத்தரவிடவுள்ளார் என சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நேற்று தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு எந்த விடயம் குறித்தும் தகவல் பெறக்கூடியதாக இருக்க வேண்டும் என்றும் சபாநாயகர் தெரிவித்தார்.

மேற்படி நலன்புரி கிராமத்துக்கு செல்ல அனுமதி மறுக்கப்பட்டதன் மூலம் நாடாளுமன்ற உறுப்பினருக்கான சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது என்று அஜித்குமார கூறியதையடுத்தே சபாநாயகர் இதனைத் தெரிவித்தார்.

மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ன வீரகோன் கூறியும் மெனிக் பாமிலுள்ள பாதுகாப்பு அதிகாரி தனக்கு அனுமதி வழங்கவில்லை என்றும் அஜித் குமார கூறினார்.

நான் அமைச்சருக்கு இவ்விடயம் குறித்து அறிவித்தேன். அவர் பாதுகாப்பு அதிகாரியுடன் தொடர்புகொண்ட பின்னர் நான் பயணத்தை தொடர முடியும் என என்னிடம் தெரிவித்தார். ஆனாலும், அங்கிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் என்னை நலன்புரிமுகாமுக்குச் செல்ல அனுமதிக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அப்பயணத்தில் தன்னுடன் வந்திருந்த கட்சி செயற்பாட்டாளர்களான லலித் குமார் வீரராஜ், சி.குகன் ஆகியோர் கடத்தப்பட்டுள்ளார்கள் எனவும் அவர்கள் தற்போது எங்கிருக்கிறார்கள் எனத் தெரியவில்லை எனவும் அஜித் குமார தெரிவித்தார். (ஓ-சி)


### பிரத்தியேக/ குழுவகுப்புக்கள் (2012)

க.பொ.த (உ/தரம்): இரசாயனவியல்
க.பொ.த.(சா/தரம்): கணிதம்,விஞ்ஞானம், ஆங்கிலம் (09.10)

மேற்படி வகுப்புக்கள் உங்கள் இல்லங்களுக்கு வந்து மிக இலகுமுறையில் கற்பித்துத் தரப்படும்.
காலம் தாமதிக்காது தொடர்புகொள்ளுங்கள்
தொடர்பு: 0774014345



## நீங்காத நினைவலையில்
## முதலாம் ஆண்டு



அமரர் ஜோசேப்
யூட் பில்ஜே (வசீர்)

அன்னைமடியில்
26.05.1990



ஆண்டவன் அடியில்
14.12.2010

வசீகர வதனம் கொண்ட வசீரே
வலம்புரி சங்காய் மிளிர்ந்தவனே
ஐந்து முத்துக்களில் ஐந்தாவதாய் உதித்தவனே
ஐயமின்றி துள்ளித் திரிந்தவனே
உயர உயர சென்று சிறப்பெய்துவாய் என்றிருக்க
உயரத்தில் இருந்து வீழ்த்தி உன்னை
காலன் கவர்ந்தானோ
இருபது ஆண்டுகள் மகிழ்வுடன்
இவ்வுலகில் நீ வாழ்ந்தது போதுமென்று
காலன் கவர்ந்தானோ

பத்துமாதம் சுமந்தவள் பதறியழ
பாங்குடனே வளர்த்த தந்தை கதறியழ
பாசமுடன் உடன் பிறந்தோர் துடித்து நிற்க
பரிவோடு உறவினர் ஏங்கி நிற்க
பண்போடு பழகிய நண்பர்கள் தவித்து நிற்க
எல்லோரையும் ஏங்க வைத்து
ஏனையா ஏகதூரம் சென்றுவிட்டாய்.

இவரது ஆன்மா இறைவனில் சங்கமித்து நித்திய இளைப்பாற்றி அடைந்திட பிரார்த்தித்து நிற்கின்றோம்.

சென்யூட்,
இளவாலை

(11615)(6-9-8)

குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

### திருமதி நாகலிங்கம் மீனாட்சி



நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், முரசுமோட்டையில் வாழ்ந்தவரும், நல்லூரில் வசித்த வருமாகிய திருமதி நாகலிங்கம் மீனாட்சி 12.12.2011 திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா, பசுபதி (வட்டக்கச்சி) மற்றும் தம்பிஐயாJ.P (வட்டக்கச்சி), மேரி கிறிஸ்ரீன் தங்கம்மா (கனடா), சுந்தரேஸ்வரன் (முரசுமோட்டை), மனோன்மணி (நல்லூர்), செல்வராஜா (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்), கணபதிப்பிள்ளை (கனடா), பரமநாதன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், சற்குணவதி, சிவகாமி, வள்ளியம்மை, காலஞ்சென்ற மேரிஜோன் பப்ரிஸ்ற் மற்றும் செல்வராணி, நடராஜா, இன்பராணி, கௌரி, புஸ்பநிதி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 82/18, செட்டித் தெரு, நல்லூரில் இன்று (14.12.2011) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பி.ப.2 மணிக்கு செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

82/18, செட்டித்தெரு
நல்லூர், யாழ்ப்பாணம்.

(11652)(6-7-8)

தகவல்:
குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

### திருமதி நல்லூர் இராஜேஸ்வரி



வட்டு வடக்கு, கலைநகர், சித்தங்கேணியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லூர் இராஜேஸ்வரி 11-12-2011 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி. இராஜரட்ணம் தம்பதியரின் அன்பு மகளும், நல்லூரின் அன்பு மனைவியும், அழகேந்திரன் (பிரான்ஸ்), சத்தியமூர்த்தி (பிரான்ஸ்), சந்திரநிலா (லண்டன்), கௌரி (பிரான்ஸ்), சிவசக்தி (இலங்கை) ஆகியோரின் அன்புத் தாயும், தேவகலா (பிரான்ஸ்), தயாலினி (பிரான்ஸ்), தனராஜா (லண்டன்), அமுஸ்கரன் (பிரான்ஸ்), திருவருட் செல்வன் (அபுதாபி) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14-12-2011) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்புடும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டு வடக்கு,
கலைநகர், சித்தங்கேணி.

(11653) (7.9.10)

தகவல்:
குடும்பத்தினர்.

# என்னத்தைச்...

## ...சொல்ல?!

விதியே விதியே! தமிழரை நீ
என்னதான் செய்ய நினைத்தாய்

எம்மை அறியாமலே, எம் வாழ்வும், நம் அரசியலும், எம்மை ஆட்கொண்டுவிடுகிறது.

எமது அரசியல் எம் முன்னோரால் எவ்வாறு கொண்டு செல்லப்பட்டது என்பதைச் சற்றே இப்போது நோக்குவது பொருத்தம். எம் தலைவர்களாக கற்றறிந்த நாடும் ஏடும் போற்றும், நல்லவர்கள், வல்லவர்கள் அப்போது இருந்தார்கள்.




சேர் பொன். இராமநாதன் அவர்கள் உடன் பிறப்பு சேர் பொன். அருணாசலம், 'இஸ்பீக்கர்' துரைசாமி, அதன் பின் தந்தை செல்வநாயகம், தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலம், அஞ்சா நெஞ்சன் சி. சுந்தரலிங்கம், கு.வன்னியசிங்கம் ஆகியோர் காலத்துக்குக் காலம் சட்ட மன்றத்தை அலங்கரித்தனர். சட்ட மன்றத்தைச் சிறப்பித்த இவர்கள் சட்ட மேதைகளாகவும் இருந்தனர்.

அதையடுத்து திரு. அ.அமிர்தலிங்கம், திரு. மு.சிவசிதம்பரம், திரு. கதிரவேற்பிள்ளை, திரு.வி.நவரத்தினம், திரு.எம். பாலசுந்திரம், திரு. வி. குமாரசாமி போன்றவர்களும் சட்டவல்லுநராகவும் சரளமாக ஆங்கிலத்திலும் அருந்தமிழிலும், அதிரடிப் பேச்சால் ஒரே குரலில் பிரதிநிதிகளைத் தமது பேரறிவால் பெரும் சட்டவல்லமையால், சளைக்காத நெஞ்சுரத்தால், பெரும்பான்மை இனத்தவரின் பிரதிநிதிகளை மேவி நின்றனர். இத்துறையில் செனேற்றர் நடேசனும் பெரும்பங்காற்றினார்.

இதை ஏன் சொல்கிறேன் என்றால் நாடறியாத ஒரு செய்தியைச் சொல்லப் போகின்றேன். ஒரு நாள் தனக்கு வந்த கடிதத்தைப் படித்துவிட்டு அமரர் அமிர்தலிங்கம் புன்சிரிப்பை உதிர்த்து விட்டு, அங்கிருந்தவர்களிடம் அதனைக் காட்டினார். என்ன அற்புதம்; இல்லை அதிசயம் என்றும் சொல்லலாம். பதவியைத் துறந்து போன சபாநாயகர், திரு. ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ், எழுதியிருந்த கடிதம் அது.

அப்போது அமரர் அமிர்தலிங்கம், அவ்வேளை எதிர்க்கட்சித் தலைவராக இருந்திருக்கலாம் என்று ஞாபகம். அல்விஸ் எழுதியதை இங்கே தருகிறேன்:

''திரு. அமிர்தலிங்கம் அவர்களே! நீங்களும் உங்கள் சகாக்கள் திரு சிவசிதம்பரம், திரு. சி. கதிவேற்பிள்ளை, திரு.வி.நவரத்தினம், திரு.அ.சூசைதாசன், திரு க.துரைரத்தினம் போன்றவர்கள் பேசும்போது, நான் சபைக்குத் தலைமை வகிக்கும் பேறுபெற்றேன். உங்கள் ஒவ்வொருவரதும் பேச்சுக்கள் அத்தனையும் ஆழமான கருத்துக் கருவூலங்கள். இது உங்கள் சகாக்கள் அனைவருக்குமே பொருந்தும்; உங்கள் பேச்சைக் கேட்டு நிறையவே கற்றுக் கொண்டேன்''- என வாழ்த்தியது அந்தக் கடிதம்.

இவ்வாறாகச் சொல்லாற்றல், ஆழ்ந்த புலமை, அஞ்சா நெஞ்சம், அசையாத மன உறுதி கொண்டு நாட்டின் மாபெரிய நாடாளுமன்றை நானிலத்துக்கு அறிமுகம் செய்தவர்கள் இன்று ஒரு சேர அமரராகி விட்டனர்.

அவர்களைப் போன்ற தலைவர்கள் இன்றிருந்தால், எம்மைப் பகடைக்காய்களாக, எடுப்பார் கைப்பிள்ளைகளாக, ஏதிலிகளாக, பேதைகளாக எண்ணிக் கபடமான திட்டங்களால் நிலமும், இனமும் பறிபோயிருக்குமா? இந்த நீண்ட பரம்பரையில் இன்று எஞ்சி இருப்ப வர்கள் திரு. வீ. ஆனந்த சங்கரியும் திரு. இரா. சம்பந்தனும் தான்.




இன்றைய பிரதமர் டி.எம். ஜெயரத்னா பலமுறை கூறுவது போன்று, நம்நாட்டுப் பிரச்சினையை நாமே பேசித் தீர்க்க வேண்டும். அதைக் கனத்த குரலில், காரசாரமாக எடுத்துரைக்க ஒரு செனற்றர் நடேசன், ஒரு திருச்செல்வம், ஒரு ஜி.ஜி. பொன்னம்பலம், ஒரு அமிர்தலிங்கம் இல்லையே என்பதுதான் நம் நாட்டுப் பிரதமரின் ஆதங்கம் போலும். என் செய்வோம். ''விதியே விதியே தமிழர் சாதியை என் செய நினைத்தாய்?'' என்று பாரதியின் கவிதையைப் பாடிக் கொண்டு இருக்க வேண்டியதுதான் போலும்.

தீர்க்கதரிசி தந்தை சொன்ன வார்த்தையை நினைவு கூர்ந்து ''எம்மை இனி இறைவன்தான் காப்பாற்ற வேண்டும்'' எனக் கூறிக்கொண்டு இருக்க வேண்டியதுதானா?

*'' வெருவந்த செய்தொழுகும் வெங்கோலனாயின்
ஒரு வந்தம் ஒல்லைக்கெடும்''* *[குறள் 563]*



பிரசண்டன்

# நாடாளுமன்ற தெரிவுக் குழுவுக்கான பிரதிநிதிகளை நியமிக்கப் போவதில்லை

## ஐக்கிய தேசியக் கட்சி தகவல்

கொழும்பு,டிசெ.14

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கான பிரதிநிதிகளை நியமிக்கப் போவதில்லை என்று ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பிலான பேச்சு நிறைவடையும் வரையில், பிரதிநிதிகளை நியமிக்கப்போவதில்லை என்று கட்சி தீர்மானித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசுக்கும் இடையில் முதலில் இணக்கப்பாடு எட்டப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

நாடாளுமன்றத் தெரிவுக்கு தமது பிரதிநிதிகளை பெயரிடுமாறு அரசு அரசியல் கட்சிகளிடம் கோரியிருந்தது. இதன் படி, பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்ட போதிலும், கூட்டமைப்புக்கும் அரசுக்கும் இடையில் இணக்கம் ஏற்படுத்தப்படும் வரையில் பிரதிநிதிகள் பட்டியல் அரசுக்கு வழங்கப்படமாட்டாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவரான ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார். (ச)

# யுத்த வெற்றியின் நன்மைகளை அபிவிருத்தியால் அடையமுடியாது

## ஜயந்த தனபால தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.14

போரில் ஈட்டப்பட்ட வெற்றியின் பின்னர் கிடைக்கக்கூடிய நன்மைகளை வெறுமனே அரசியல் ஸ்திரத்தன்மை, அபிவிருத்தி என்பவற்றின் மூலம் அடையமுடியாது என்று இலங்கையின் இராஜதந்திரியான ஜயந்த தனபால தெரிவித்துள்ளார்.

டரான்பேரன்சி இன்டர்நெசனல் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வு ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு மற்றும் நீதியான நல்லிணக்கம், நட்புரீதியான சூழல் என்பவற்றின் மூலமே அந்த நன்மைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

நேர்மையான அரசு இரகசியமான யோசனையைத் தயாரித்து அதனை உயர்நீதி மன்றத்தின் அங்கீகாரத்துடன் நாடாளுமன்ற பெரும்பான்மையைப் பயன்படுத்தி நிறைவேற்ற முயற்சிக்காது என்று அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அனைத்துத் துறைகளிலும் இறைமை பாதுகாக்கப்படவேண்டும். இதனைப் பாதுகாக்க தவறுமிடத்து, இலங்கையின் மாற்றங்களுக்கான போராட்டங்களை தவிர்க்க முடியாது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# பிளாஸ்ரிக் பெட்டி திட்டத்தை கைவிட முடியாது

கொழும்பு,டிசெ.14

மரக்கறி மற்றும் பழங்களை பிளாஸ்டிக் பெட்டிகளில் களஞ்சியப்படுத்திக் கொண்டு செல்ல வேண்டும் என்ற திட்டத்தை கைவிடப் போவதில்லை என்று நுகர்வோர் மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெனாண்டோ தெரிவித்துள்ளார்.

உழவுஇயந்திரம் மற்றும் முச்சக்கர வண்டிகளில் மரக்கறி மற்றும் பழங்களைக் கொண்டு செல்லும்போது பிளாஸ்டிக் பெட்டிகள் பயன்படுத்தத் தேவையில்லை என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# பஸ் கட்டண அதிகரிப்புக் குறித்து பதில் வழங்காவிடில் நடவடிக்கை

## தனியார் பஸ் ஊழியர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு,டிசெ.14

பஸ் கட்டண உயர்வு குறித்து இன்று புதன்கிழமை அரசிடம் இருந்து உரிய பதில் கிடைக்கவில்லை என்றால், தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபடப் போவதாக இலங்கை தனியார் பஸ் ஊழியர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. பஸ் கட்டண உயர்வு குறித்து தீர்மானம் எடுக்க அரசுக்கு தாம் வழங்கியிருந்த ஒரு மாதகால அவகாசம் இன்றுடன் நிறைவடைவதாக அந்தச் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

சங்கத்தின் உயர்மட்டக்குழு இன்று எதிர்கால நடவடிக்கைகள் குறித்து தீர்மானம் எடுக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

பஸ் கட்டண உயர்வு குறித்து தனியார் போக்குவரத்து அமைச்சர் சீ.பீ.ரட்நாயக்க தெளிவான பதில் ஒன்றை அளித்துள்ள போதும், தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்பது நியாயமானதல்ல என்று அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் நிறுவன சம்மேளனத்தின் தலைவர்ஸ்டேன்லி பெனாண்டோ தெரிவித்துள்ளார். (ச)

# ஊடகவியலாளருக்கு வெள்ளை வானை வழங்கவும்

## ரணில் கோரிக்கை

கொழும்பு,டிசெ.14

ஊடகவியலாளர்கள் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக அரசினால் கொடுக்கப்படவுள்ள 12 லட்சத்தில் வெள்ளை வான்களைக் கொள்வனவு செய்து கொடுக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஊடகவியலாளர்கள் பாதுகாப்பான முறையில் பயணங்களை மேற்கொள்ள இந்த வெள்ளை வான்களின் மூலம் வழி ஏற்படுத்திக் கொடுக்குமாறு நேற்று செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் வைத்து எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

இன்றைய காலகட்டத்தில் நாட்டில் கடத்தல் சம்பவங்களுக்கு வெள்ளைவான் பயன்படுத்தப்படுகிறது என்றொரு நிலை ஏற்பட்டுள்ளது. ஊடக சுதந்திரம் பறிபோயுள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் ஊடகவியலாளர்களுக்கு நாட்டில் தொடர்ந்தும் அச்சுறுத்தல் நிலவுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவுக்கு என்ன நிகழ்ந்தது என்று இதுவரையில் தெரியாதுள்ளதாகவும் இணையத் தளங்களை தடை செய்து ஊடக சுதந்திரத்துக்குத் தீங்கு விளைவிக்கின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# பெயர் நீக்கப்பட்டாலும் வரலாற்றில் இடம்பிடிப்பு

## சோமவன்ஸ தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.14

இலங்கை இராணுவ வரலாற்றுப் புத்தகத்திலிருந்து சரத் பொன்சேகாவின் பெயர் நீக்கப்பட்டாலும், நாட்டுக்காக அவர் வகித்த வரலாற்றுப் பாத்திரத்தை மக்கள் மனங்களிலிருந்து ஒருபோதும் நீக்கி விடமுடியாது என்று ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவ வரலாற்றுப் புத்தகத்திலிருந்து முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் பெயர் நீக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்துக்கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா உலக வரலாற்றில் இடம்பிடித்துவிட்டார்.

எந்தவொரு இடத்தில் இருந்தும் அவரின் பெயரும், புகழும் நீக்கப்பட்டாலும், மக்களின் மனங்களில் சரத் பொன்சேகா இன்றும் உள்ளார். தாய்நாட்டுக்காக அவர் போராடியதை மக்கள் இன்றும் நினைவுகூருகின்றனர்.

சரத் பொன்சேகா தற்போது அரசியல் ரீதியாகப் பழிவாங்கப்படுகின்றார். அவரின் பெயர் நீக்கப்பட்டதிலும் ஏதோ சூழ்ச்சி உள்ளது என்பது மட்டும் தெட்டத் தெளிவு - என்றார். (ச-சி)

மலேசிய EVERSENDAI வியாபார குழுமத்துடன் இணைந்த

# டோஹா கட்டார்




## இளைக்கு வெற்றிடம் 100

நல்ல வசீகரமான தோற்றமுடைய 19 -40 இடையில்
தமிழ் பேசத்தெரிந்தவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

# கை உதவியாளர்கள் (ஆண்)

சம்பளம்
QR 600 +இலவச சாப்பாடு +OT

- ஒப்பந்தக்காலம் 02 வருடம்
- உணவு, தங்குமிடம், மருத்துவம், போக்குவரத்து இலவசம்.
- நாளொன்றுக்கு 08 மணித்தியால வேலை மற்றும் மேலதிகநேரம்
- ஒப்பந்த நிறைவில் திரும்பி வர விமான டிக்கட் இலவசம்.
- ஏனையவை கட்டார் தொழில் சட்டத்திற்கேற்ப

நேர்முகப்பரீட்சை
டிசம்பர் 16 வெள்ளிக்கிழமை 17 சனிக்கிழமை
தினங்களில் மட்டும்
**Green Grass** Hotel & Restaurant
No.33, Aseervatham Lane, Hospital Road, Jaffna.
மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் நடைபெறும்

AL/2541/Advt/16/11

HOTLINE
**072 712 4415 / 072 312 4409**




அறவீடுகள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவகம் அனுமதித்த கட்டணம் மாத்திரமே



## இக்ரா வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

இல: 634 1/1 - 1/2, மருதானை வீதி, மருதானை, கொழும்பு-10. (ஆனந்தாக்கல்லூரிக்கு முன்னால்)
தொலைபேசி : 0094 115 544 333  தொலை நகல் : 0094 115 544 337

License No. 2541

E-mail : info@ikralk.com

# தீர்வுக்கான எந்தச் சமிக்ஞையையும் இலங்கையில் காணமுடியவில்லை

## பிரிட்டன் நாளேடு தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.14

இலங்கையில் போர் முடிந்து விட்டது. விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டுவிட்டனர். ஆனாலும் அரசியல் தீர்வு பற்றிய எந்தச் சமிக்ஞையையும் காணமுடியவில்லை - என்று பிரிட்டன் நாளேடான 'இன்டிபென்டன்ட்' செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் 1995 தொடக்கம் போரின் இறுதிக்கட்டம் வரை - போர் சாராத பணிகளில் ஈடுபட்ட மூத்த அதிகாரி ஒருவரே இவ்வாறு கூறினார் என்று இன்டிபென்டன்ட் நாளேடு தெரிவித்துள்ளது.

தனது பெயரையோ, செவ்வி வழங்கிய இடத்தையோ குறிப்பிட வேண்டாம் என்று கேட்டுக்கொண்ட அவர், விடுதலைப் புலிகள் அமைப்பில் வகித்த பங்கு காரணமாக அடுத்த ஆண்டில் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டை எதிர் கொள்ளவுள்ளார்.

அரசியல் தீர்வு காண்பதே முக்கியமானது. போர் முடிந்துவிட்டது. விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டுவிட்டனர். ஆனாலும் அரசியல்தீர்வு பற்றிய எந்த சமிக்ஞையையும் இலங்கையில் காணமுடியவில்லை.

அவர்கள் இணக்கப் பேச்சு நடத்துவதாகக் கூறினார்கள். ஆனால் மக்கள் திருப்தி கொள்ளவில்லை.

எமக்கு ஓர் அரசியல் தீர்வு தேவை. சிங்கள மக்களின் ஆதரவு இன்றி தமிழ்மக்களால் ஓர் அரசியல் தீர்வைப் பெறமுடியாது என்றும் அவர் கூறியுள்ளார் என்று குறித்த நாளேடு தெரிவித்துள்ளது. (ச)

# மஹிந்தவுக்கு நோபல் பரிசு வழங்கக் கோரிக்கை

கொழும்பு,டிசெ.14

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நோபல் சமாதானப் பரிசு வழங்கப்பட வேண்டும் என்று ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினரான ஏ.எச்.எம்.அஸ்வர் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

முப்பதாண்டு கால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து நாட்டில் அமைதியை ஏற்படுத்தியதற்காகவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நோபல் சமாதானப் பரிசு வழங்கப்பட வேண்டும் என்று அவர் கோரியுள்ளார். (ச)

# கைதிகளுக்கு மேலும் வசதி கிடைக்க நடவடிக்கை எடுப்பேன்

## நீதி அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.14

சிறைச்சாலைகளில் நிலவும் இட நெருக்கடியைக் குறைத்து கைதிகளுக்கு மேலும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பில் அதற்கு பொறுப்பான அமைச்சர் சந்திரசிறி கஜதீரவுடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வேன் -இவ்வாறு நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தம்மைச் சந்தித்த செஞ்சிலுவை சர்வதேச சங்கத்தின் இலங்கைக்கான தலைமை அதிகாரி யிவெஸ்கி யோவனோனியிடம் தெரிவித்துள்ளார்.

செஞ்சிலுவை சங்கத்தின் இலங்கைக்கான தலைமை அதிகாரி யிவெஸ் கியோவனோனி தமது அமைப்பின் உயர் அதிகாரிகளான ரல்ப் வெஹ்பி, லையின் கிரஹம் ஆகியோருடன் நீதி அமைச்சர் ஹக்கீமை அவரது அமைச்சில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது, சிறைச்சாலைகளில் நெரிசல் காணப்படுவதன் காரணமாக கைதிகளும், தடுத்து வைக்கப்பட்டிருப்போரும் அசௌகரியங்களுக்கு ஆளாக நேரிடுவதால் அவர்களுக்கு போதிய இடவசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படுவதன் அவசியத்தை அமைச்சருக்கு அவர்கள் சுட்டிக்காட்டினார்.

சிறைச்சாலை சீர்திருத்தங்கள் பற்றி கரிசனை செலுத்தப்படுவது மிகவும் முக்கியமானது என்றும் அவர்கள் கூறினர். மனிதாபிமான அடிப்படையில் இந்த விவகாரம் அணுகப்பட வேண்டும் என்று செஞ்சிலுவைச் சங்க உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

சிறைக்கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதன் காரணமாக இடவசதியும், போதிய காற்றோட்டமும் கொண்ட அறைகளில் அவர்கள் தங்க வைக்கப்படுவது அவசியம் என்பதை வலியுறுத்திய செஞ்சிலுவை சங்க உயர் அதிகாரி, சிறைச்சாலைகளில் நிலவும் நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்கும் குறைப்பதற்கும் இலங்கை அரசுடன் இணைந்து செயலாற்றுவதற்கு தமது அமைப்பு ஆலோசனைகளை முன்மொழிந்து அதற்கான செயல்திட்டமொன்றை தயாரித்திருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலை சீர்திருத்தங்கள் அவ்வப்போது மேற்கொள்ளப்படுவது பற்றி தெரிவித்த அமைச்சர் ஹக்கீம், முன்னர் அது நீதியமைச்சின் கீழ் இருந்ததாகவும், பின்னர் அதற்கென தனியான ஓர் அமைச்சு ஏற்படுத்தப்பட்டு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவின் பொறுப்பில் சிறைச்சாலைகள் இருப்பதாகவும், தாம் அவருடன் அதைப் பற்றி கலந்துரையாடி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவலாம் என நம்பிக்கை தெரிவித்தார். சிறைச்சாலைகளில் சன நெரிசலையும், இடநெருக்கடியையும் குறைக்க உள்ள ஏற்பாடுகள் அனைத்தையும் சிறைச்சாலைகள் சீர்திருத்த அமைச்சு மேற்கொள்ள வேண்டியிருப்பதாகவும், நீதி அமைச்சை பொறுத்தவரையில் நிறுவன ரீதியான சீர்திருத்தங்களை மட்டுமே மேற்கொள்ள முடியுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-சி)


**Pharmacy Assistant (1 Yr)**

தனியார் மருந்தகங்களிலும்,மருத்துவமனைகளிலும்(வெளிநாட்டிலும்) வேலை வாய்ப்பை நாடும் அனைவரும் கற்கக்கூடிய கல்வி.

**Knowledge Universe**
Professional Education by Graduate Professionals
No 75,Temple Road,Jaffna.
www.kugroup.info
**K.U-Education** -"Practical and Result Oriented." Tel:0776458253



**புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன**

➤ GRADE 10 & 11 இற்கான ICT
➤ A/L இற்கான GIT & IT

சிறுவர்களுக்கான புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன

Date :- 17-12-2011
Time :- 09.00 Am

Stage - 4 (Gr - 8 to 9)
Stage - 3 (Gr - 6 to 7)
Stage - 2 (Gr - 4 to 5)
Stage - 1 (Gr - 1 to 3)

பதிவுகளுக்கு முந்துங்கள்.
மேலதிக விபரங்களுக்கு
021-2219282
077-6621745



BIT CORNER
Professional ICT Education
No-14, Palaly Road, Thirunelvely Juncion, Jaffna.



**கண்ணீர் அஞ்சலி**

தாதிய உத்தியோகத்தர் நலன்புரி கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் **நல்லையா நற்குணராசா** அவர்களின் பாசமிகு தாய்

**நல்லையா நவமணி** அவர்களின்

மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(11605)(6-9-8)

தாதியர் நலன்புரி கூட்டுறவுச் சங்கம்.



**5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

அமரர் **நமசிவாயம் சண்முகரட்ணம்**

(இளைப்பாறிய லங்கெம் லிமிட்டட் விற்பனைப் பிரதிநிதி யாழ். பொதுநூலக நிலத்தோற்ற வடிவமைப்பாளர்)

மலர்வு 26 . 11 . 1939

உதிர்வு 08 . 12 . 2006



திதி:14.12.2011

அன்பின் தீபமானவரே
புன்னகையுடன் உலாவந்த நிழலே
பண்பின் உயர்விடமாய்
பாசத்தின் மகுடமாய்
பரிவுடனே எமை வளர்த்து
பாரினிலே உயர வைத்தீர்!
அன்பின் உறைவிடமே
ஆண்டு மூன்று உருண்டு ஓடினும்
அப்பாவே நீ எமக்கு
அணையாத தீபம்தான்

(11360)(3.6.9)

என்றும் உங்கள் நீங்காத நினைவுகளுடன் வாழும்
மனைவி,பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சொர்ணமகால்
மல்வம்
உடுவில், சுன்னாகம்.



**2ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

அமரர் **கந்தையா குணபாலசிங்கம்**

மலர்வு: 1940.03.13



உதிர்வு: 2009.12.05

எமக்குயிராய் இருந்தவரே
குடும்பச் சுமை தாங்கி
மெழுகாய் கரைந்தவரே
பூமிக்குப் பாரம் என்றா
விண்ணுலகு நீர் போனீர்
ஆண்டிரண்டாகியும் ஆறவில்லை
எண்ணெயில்லாத் திரியாய்
ஏங்கித் துடித்துப் பிரார்த்திக்கின்றோம்
உங்கள் ஆத்ம சாந்திக்காக.

முல்லையடி,
பளை.

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(7871)(6.8.7)



**காணிதேவை**

1. ஏ- 9 வீதியில் (247 KM - 261 KM) கிளிநொச்சியில் தேவை.
02. ஏ -9 வீதியில் (220KM - 224KM) மாங்குளத்தில்
1 ஏக்கருக்கு மேற்பட்ட காணிதேவை
தொடர்பு: 0779155756



**தலைநகரில் தங்குமிட வசதி**

Rooms A/C, Non A/C, Attached Bath room, T.V, புகையிரத நிலையம் , பஸ்தரிப்பு நிலையம் , பொதுச் சந்தை மிக அருகில், சகல வசதிகளையும் கொண்ட (New Oasiss rest) ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள். முன்பதிவு ஏற்றுக் கொள்ளப்படும்.

**இல.135, மெலிபன் வீதி, கொழும்பு-11**
தொ.பே: 0112338437, 0112323449, 0112470209.

(10693)(6-19-8)



**காணி விற்பனைக்கு**

மீசாலை மடத்தடி வீதியில் ஐயா கடையிலிருந்து ஏறத்தாழ 200m தூரத்தில் நிலப்பரப்பு 10 விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக் குண்டு.
தொடர்பு: 0776090931



**பணிப்பெண் தேவை**

நாள்தோறும் வந்து போய் வேலை செய்யக் கூடிய (வீட்டுவேலை) பணிப் பெண் தேவை. சம்பளம் நாளுக்கு ரூபா 350/=
தொடர்பு: 0217900637

# வெளிநாட்டுக்குச் செல்லும் பணிப்பெண்களின் வயதெல்லை 30 ஆக உயர்த்துவதற்கு நடவடிக்கை

## டிலான் பெரேரா தெரிவிப்பு

மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்லும் இலங்கை பணிப் பெண்களின் வயதெல்லையை 30ஆக அதிகரிக்க எதிர்பார்த்துள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் நலன்புரி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க நேற்று முன்தினம் நாடாளுமன்றில் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

வெளிநாடுகளுக்கு வேலை பெற்றுச் செல்லும் இலங்கை பணிப்பெண்களின் வயதெல்லையை 18இல் இருந்து 21ஆக உயர்த்த கடந்த காலங்களில் தான் நடவடிக்கை எடுத்ததாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் அந்த வயதெல்லையை 30ஆக அதிகரிக்க உள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கையில் செயற்படும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு கிளை நிலையங்களை தரம் பிரிக்கவுள்ளதாக அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு கிளை நிறுவனங்களின் செயற்பாடுகள் குறித்து அரசு அவதானத்துடன் இருப்பதாக அமைச்சர் நாடாளுமன்றில் நேற்று முன்தினம் சுட்டிக்காட்டினார். (வ)

# இலங்கைத் தமிழர் படுகொலை; பிரிட்டன் பிரஜைகளுக்கு சிறை

பிரிட்டனில் சிசிரிவி (CCTV) எனப்படும் பாதுகாப்பு கமராவில் வர்த்தகரின் பிள்ளை பார்த்துக் கொண்டிருந்தபோது இலங்கை பிரஜையான அந்தப் பிள்ளையின் தந்தையை கொலை செய்த நான்கு பிரிட்டன் பிரஜைகளுக்கு ஆயுள் தண்டனை விதித்து பிரிட்டன் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பிரிட்டனில் தனது சொந்த வர்த்தக நிலையத்தில் வைத்து 48 வயதுடைய சுப்பையா தர்மசீலன் என்ற நபர் கடந்த வருடம் நவம்பர் மாதம் 27 ஆம் திகதி நால்வர் கொண்ட குழுவால் அடித்து, உதைத்து, வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

இரட்டையர்களான லேன் மற்றும் ஜோன் மீனன், எந்தனி பாய்லிஸ் மற்றும் அவருடைய இளைய சகோதரர் ஆகிய நால்வருக்கு 20 - 27 வருட ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கிங்ஸ்டன் பகுதியில் வைத்து மிகவும் கொடூரமான முறையில் இந்தக் கொலை புரியப்பட்டுள்ளதாக பேர்மிங்காம் கிரவுன் நீதிமன்ற நீதிபதி வைன் வில்லியம்ஸ் தெரிவித்துள்ளார்.

கொலையை தர்மசீலனின் பிள்ளை பாதுகாப்பு கமராவில் பார்த்ததால் அவர் மன உளைச்சலுக்குட்பட்டிருப்பார் என்று நீதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் தர்மசீலனை சிறிய கத்தியால் நெஞ்சில் குத்திய லேன் மீனனுக்கு 27 வருட சிறை தண்டனையும் ஜோன் மீனனுக்கு 24 வருட சிறை தண்டனையும் ரியன் மற்றும் பயிலிஸ்ஸுக்கு முறையே 20 மற்றும் 21 வருட சிறை தண்டனையும் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (வ)

# சமூகமட்ட பாதிப்புக்கள் குறித்த கலந்துரையாடல் இன்று நல்லூரில்

யாழ்ப்பாணம், டிசெ.14

அபிவிருத்திக்கான சமூக அமைப்புகளின் வலையமைப்பின் ஏற்பாட்டில் ''நிகழ் காலத்தில் எமது சமூகத்தினர் எதிர் கொள்கிற பிரச்சினைகளும் சமூகப் பாதிப்புக்களும் அவற்றிலிருந்து மீளும் வழிமுறைகளும் ஆலோசனைகளும்'' எனும் தொனிப் பொருளில் கலந்துரையாடல் ஒன்று இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை நல்லூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் வி.இந்திரன், நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன், மதுவரித் திணைக்கள உதவி ஆணையாளர் கிரிஸ்டி யோசவ், சொண்ட் நிறுவனத்தின் தலைவர் செந்தூராசா ஆகியோரும் பிரதேச மட்ட அதிகாரிகளும், சமூகத் தலைவர்களும் கலந்து கொண்டு கருத்துரைகள் வழங்கவுள்ளனர்.

ஆர்வமுள்ள அனைத்து சமூகத்தினரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (வ-311)

# அளவெட்டி மேற்கில் டெங்கு தடுப்பு தீவிரம்

அளவெட்டி மேற்கு செபஸ்தியார் கோயிலடி பகுதியில் டெங்கு நோயாளி இனங்காணப்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதி தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் சுகாதார பரிசோதகர் பணியாள்கள் மூலம் புகையூட்டல் நிகழ்வு இடம்பெற்றுள்ளது. அத்துடன் ஒலி பெருக்கி மூலம் டெங்கு தொடர்பான விழிப்புணர்வு சம்பந்தமாக பொது அறிவித்தல் மேற்கொள்ளப்படுகின்றது என்று பிரதேச சுகாதார பரிசோதகர் தெரிவித்தார். (வ-36)

# சாவகச்சேரி வைத்தியசாலைகளில் கர்ப்பிணிகளுக்கான பல் கிளினிக்

தென்மராட்சி, டிசெ.14

கர்ப்பிணிகளுக்கான பல் சுகாதாரக் கிளினிக் சாவகச்சேரி வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கர்ப்பிணிகள் கிளினிக்குகளில் வைத்திய அதிகாரி மற்றும் குடும்பநல உத்தியோகத்தர் ஆகியோரால் சிபார்சு செய்யப்பட்டும் கர்ப்பிணிக்கென பல் சுகாதார கிளினிக் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பிரதி புதன்கிழமை தோறும் வைத்தியசாலை பல் சிகிச்சைப் பிரிவில் சிபார்சுக் கடிதத்துடன் வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கர்ப்பிணிகளுக்கான பல் சுகாதார சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்க யாழ். பிராந்திய பல் சுகாதாரப் பணிப்பாளர் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-207)

# கரைப்பிரான் ஆலயத்தில் விநாயக விரத பூசை

நவாலி, டிசெ.14

ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆதிவிநாயகர் ஆலயத்தில் விநாயக விரத கஜமுக அசுர சம்ஹார கணபதி ஹோமப் பெருவிழா கடந்த ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து இருபது தினங்கள் நடைபெறும் இந்த நிகழ்வில் தினமும் விசேட அபிஷேகம், பூசை பிள்ளையார் புராணப் படிப்பு என்பன இடம்பெற்று வருகின்றன.

எதிர்வரும் 29 ஆம் திகதி கஜமுகாசூர சம்ஹாரமும் 30 ஆம் திகதி மகா கணபதிஹோமமும் இடம்பெறும். (வ-100)




வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக (நிர்வாகம்) சிறப்பாகப் பணியாற்றி எல்லோரது அன்பையும், மதிப்பையும் பெற்று 12.11.2012 அன்று மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராக (நிர்வாகம் ) பதவி உயர்வு பெற்று வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்துக்கு செல்லும்
செல்லத்துரை உதயகுமார்
அவர்களுக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.
அவர் தனது பணியில் மேன்மேலும் பதவி உயர்வு பெற்று சிறப்பான சேவையை ஆற்ற எல்லோரது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

ம. ஜெயசங்கர்
சி. சந்திரகுமார்
தே. வாசுதேவன்
பா.பவகுகன்
ப. தெய்வேந்திரன்

வலயக் கல்வி அலுவலகம்,
வடமராட்சி.
(சி/6866)(3.6.7)

பிறந்தநாள் வாழ்த்து




14.12.2011

இன்று தங்களது பிறந்த நாளைக் கொண்டாடும்
திரு.திருமதி செபமாலை
அன்ரன்யூட் எவ்றஸ்ரா
தம்பதியரின்
செல்வப் புதல்வர்கள்
ஜோயல், ஜெனுசன்
ஆகியோரை
எல்லாச் சிறப்பும் பெற்று
வாழ வாழ்த்துவோர்:

அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அம்மையா, அம்மம்மா, பெரியப்பாமார் குடும்பம், மாமாமார் குடும்பம், அன்ரா குடும்பம் மற்றும் உற்றார், உறவினர்

பாதர் பெரியப்பா
டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-6854)(1,6)

Midea Electro Mart
விசேட விலைக்கழிவும் இலவச மின் உபகரணங்களும்
Midea PC Show Room
Authorized Dealer for Abans Ltd.
08.12.2011 முதல் 31.12.2011 வரை




Abans நிறுவனத்தின் உத்தரவாதத்துடன் இலவச விநியோக சேவை.
www.Mideamart.com
No.1-1 1-H, Stanley Road, Jaffna.
T.P:021 - 222 4566 Fax.021 222 1646
e-mail: midea21@gmail.com
No.4, New market, chavakachcheri.
T.P:021 227 0268, Fax: 021 227 0129

# தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் அரிசி, கோதுமை மாவுக்கு அதிக விலை

பண்டாரவளை,டிசெ.14

பண்டாரவளை, பூனாகலை மற்றும் அம்பட்டிகந்த பெருந்தோட்டங்களில் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் அரிசி மற்றும் கோதுமை மாவுக்காக அறவிடப்படும் பணத்தில் மோசடி நடைபெறுகின்றது. எனவே, இதனை உடனடியாகத் தடுத்து நிறுத்துமாறு மலையக தொழிலாளர் முன்னணியின் பதுளை பிராந்திய நிர்வாக அதிகாரி கே. பெரியசாமி சம்பந்தப்பட்ட தோட்ட அதிகாரிகளிடம் கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தோட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தங்களது தோட்டத்தினூடாக தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் அரிசி மற்றும் கோதுமை மா ஆகியவற்றுக்கு அறவிடப்படும் பணம், சந்தை விலையைவிட கிலோவுக்கு 6 ரூபா மேலதிகமாக அறவிடப்படுவதாக தொழிலாளர்கள் எம்மிடம் முறையிட்டுள்ளனர். இந்த விலை அதிகரிப்பு நாட்டிலுள்ள நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையின் சட்ட திட்டங்களுக்கு முற்றிலும் புறம்பானதாகவே உள்ளது.

இத்தகைய மோசடிகளைத் தவிர்க்கும் பொருட்டே தொழிலாளர்கள், தோட்ட நிர்வாகத்தினூடாக வழங்கப்படும் தானிய வகைகளுக்குப் பதிலாக மாதாந்தம் முற்கொடுப்பனவுத் தொகையொன்றை வழங்குமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

நிர்வாகம் அதற்கு செவிசாய்க்காமல் தானிய விநியோகத்தை மேற்கொள்வது ஏன் என்பது பெரும் புதிராகவேயுள்ளது- என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# கிழக்கின் தலைநகர் மட்டக்களப்பு தான்

## அமைச்சர் அதாவுல்லா கூறுகிறார்

மட்டக்களப்பு,டிசெ.14

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை என்று மூன்று மாவட்டங்களை கிழக்கு மாகாணம் கொண்டிருந்தாலும் மட்டக்களப்புத்தான் மையப்பகுதியாகக் காணப்படுகின்றது. எனவே, மட்டக்களப்புத்தான் கிழக்கு மா்காணத்தின் தலைநகர் என்று உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா தெரிவித்துள்ளார்.

வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மட்டக்களப்பில் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாகத்தான் மட்டக்களப்பில் இருந்த பல தலைமை அலுவலகங்கள் திருகோணமலைக்கு மாற்றப்பட்டன.

ஆனால் இன்று கிழக்கு மாகாணம் ஏனைய மாகாணங்களைவிட ஓர் அழகானதும் சமாதானமுமான மாகாணமாகக் காணப்படுகின்றது.

எனவே, இந்தச் சூழ்நிலையிலே கிழக்கு மாகாணத்துக்கு மட்டக்களப்புத்தான் தலைநகராக அமையும். எதிர்காலத்தில் பெரும்பாலான தலைமை அலுவலகங்களை மட்டக்களப்புக்கு மாற்ற வேண்டும் - என்றார். (ச)

# ஒரே குடும்ப உறுப்பினர் ஐவருக்கு மரண தண்டனை

தங்காலை,டிசெ.14

ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 5 பேருக்கு கொலை செய்த குற்றத்திற்காக தங்காலை மேல் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

1996 ஆம் ஆண்டு பெலியத்தையில் இடம்பெற்ற கொலைச் சம்பவமொன்று தொடர்பான வழக்கிலேயே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (ச)



மூதூர் கிழக்கு, சேனையூரில் நிறுவப்பட்ட ஆரம்ப வைத்திய பராமரிப்பு நிலையத்தை கிழக்கு மாகாண சுகாதார விளையாட்டுத் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் எம்.எஸ்.சுபைர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை திறந்து வைத்துள்ளார்.

# இந்திய கைத்தொழில் பேட்டையால் ஹோட்டன் சமவெளிக்குப் பாதிப்பு

இந்தியாவின் கைத்தொழில் பேட்டையிலிருந்து வெளியேறும் வாயுக்கசிவுகளே ஹோட்டன் சமவெளி மாசுபடுவதற்கான பிரதான காரணம் என்று ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது என்று சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் விவசாய பீட விரிவுரையாளர் கலாநிதி பிரியந்த யாப்பா தெரிவித்துள்ளார்.

ஹோட்டன் சமவெளியிலிருந்து எடுக்கப்பட்ட மண் துணிக்கைகள் விரிவான ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டன என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

சமவெளியைச் சூழவுள்ள நகரங்களில் ஏற்பட்டுள்ள வளிமண்டல மாசடைவுகளும் ஹோட்டன் சமவெளியை பாதிக்கின்றன என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொடர்ந்து பெய்துவரும் மழையினால் மண்ணில் இரும்புத் தாதுப்பொருள்கள் கலப்பதாகவும் கலாநிதி பிரியந்த யாப்பா மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# பிரதேச சபை உறுப்பினர் பாம்பு தீண்டி மரணம்

மட்டக்களப்பு,டிசெ.14

மட்டக்களப்பு, பட்டிப்பளை பிரதேசசபையின் உறுப்பினர் பாம்பு தீண்டி உயிரிழந்துள்ளார்.

கடந்த ஞாயிற் றுக்கிழமை காலை இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் பட்டிப்பளை, வைரவர் கோவில் வீதியைச் சேர்ந்த ப.கபிலன் (25வயது) என்னும் இளம் குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

இந்த நபரை பாம்பு தீண்டிய நிலையில் மட்டக் களப்பு போதனா வைத்திய சாலைக்கு கொண்டு செல்லும்போது இடைவழியில் அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ச)

# பெரும் போகத்தில் நாடு முழுவதும் ஒரு லட்சம் ஏக்கரில் நெற்செய்கை

மூதூர், டிசெ.14

வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் தரிசாகக் காணப்படுகின்ற வயல் நிலங்களைப் பயனுள்ள நிலைக்கு மாற்றும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் கடந்த பெரும்போகத்தில் மாத்திரம் ஒரு லட்சம் ஏக்கரில் புதிதாக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டதாக கமநல சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தரிசாகக் காணப்படும் வயல் நிலங்கள் கட்டம் கட்டமாக நெற்செய்கைக்கு உட்படுத்தப்படுவதுடன் விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகளுக்கு உதவிகளை வழங்கவும் எதிர் வரும் சிறுபோகத்தின்போது இதற்கான விசேட திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

'பயிர் வளர்ப்போம் நாட்டைக் கட்டியெழுப்புவோம்' என்னும் திட்டத்தின் அடிப்படையில் நாட்டிலுள்ள மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்திசெய்யும் நோக்கில் கடந்த பெரும்போகத்தின் போது செய்கை பண்ணப்படாத வயல் நிலங்கள் கூட இப்போகத்தின் போது நெற்செய்கைக்கு உள்ளாக்கப் படவுள்ளதாக கமநல சேவைக் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (ச)

# பிளாஸ்ரிக் சட்டத்துக்கு எதிராக தம்புள்ளை வர்த்தகர்கள் எதிர்ப்பு

தம்புள்ள,டிசெ.14

தம்புள்ள பகுதியில் மரக்கறி வர்த்தகர்கள்,விவசாயிகள் ஆகியோர் நேற்று செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மரக்கறிகளை வாகனங்களில் ஓரிடத்தில் இருந்து வேறு இடத்துக்கு கொண்டு செல்லும்போது அவற்றுக்கான பிளாஸ்ரிக் கூடைகளைக் கட்டாயம் பயன்படுத்த வேண்டும் என்ற அரச உத்தரவை எதிர்த்தே இந்த ஆர்ப்பாட்டத்தில் இவர்கள் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் - கண்டி வீதியான ஏ 9 வீதியை மறித்து அதில் மரக்கறிகளைக் கொட்டி சுமார் 1000 விவசாயிகள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அட்டைப் பெட்டிக்ள் மற்றும் சாக்குகளில் மரக்கறிகளை கொண்டு செல்லும் போது அவை பழுதடைவதை தடுப்பதற்காகவே இந்தப் பிளாஸ்ரிக் கூடைகளை அரசு அறிமுகப்படுத்தியது.

ஆனால், அந்தப் பிளாஸ்ரிக் கூடைகள் செலவு அதிகமாகும். அவற்றை லொறிகளில் ஏற்றும்போது அவை அதிக இடத்தைப் பிடிப்பதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (ச)

# மலசலகூடத்தில் இருந்து மனித எலும்புகள் மீட்பு

கம்பளை, டிசெ.14

கொத்மலையில் அமைந்துள்ள மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான விடுதியொன்றின் மலசல கூடத்திலிருந்து மனித எலும்புகள் மீட்கப்பட்டுள்ளன என்று கம்பளைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை ஊழியர்கள் சிலர் இந்த விடுதியைச் சுத்தம் செய்துகொண்டிருந்தபோது விடுதியின் மலசல கூடத்திற்குள் சில மனித எலும்புகள் காணப்பட்டதை அடுத்து அவர்கள் தமக்கு தகவல் வழங்கினர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (ச)

# நிபந்தனையில் இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் கல்முனை வலயத்துக்கு உள்வாங்க கோரிக்கை

கல்முனை கல்வி வலயத்திலிருந்து இரு வருட ஒப்பந்த அடிப்படையில் வெளி வலயங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் தமது ஒப்பந்த காலம் முடிவடைந்து விட்டதால் தம்மைக் கல்முனை வலயத்துக்கு உள்வாங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலதிக ஆசிரியர் இடமாற்றம் எனும் அடிப்படையிலும் இரு வருட நிறைவில் மீண்டும் வலயத்துள் உள்வாங்கப்படுவரென்ற உத்தரவாதம், நிபந்தனை அடிப்படையிலும் கல்முனை கல்வி வலயத்திலிருந்து 134 ஆசிரியர்கள் 2009 ஆம் ஆண்டில் வெளிவலயங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர்.

அப்போதைய கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எச்.கே.யூ.கே. வீரவர்த்தன குறித்த இருவருட நிபந்தனைக்கமைய இடமாற்றம் வழங்குமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு விடுத்த பணிப்புரைக்கமைய இந்த ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டனர்.

தற்சமயம் இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களின் உத்தரவாதம் வழங்கப்பட்ட நிபந்தனைக்காலமான இரு வருடங்கள் பூர்த்தியாகி மேலும் ஆறு மாதங்கள் கடந்தும் இவர்களில் சுமார் 106 ஆசிரியர்கள் இன்றும் வெளி வலயப் பாடசாலைகளிலேயே கடமையாற்றி வருகின்றனர். இடமாற்றம் செய்யப்படும் பொழுது தமக்குப் பொறுப்பு வாய்ந்த கல்விச் செயலாளராலும் அதிகாரிகளாலும் அளிக்கப்பட்ட உத்தரவாதம், நிபந்தனை தொடர்பில் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு மௌனம் காத்து வருவதாக இந்த ஆசிரியர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (ச-30)

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
சில விடயங்களில் தந்திரமாகச் செயற்பட்டு கூடுதல் ஆதாயம் பெறுவீர்கள். கணவன், மனைவி இடையே ஒற்றுமை அதிகரிக்கும். எந்த வேலையையும் ஈடுபாட்டோடு செய்து முடிப்பீர்கள். பெண்கள் மகிழ்ச்சி, சந்தோஷமாகக் காணப்படுவர். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். பண உதவி கிடைக்கலாம்.

**இடபம்:**
உறவினர் ஒருவரின் அன்புக் கட்டளைகளுக்கு ஆள்பட்டு நடப்பீர்கள். உடல் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள். எதிர்ப்புகளை சமாளிக்க நேரிடலாம். தந்தை வழி உறவுகளால் தொல்லை உண்டு. ஆரம்பித்த வேலை ஒன்றை இடையில் விட்டுவிட நேரிடலாம். அயலார் விவகாரங்களில் மூக்கை நுழைக்க வேண்டாம்.

**மிதுனம்:**
நினைத்த காரியங்களைச் சாதிப்பீர்கள். வியாபாரிகளுக்கு கடன் மிகுதிகள் வசூலாகும். மூத்த சகோதரர்கள் உங்களிடம் பாசமாக நடந்து கொள்வர். சுபகாரிய விடயங்களில் முன்னேற்றம் உண்டு. ஆபத்தான பொருள்களைக் கவனமாகக் கையாள வேண்டும். பெரிய பிரச்சினையாகி விடுமோ என்று பயந்த விடயம் ஒன்று பிசுபிசுத்துப் போகலாம்.

**கடகம்:**
செலவுகளைக் குறைத்து சேமிப்பை அதிகரிக்க வேண்டிய நாள். யாரையும் பரிகாசம் செய்யும் வகையில் பேச வேண்டாம். உடன் பிறப்புக்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். பயணங்களின்போது பொருள்களின் மீது அதிக கவனமாக இருக்க வேண்டும். சில விடயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம்.

**சிங்கம்:**
கலகலப்பான அனுபவங்களால் மனதில் உற்சாகம், தெம்பு அதிகரிக்கும். வீட்டில் வசதி, வாய்ப்புகளை அதிகரிக்க முற்படுவீர்கள். எதிர்காலத் திட்டம் ஒன்றுக்கு நண்பர்கள் நல்ல யோசனை சொல்லலாம். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் நீங்களும் கலந்து கொள்ளலாம். குடும்பத்தினருக்காக சில விடயங்களில் விட்டுக் கொடுப்பீர்கள்.

**கன்னி:**
கடந்த காலத்தில் நீங்கள் செய்த உதவிக்கு, இப்போது ஒருவர் பதில் உதவி செய்யலாம். நாளை சந்திக்க நினைத்த ஒருவரை, இன்றே சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கும். சக ஊழியர்கள் விடுமுறையால், உங்களின் ஊக்கம், உற்சாகத்தை அதி கரிக்கும் வகையில் சிலர் பேசலாம். சகோதரர்களால் அன்புத் தொல்லையுண்டு.

**துலாம்:**
சவால்களைச் சந்திக்கும் நாள். நீங்கள் கூறும் யோசனைகளுக்கு மற்றவர்கள் மத்தியில் மதிப்பு இருக்கும். சிலரை நம்பி முக்கியமான வேலைகளை ஒப்படைப்பீர்கள். உறவினர்கள் தொடர்பான விடயங்களால் மன உளைச்சல்களுக்கு ஆள்படலாம். அவசரப்பட்டுச் சில முடிவுகளை எடுத்து விட்டு, பின்னர் கவலை அடைவீர்கள்.

**விருச்சிகம்:**
ஓய்வின்றி பல வேலைகளைச் செய்ய நேரிடலாம். எதிர்பாராத தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். வீடு, வீட்டு உபயோகப் பொருள்கள் வழியில் திடீர் செலவுகளை எதிர்கொள்ளலாம். சிலர் உங்களிடம் கொடுத்த வாக்கைக் காப்பாற்றாமல் தவிக்க விடலாம். வியாபாரிகளுக்கு கடன் மிகுதிகள் வருவது தள்ளிப் போகலாம்.

**தனுசு:**
பொறுப்பு, சகிப்புத் தன்மையுடன் நடந்து சாதனை படைப்பீர்கள். உறவினர்கள் உங்களிடம் பாசமாக நடந்து கொள்வர். அரசியல்வாதிகள் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். விருந்து, விசேடங்களால் மகிழ்ச்சி உண்டு. நண்பர்களிடம் சில ஆலோசனைகளைக் கேட்டுச் செயற்பட முற்படுவீர்கள். பொழுது போக்கு விடயங்களில் நாட்டம் செல்லும்.

**மகரம்:**
குடும்பத்தினர் மனம் கோணாமல் நடந்து, பாராட்டுக்களைப் பெறுவீர்கள். உடன் பிறப்புக்கள் கேட்ட உதவிகளைச் செய்யாமல் பிற்போட்டு வைக்கலாம். மனதில் பட்டதை வெளிப்படையாகப் பேசுவீர்கள். வெளி யிடங் களுக்குச் செல்லும் போது, உடனுக்குடன் வாகன வசதி கிடைத்து சந்தோஷம் அடைவீர்கள். மருத்துவ காரியங்கள் அனுகூலமாக அமையும்.

**கும்பம்:**
கணவன், மனைவி இடையே மனஸ்தாபம் உருவாகலாம். சொல்வாக்கைக் காப்பாற்ற துடிப்போடு செயற் படுவீர்கள். அவசரமாக முடிக்க வேண்டிய வேலை ஒன்றால் அவதிப்படலாம். குறைந்த செலவில் முடியும் என்று நினைத்த வேலை ஒன்றுக்கு அதிக மாகச் செலவாகலாம். மற்ற வர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காக சில காரியங்களைச் செய்வீர்கள்.

**மீனம்:**
நண்பர்கள் சிலருக்குக் கேட்ட உதவிகளைச் செய்து, அவர்களின் அன்பைப் பெறுவீர்கள். தாய் வழியில் பெருமைப்படும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். பிள்ளைகள் நீங்கள் பாராட்டும் வகையில் நடந்து கொள்வர். பல நாள்களாகப் பார்க்காமல் இருந்த உறவினர் ஒருவரை, திடீரெனப் பார்க்க நேரிடலாம். பதற்றம், பரபரப்பாகச் செயற்பட நேரிடலாம்.

# சர்வதேச சமூ
# சரணாகதி அ
# நிலையில் மஹி

கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன 'உதயனு'க்கு விசேட செவ்வி

"இனப்பிரச்சினைத் தீர்வுக்கு வடக்கு - கிழக்கு இணைப்பு, பொலிஸ், காணி அதிகாரங்கள் ஆகியவை உள்ளடக்கப்படாத தீர்வுத்திட்டமானது முழுமையானதொரு தீர்வுப் பொதியாக அமையாது.''

- இவ்வாறு நவ சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளரும், தெஹிவளை - கல்கிசை மாநகரசபை உறுப்பினருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன 'உதயனு'க்கு வழங்கிய விசேட செவ்வியின்போது தெரிவித்தார்.

சமகால அரசியல் விவகாரங்கள் தொடர்பில் அவர் வழங்கிய செவ்வியின் முழு விவரம் வருமாறு-

*கேள்வி:- மனித உரிமை விவகாரத்தில் முன்னேற்றம் ஏற்படாவிட்டால் 2013 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் உச்சிமாநாட்டைத் தான் புறக்கணிப்பார் எனக் கனேடியப் பிரதமர் திட்டவட்டமாக அறிவித்துள்ளார். இவரின் கருத்தை ஏனைய சில நாடுகளின் தலைவர்களும் வரவேற்றுள்ளனர். இலங்கையில் தற்போது மனித உரிமை விவகாரம் எவ்வாறானதொரு கட்டத்தில் உள்ளது என நீங்கள் கருதுகின்றீர்கள்?*

பதில்:- மாபெரும் தமிழ்த் தலைவர் தந்தைச் செல்வாவின் உருவச்சிலையின் தலைப்பகுதியை அண்மையில் காடையர்கள் உடைத்தெறிந்தனர்.

பாதுகாப்புத் தரப்பினர் இரவும் பகலும் உலாவித் திரியும் திருகோணமலையிலேயே இந்த அராஜகம் அரங்கேற்றப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி, அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளைச் சிறைச்சாலை அதிகாரிகள் ஆடை களைந்து காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கி வெறியாட்டம் ஆடியுள்ளனர்.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் நாம் நடத்திய ஆர்ப்பாட்டத்திற்கு பொலிஸார் இடையூறு விளைவித்து அடாவடித்தனத்தில் ஈடுபட்டனர்.

இவற்றையெல்லாம் சர்வதேசம் உன்னிப்பாக அவதானித்துக்கொண்டிருக்கின்றது.

ஜனநாயக ஆட்சியே நாட்டில் நிலவுகின்றது என அங்கும் இங்கும் பெருமை கூறித்திரிபவர்கள் இதனை நன்கு உணர்ந்து செயற்படவேண்டும்.

இவ்வாறான சம்பவங்களிலிருந்தே நாட்டில் மனித உரிமைகள் எவ்வாறு மதிக்கப்படுகின்றன என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ளமுடியும். இதை நான் கூறித்தான் புரியவேண்டும் என்றில்லை.

*கே: ஆசியப் பிராந்தியத்திற்கான அமெரிக்க இராணுவ தலைமையகத்தின் நிதியுதவியுடன் வடக்கில் நான்கு வைத்தியசாலைகளை நிர்மாணிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது. அமெரிக்க இராணுவத்தின் நிதி உதவியுடன் இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதால் தேசியப் பாதுகாப்புக்குப் பாரிய அச்சுறுத்தல் ஏற்படும் எனக்கூறி அமைச்சர்கள் சிலர் இத் திட்டத்திற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் உங்கள் கருத்து என்ன?*

ப: யுத்தகாலத்தில் அழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அமெரிக்காவிடம் இருந்து அரசு பெருமளவு எண்ணிக்கையான ஆயுதங்களை கொள்வனவு செய்தது.

இராணுவ ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டது. ஆலோசகர்கள்கூட இங்கு வரவழைக்கப்பட்டிருந்தனர்.

யுத்தத்தை முன்னெடுத்து மக்களை அழிப்பதற்கு மட்டும் அமெரிக்காவின் உதவியை விரும்பும் இனவாதிகள் மக்கள் நலனைக் காக்கும் திட்டங்க ளுக்கு ஆதரவு தெரிவிக்காதது ஏன்?

நாட்டின் வளங்களை அரசு அமெரிக்காவுக்கு தாரைவார்த்துக் கொடுத்துள்ளது. இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு தலையாட்டிப் பொம்மையாகச் செயற்பட்ட அமைச்சர்கள், தமிழர் பிரதேசங்களில் அமெரிக்க இராணுவத்தின் நிதியுதவியுடன் வைத்தியசாலையை நிர்மாணிப்பதற்கு ஏன் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். அப்படியானால் கோதுமை மா இறக்குமதிக்கும் எதிர்ப்புத் தெரிவிக் கலாம் அல்லவா?

வைத்தியசாலைகள் அமைக்கப்படுவது மிகவும் அருமையானதொரு விடயம். அதனை நாம் வரவேற்க வேண்டும். சாத்தான் கூட இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கமாட்டாது.

ஆனால், காரணமில்லாமல் அமெரிக்கா களத்தில் இறங்காது என்பதும் எமக்குத் தெரியும். அமெரிக்காவுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களைப் பகிரங்கப்படுத்துமாறு இதனால் தான் நாம் அரசை கோருகின்றோம்.

*கே: வடக்கு - கிழக்கு இணைப்பு, பொலிஸ், காணி அதிகாரங்கள் ஆகிய விடயங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொங்கியிருக்காது, தமிழர்களின் ஏனையப் பிரச்சினைகள் குறித்து பேச வேண்டும் என அரசு தரப்பினர் கூறுகின்றனர். மேற்கூறப்பட்ட விடயங்கள் உள்ளடங்காத ஒரு தீர்வுப்பொதி இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முழுமை பெறுமா?*

ப: இனப்பிரச்சினை விவகாரத்தில், வடக்கு - கிழக்கு இணைப்பு, காணி அதிகாரம், சட்ட ஒழுங்கு ஆகியவை இன்றியமையாத விடயங்களாகும். எனவே, அது குறித்துக் கட்டாயம் அரசு பேசியே ஆக வேண்டும்.

இந்த விடயங்களை உள்ளடக்காமல் ஒரு தீர்வு வழங்கப்பட்டால் அது முழுமைபெறாது. அதனை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்றே நான் கருதுகின்றேன். சுயநிர்ணய ஆட்சிக்கு இந்த மூன்று விடயங்களும் அத்தியாவசியம். இவற்றைப் பற்றி பரிசீலிக்காவிட்டால் சுயநிர்ணய ஆட்சி குறித்து பேசுவதில் எதுவிதப் பயனும் இல்லை.

தமிழர் பிரச்சினை குறித்து வெளிநாடுகளில் உள்ள அமைப்புகள், இடதுசாரிகள், தொழிற்சங்கங்கள் ஆகியன மிகுந்த அவதானத்துடனும், அக்கறையுடனும் அவதானித்து வருகின்றன.

தமிழர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுப் பொதியொன்றை முன்வைக்குமாறு இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும் என இந்த அமைப்புகள் தமது நாடுகளில் உள்ள மத்திய அரசுகளை வலியுறுத்தினால் ஆட்சி பீடத்திலுள்ளவர்கள் கட்டாயம் நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

தமிழர் பிரச்சினைக்கு அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுப் பொதியொன்றை அரசு உடன் வழங்க வேண்டும். இல்லையேல் சர்வதேச அழுத்தங்கள் நாலாபுறமும் அரசை வாட்டிவதைக்கும். இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

*கே: சரத் பொன்சேகாவின் விடுதலையை வலியுறுத்தி பிரதான எதிர்க்கட்சி தேசிய ரீதியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்க வுள்ளது. இதில் உங்கள் கட்சியும் கலந்துகொள்ளும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆர்ப்பாட்டங்களின்போது தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரங்களும் உள்வாங்கப்படுமா?*

ப: சரத் பொன்காசேவை அடித்தளமாகப் பயன்படுத்தி தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காகவும் நாம் பாடுபடுவோம். எதிர்க்கட்சித் தலைவர் அதற்கு இணங்கியுள்ளார்.

சரத் பொன்சேகாவின் விவகாரம் உலகளாவிய ரீதியில் பேசப்படுவதால் அவரை வைத்தே நாம் எமது நகர்வுகளை முன்னெடுக்கவேண்டும்.

சரத் பொன்சேகாவின் விடுதலைக்கான போராட்டம் ஏனைய அரசியல் கைதிகளுக்கும் நன்மை கிடைக்கும் வகையில் இருக்கவேண்டும்.

சரத் பொன்சேகாவை இராணுவ வீரர் எனக் கூறி நாம் கொச்சைப்படுத்தக் கூடாது. அவர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள சிறைச்சாலை வீரர்.

நான் ஏன் அப்படிக் கூறுகின்றேனென்றால், வெள்ளைக் கொடியுடன் சரணடைவதற்கு வந்த புலி உறுப்பினர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்; இறுதி யுத்தத்தின்போது பொதுமக்களும் கொல்லப்பட்டனர்.

இவற்றையெல்லாம் வெற்றிகரமாக செய்துமுடித்தவர்களுக்கு மஹிந்த அரசு வெளிநாட்டுத் தூதுவர் பதவிகளை வழங்கி அழகுபடுத்திப் பார்க்கின்றது.

அவர்களும் கோட்சூட்டை மாட்டிக்கொண்டு சுகபோகம் அனுபவிக்கின்றனர். இவ்வாறானவர்களையே அரசு இராணுவ வீரர்கள் என்று கூறிப்பெருமையடைகின்றது. எனவே, அந்தபட்டியலில் சரத் பொன்சேகாவையும் சேர்க்கக்கூடாது. ஒரு கைதியாகவே அவரை நாம் பார்க்கின்றோம்.


ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார் என்ற ஒரே காரணத்திற்காகச் சரத் பொன்சேகா இன்று அரசியல் ரீதியில் பழிவாங்கப்படுகின்றார். எனவே, அரசின் அராஜகத்துக்கு எதிராக மக்கள் குரல் கொடுக்கவேண்டும்.

ஜனாதிபதியிடம் சரத் பொன்சேகா மண்டியிட்டு



# சமூகத்திடம் அடையும் ஹிந்த அரசு!

**“வெள்ளைக் கொடியுடன் சரணடைய வந்த விடுதலைப் புலி உறுப்பினர்களைச் சுட்டுக் கொன்றார்கள் எனக் கூறப்படுபவர்களுக்கும், இறுதி யுத்தத்தின் போது பொது மக்களைப் படுகொலை செய்தார்கள் எனக் கூறப்படுபவர்களுக்கும் மஹிந்த அரசு வெளிநாட்டுத் தூதுவர் பதவிகளை வழங்கி அழகுபடுத்திப் பார்க்கின்றது”**



மன்னிப்பு கோரினால் அவரை 24 மணித்தியாலங்களுக்குள் விடுதலை செய்துவிடுவர். ஆனால், பொன்சேகா மண்டியிட்டு மஹிந்த அரசிடம் ஒருபோதும் மன்னிப்பு கோரமாட்டார்.

சரத் பொன்சேகாவின் விடுதலைக்காக எமது கட்சி போராடினாலும், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையையே நாம் பிரதானமாகக் கையாள்வோம். இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

*கே: நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் பல்வேறு கோணங்களில் சர்ச்சைகள் எழுந்துள்ளன. இந்நிலையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை சர்வதேசம் ஏற்றுக் கொள்ளுமா?*

ப: நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை பகிரங்கப்படுத்துமாறே தற்போது சர்வதேச நாடுகள் கூறிவருகின்றன. அரசு குறித்த அறிக்கையை வெளியிட்ட பின்னரே அது குறித்து உலக நாடுகள் தனது நிலைப்பாட்டை அறிவிக்கும்.

அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை வைத்துக் கொண்டே இலங்கை விவகாரம் குறித்து அடுத்தக் கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கும்.

ஏதாவது பிரச்சினை என்றால் ஆணைக்குழு அமைப்பதும், அந்தக் குழு விசாரணைகளை நடத்திய பின்னர் அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதும் அதன் பின்னர் ஆட்சியாளர்கள் அந்த அறிக்கையை கிடப்பில் போடுவதும் நாட்டில் வழமையாகிவிட்டது.

எனவே, நல்லிணக்க ஆணைக்குழுவின் விவகாரத்தில் அரசு தனது பழைய பாணியை பாவிக்க முடியாது. நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் உறுதியான நிலைப்பாட்டில் இருக்கவேண்டும்.

இலங்கை அரசே ஒரு சுயாதீன ஆணைக் குழுவை நியமித்து அறிக்கை தயாரித்துள்ளதால் ஒரு சில நாடுகள் அறிக்கையை நிராகரிக்கவும் கூடும்.

*கே: மன்னார் கடற்பரப்பில் எண்ணெய் அகழ்வு நடவடிக்கைக்கு இந்தியாவும், சீனாவும் ஏட்டிக்குப் போட்டியாக களமிறங்கியுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறதே இது குறித்து உங்கள் கருத்து என்ன?*

ப: இலங்கையில் எண்ணெய்வளம் இருக்கின்றது என தெரிந்திருந்த தாலேயே இந்தியாவும், சீனாவும் இலங்கை அரசுக்கு உதவிகளை வாரி வாரி வழங்கின.

உலக நாடுகள் அரசுக்கு ஆயுதங்களை வழங்க மறுத்தபோது சீன அரசு அள்ளிக்கொடுத்தது.

இந்தியாவும் இலங்கையைத் தலைக்கு மேல் தூக்கிவைத்து ஆடியது. மஹிந்த அரசு எவ்வளவு கரக்கமுடியுமோ அவை அனைத்தையும் இந்த இரண்டு நாடுகளிடம் இருந்து கறந்துவிட்டது.

தற்போதுதான் அதன் பின்விளைவுகளை அனுபவிக்கவேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டுள்ளது. யுத்தத்தின்போது நாங்கள் உங்களுடன்தான் இருந்தோம் என இந்தியாவும், இல்லை... இல்லை நாங்கள்தான் ஆயுதங்களை வாரி வழங்கினோம் என சீனாவும் அரசுக்கு ஏதோவொருவிதத்தில் அழுத்தம் கொடுக்க ஆரம்பித்துவிட்டன.

இந்த இரண்டு நாடுகளையும் பகைத்துக்கொண்டால் அரசுக்குச் சர்வதேச ரீதியில் வேறு பல சிக்கல்கள் ஏற்படும். எனவே, அரசியல் ரீதியாக சரணாகதி அடையவேண்டியதொரு நிலை மஹிந்த அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

உலக நாடுகளிடம் அதிக வட்டிக்குக் கடன்களை வாங்கும் அரசு அந்தச் சுமையையும் மக்கள் மீது சுமத்துவதற்கு முயற்சிக்கின்றது.

விவசாயத்தில் சிறந்துவிளங்கிய எமது நாடு இன்று இறக்குமதியை நம்பியிருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. உலக நாடுகளிடம் பிச்சைப்பாத்திரம் ஏந்தும் நிலையிலேயே எமது நாட்டின் பொருளாதாரம் உள்ளது.

இந்நிலையில் சர்வதேசத்தின் தலையீட்டை இலங்கை அரசால் தட்டிக்கழிக்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

*கே: வரவு-செலவுத்திட்டம் குறித்து உங்கள் கருத்து என்ன?*

ப: தனியார்துறை ஊழியர்களை மஹிந்த அரசு அடியோடு புறக்கணித்துள்ளது. அத்துடன் தோட்டத் தொழிலாளர்களின் வயிற்றிலும் அது அடித்துள்ளது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களுக்கு எவ்வித நன்மைகளும் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் இல்லை.

மக்கள் நலன்களைப் புறக்கணித்துள்ள அரசு, பாதுகாப்பு அமைச்சுக்கு அதிக நிதியை ஒதுக்கியுள்ளது.

அரசு இன்று அதிவேக வீதிகளை அமைக்கின்றது; துறைமுகங்களை அமைக்கின்றது; விமான நிலையங்களை அமைக்கின்றது. செல்வந்தர்களை கருத்திற்கொண்டே அரசு இவற்றையெல்லாம் செய்கின்றது.

அடிப்படை வசதிகள்கூட இன்றித் தோட்டத் தொழிலாளர்கள் இன்று சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கின்றனர். இவர்களுக்கு ஒழுங்கான வீடுகள் இல்லை. 'லயன்' அறைகளிலேயே இன்றும் சிறைவைக்கப்பட்டுள்ளனர்.

*நேர்காணல்:* **ஆர். சனத்**

அதிவேக வீதிகளை அமைத்து சாதனை படைக்கும் அரசுக்கு இவர்களின் சோகங்கள் புரியவில்லையா!


உலக நாகரிகம் பெரும் வளர்ச்சி கண்டுள்ளது. ஆனால், தோட்டப்புற மக்களின் வாழ்க்கை இன்று படுபாதாளத்தை நோக்கி பயணிக்கின்றது.

ஆசியாவின் ஆச்சரியமாக இலங்கை மாறவேண்டுமானால் இவர்களின் பிரச்சினைகளையும் அரசு கவனத்தில் எடுக்கவேண்டும்.

*கே: நுவரெலியா மாவட்டத்தில் வட்டகொட ஜொக்ஸ்டன் தோட்டத்தில் இராணுவ முகாமொன்றை அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. மலையகத்தையும் இராணுவமயப்படுத்துவதற்கு அரசு முயற்சிக்கின்றது எனக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இது பற்றி உங்கள் கருத்து என்ன?*

ப: மலையகத்தில் மட்டுமல்ல, மாவட்ட ரீதியில் அரசு இராணுவ பலத்தை ஏற்படுத்தி வருகின்றது. அரச பயங்கரவாதத்தை நாடு பூராகவும் விஸ்தரித்து எதுவித தங்குதடையும் இன்றி கொடுங்கோல் ஆட்சியை முன்னெடுப்பதற்கே அரசு இந்த அத்திவாரத்தை இட்டுவருகின்றது. வடக்கு, கிழக்கு மாகாணத்தை வாட்டிவதைத்த இந்த இராணுவப் பிரச்சினை மலையகத்திலும் தொற்றிக்கொண்டால் நிலைமை மோசமாகிவிடும். மக்கள் அரசுக்கு எதிராக கிளர்ந்தெழ வேண்டும். இடதுசாரிகளுக்கு ஆட்சிபீட மேறக்கூடிய சக்தியை மக்கள் வழங்குவார்களாயின் சுபீட்சமான எதிர்காலத்தை நோக்கி நாம் அனைவரும் சுதந்திரமாக நகர முடியும்.

# எனக்கு நானே நல்லவன்



ஒரே சமூகத்திலிருந்து எதிர்எதிரான இயல்புடைய மனிதர்கள் எப்படிப் பிறக்கிறார்கள். ஒரே குடும்பத்தில் விதவிதமான இயல்புடைய பிள்ளைகள் பிறந்து வளர்கிறார்களே... அது எப்படி? புத்தர் தோன்றிய அதே பூமியில்தான் கசாப்புக் கடைக்காரனும் தோன்றுகிறான். இவ்வளவும் ஏன்? ஒரே தேசத்தின் விடுதலைக்கு ஒரே காலக்கட்டத்தில் நேதாஜி வேறு மாதிரி சிந்திக்கிறார். காந்திஜி வேறு மாதிரி சிந்திக்கிறார். எதிர்எதிரான பெரியாரும், பெரியவரும் ஒரே சமூகத்தின் விதவிதமான கொடை. அதைவிட வேடிக்கை. ஆழ்ந்த கடவுள் நம்பிக்கை உடைய பெற்றோர்களின் மத்தியில் அவர்களையே எதிர்த்து நாத்திகரான பெரியாரே உருவானார். எனவே சமூகம் மனிதனை உருவாக்குகிறது என்பதை விட சமூகத்திலிருந்து மனிதர் அவரவர் விரும்பும் விஷயங்களை உள்வாங்கி உருவாகி விடுகிறார்கள் என்பதே அழமான உண்மை. சமூகத்தின் பங்களிப்பு பெரியதுதான். ஆனால் தான் யார் என்பதைத் தனி மனிதன்தான் நிர்ணயிக்கிறான்.

சிக்மன் பிரய்ட் என்கிற உளவியல் நிபுணர் ஒவ்வொரு மனிதனுடைய பிழைகளுக்கும் அவர்கள் அறியாமலேயே அவர்களுக்குள் ஏற்பட்ட பதிவுகள் காரணம்... அவர்களது ஜீன் அதாவது உயிர் அணுவிலேயே காமம், பசி, கொலை வெறி போன்ற பல விடயங்கள் தீர்மானமாகி விடுகின்றன என்கிறார். மார்க்ஸோ ஒரு மனிதனின் சகல குறைகளுக்கும் சமூகமே காரணம் என்கிறார். இரண்டும் ஓரளவு உண்மை என்பதுதான் சிக்கலே. ஆனால் இரண்டையும் நாம் ஏற்றுக்கொண்டு விட்டல் கொலை, கற்பழிப்பு, திருட்டு எதற்கும் எவரையும் பொறுப்பாக்க முடியாது.

உண்மையில் உள்ளிருந்து சில எண்ண அழுத்தங்கள், வெளியிலிருந்து சில எண்ண அழுத்தங்கள் ஒரு தனி மனிதனுள் ஏற்படுகின்றன. இவன் இரண்டையும் சீர்தூக்கித் தன் புத்தி அல்லது உள்ளொளி என்பதை உபயோகப்படுத்தி நல்லது கெட்டது கண்டறிந்து தன் வாழ்வைத் தானே வகுக்கக் கடமைப்பட்டவன். நமது வெற்றி தோல்விகளுக்கு, மான அவமானங்களுக்கு, இன்ப துன்பங்களுக்கு ஒருபோதும் பிறர் காரணமே அல்ல. நாம்தான் காரணம்.


திறமையற்ற ஒருவனைப் பலர் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடினால் அவன் பெரிய மனிதன் ஆகிவிட முடியுமா? மகாகவி பாரதி காலத்தில் பாரதியைப் பலரும் பாராட்டவே இல்லை... பாரதி மகாகவி ஆகவில்லையா? அவர் கவிதையை அழிக்க முடிந்ததா? பாரதி, தான் ஒரு மகாகவி என்று தீர்க்கமாக அறிந்து வைத்திருந்தான். மகாகவியாக மலர்ந்தும் விட்டான். நீங்கள் யார் என்பதை நீங்கள்தான் தீர்மானிக்கிறீர்கள்.

கஞ்சன் ஒருவன் ஐந்து ரூபாய் கொடுத்து அதிர்ஷ்ட லாபச் சீட்டு வாங்கினான். ஐந்து லட்சம் பரிசு கிடைத்தது. நண்பர் உற்றர், உறவினர் எல்லோருக்கும் ஏகப்பட்ட மகிழ்ச்சி. அத்தனை பேரும் வந்து அவனை வாழ்த்தி மகிழ்ந்தார்கள். ஆனால் அவன் மட்டும் துக்கமாக உட்கார்ந்திருந்தான். ஏன் என்றார்கள்? . ''இந்த ரிக்கெற் வாங்கிய ஐந்து ரூபா... போனது போனதுதானே.. பரிசு வாங்கியவர்களுக்கு அந்த ஐந்து ரூபாவையும் திருப்பித் தரலாமே? ஐந்து ரூபா நட்டமாகிவிட்டது'' என்றானாம். இத்தகையவர்கள் வீட்டு ஊதுபத்திகள் கூட சாக்கடை மணமே வீசும் . இவர்கள் வீடே இடுகாடுதான் . மலரத் தெரியாத மலட்டு மனங்கள் இவை.

நேர்மாறாக ஒரு செய்தி. வியாபாரத்தில் ஏகப்பட்ட நட்டப்பட்ட ஒருவர் மீண்டு எழுந்து மறுபடியும் பெரிய பணக்காரர் ஆகிவிட்டார். ''நீங்கள் மீண்டும் எழுந்திருக்கவே முடியாது என்று கூறினார்கள் . இது எவ்வாறு முடிந்தது?'' என்று கேட்டார் பத்திரிகைச் செய்தியாளர். ''மிகவும் சுலபம்;எல்லோருக்கும் தெரிந்த அந்த இரகசியத்தை என் மனதுக்கு மட்டும் தெரியாதபடி கவனமாக வெளியே நிறுத்திவிட்டேன்.அதனால் சோர்வின்றி என் மனம் இயங்கியது.. ஜெயித்துவிட்டேன்'' என்றார்.அந்த இரககசியம் என்னவென்றால்; உலகம் நினைப்பதைப் பற்றி உனக்கென்ன? உன் நினைப்பே உன்னை உயர்த்துகிறது என்பதாகும்.

ஒருவேடிக்கையான சம்பவம் சொல்கிறேன். ஒரு நோயாளி மருத்துவரிடம் போய் உடம்பெல்லாம் வலிக்கிறது என்றான். தனது ஆள்காட்டி விரலால் தோளை அழுத்தியபடி '' ஆ... இங்கே வலி'' என்றவன் பிறகு தன் நெஞ்சு, வயிறு, தொடை, பாதம் ஒவ்வொன்றாகத் தன் விரலால் அழுத்தி ''ஆ... இங்கே வலி'' என்ற அலறிக் கொண்டே இருந்தான். மருத்துவர் அவனைக் கட்டிலில் படுக்க வைத்து அதே மாதிரி தன் கைகளால் அழுத்தி அழுத்தி '''இங்கே வலி இருக்கா... இங்கே வலி இருக்கா'' என்று கேட்டார். என்ன ஆச்சர்யம் ''இல்லை... இல்லை'' என்று சொல்லிக் கொண்டே வந்தான். எழுந்து உட்கார்ந்ததும் அவன் மீண்டும் தோளை அழுத்தியபடி ''ஆ இங்கே வலிக்கிறது என்றான். மருத்துவர் கூர்ந்து அவன் விரல்களை கவனித்தார். பின் அவன் விரலைப் பிடித்து அழுத்தியதும் ஆ என்று சத்தமாக அலறினான். காரணம் அவன் விரலில் தான் வலி. வலிக்கிற விரலைக் கொண்டு அங்கேயும் இங்கேயும் அழுத்திவிட்டு உடம்பெல்லாம் வலி என்பவன் எவ்வளவு மூட்டாளோ அவ்வளவு மூட்டாள்கள் நாம்.

**சுகி. சிவம்**



'அலையன்ஸ் பிரான்ஸிஸ் டீ ஜப்னா' நிறுவனத்தால் நீர் – குடங்கள் – பெண்கள் என்ற கருப்பொருளிலான புகைப் படப் போட்டியொன்று அண்மையில் நடத்தப்பட்டது. படத்தில் இடமிருந்து வலமாக இலங்கை வங்கியால் அன்பளிக்கப்பட்ட முதலாம் பரிசைப் பெற்றுக் கொண்ட எஸ். அமரதாஸ், மேற்படி நிறுவனத்தின் இயக்குநர் ஜெராட் றொபுச்சன், யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத் துறைத் தலைவர் கலாநிதி திருமதி கிருஷ்ணவேணி, போட்டியில் மூன்றாம் பரிசிலைப் பெற்ற எஸ். அனுராஜ், நிறுவனத்தின் தலைவர் Dr. கே.இந்திரமோகன் மற்றும் ஆறுதல் பரிசைப் பெற்றுக் கொண்ட பி.ஏ.ஏ.சுதர்ஸன் ஆகியோர் காணப்படுகின்றனர். (ஞ)

# நவீன உலகத்தின் தொழில்நுட்ப போக்குகளை விளங்கிக் கொள்ள வாசிப்பு மிகவும் அவசியம்

## சாவகச்சேரி பிரதேச சபையின் உறுப்பினர் தங்கராசா

நவீன உலகத்தின் தொழில்நுட்பப் போக்குகளை விளங்கிக் கொள்ள வாசிப்பு அவசியமானதாகும். வாசிப்பு மனிதனை நற்பண்புகள், சமூக விழுமியங்கள் உள்ள நல்ல பிரஜையாக்குகின்றது.

வாசிப்பு மாதத்தில் மட்டுமன்றி ஏனைய பதினொரு மாதங்களிலும் கூட வாசிப்பை ஊக்குவித்தல் வேண்டும் என சாவகச்சேரி பிரதேச சபையின் உறுப்பினர் ச.தங்கராசா தெரிவித்தார்.

சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வு மிக அண்மையில் சபையின் தலைவர் சிற்றம்பலம் துரைராசா தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது ச.தங்கராசா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்:

பத்திரிகை வாசிப்பு, புத்தக வாசிப்பு மட்டுமன்றி இணைய வாசிப்பு, தொலைத்தொடர் பாடல் என வாசிப்பின் எல்லைகள் விரிவடைந்துள்ளன.

நவீன உலகத்தின் தொழில்நுட்பப் போக்குகளை விளங்கிக் கொள்ள வாசிப்பு அவசிமானதாகும்.

வாசிப்பு மனிதனை நற்பண்புகள், சமூக விழுமியங்கள் உள்ள நல்ல பிரஜையாக்குகிறது. இதனால் வாசிப்பு மாதத்தில் மட்டுமன்றி ஏனைய பதினொரு மாதங்களிலும் கூட வாசிப்பை ஊக்குவித்தல் வேண்டும்.

பிரதேச சபைகள், நகரசபைகள், மாநகரசபைகள் யாவுமே நூலகங்களைக் கொண்டு இயங்குகின்றன.

இவை பொதுமக்களுக்கு, மாணவர்களுக்கு மிகவும் குறைந்த கட்டணத்துடன் நூலக சேவையை வழங்குகின்றன.

இந்தச் சேவையைப் பெற்று வாசிப்பை மேற்கொண்டு பயனடைய முன்வரல் வேண்டும்.

இலத்திரனியல் யுகத்தின் பிரமாண்டமான வளர்ச்சி வாசிப்பிலிருந்து மனிதனைத் தூர வைத்துவிட்டது. ஒலி, ஒளி, வடிவ, குறுந்தகவல் வடிவ நிலை மனித வாழ்வில் தகவல் தொடர்பாடலில் பெரிதும் முதன்மை பெறுகின்றது.

இன்று இந்தக் கைதடி பொது நூலகத்துக்கு இந்த ஊர் மக்கள் தாமாக முன்வந்து நிதியைச் சேகரித்து நூலக ஆலோசனைக் குழுவினூடாக கணினி ஒன்றைக் கொள்வனவு செய்து கொடுத்துள்ளனர். இதுபோல ஏனைய கிராம மக்களும் செயற்படுவார்களாயின் பொதுமக்களுக்குரிய வளங்கள் சில பொது மக்களாலேயே ஏற்படுத்தப்படும் நிலை உருவாகும் - என்றார். (எ-121)

# மாணவர்கள் தேடலுக்கு முக்கியம் கொடுத்து புதிய ஆக்கங்கள் படைப்பவர்களாக மாற வேண்டும்

## கிளிநொச்சி மாவட்டச் செயலக பிரதம கணக்காளர்

குருநகர், டிசெ.14

மாணவர்கள் தேடலுக்கு முக்கியம் கொடுத்து புதிய ஆக்கங்களைப் படைப்பவர்களாக மாற வேண்டும் எனக் கிளிநொச்சி மாவட்டச் செயலக பிரதம கணக்காளர் ஜேக்கப் கில்பேட்குணம் தெரிவித்தார்.

யாழ்.புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தின் பரிசுத்தினம் கடந்த 3 ஆம் திகதி யாழ். செபசபைக்குருமட அதிபர் வண. பிதா செபமாலை பிரான்சிஸ் ஜெயம் அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜேக்கப் கில்பேட்குணம் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு உரையாற்றுகையில்:

இன்றைய உலகில் தொடர்பு சாதனங்களின் அதீத வளர்ச்சியால் வாழ்ந்து கொண்டிருக்கும் மாணவ சமூகம் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்து வருகிறது. வர்த்தகமயமாகி வரும் இன்றைய உலகில் நன்மையும் உண்டு, தீமையும் உண்டு. மாணவர்கள் கல்வி வளர்ச்சிக்கு நல்ல விடயங்களைத் தேடிப் படிக்க வேண்டும். அதிபர், ஆசிரியர்களின் வழிகாட்டல்களில் நம்பிக்கையுடனும் விசுவாசத்துடனும் பயபக்தியுடனும் நடந்தால் மாணவர்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் உண்டு.

ஆசிரியர்கள் கற்றுத்தரும் நல்ல பண்புகள் தான் உங்களை எதிர்காலத்தில் வழிநடத்தும். கல்விச் செல்வம் மிகவும் பிரதானமானது. கல்வியின்றி நாம் இந்த உலகில் வாழ முடியாது. கல்வி கற்கும் இன்றைய மாணவர்களுக்குப் பல செயற்றிட்டங்களை அரசு இலகு வழிகாட்டல்கள் மூலம் வழங்கி வருகிறது.

மாணவர்கள் தாம் கல்வி கற்ற பாடசாலை சிறியதாக இருந்தால் என்ன, பெரியதாக இருந்தால் என்ன அந்தப் பாடசாலையைத் தமது வாழ்நாளில் மறக்கக் கூடாது. மாணவர்கள் கல்வி கற்பதை ஆசிரியர்கள், பெற்றோர்கள் உன்னிப்பாகக் கவனித்து நாளாந்தம் அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

மாணவர்களால் முடியாத காரியம் இந்த உலகில் எதுவுமேயில்லை. மாணவர்கள் தமது நோக்கு எது என்பதை ஒவ்வொரு நாளும் உணர்ந்து செயற்பட வேண்டும். செயலில் உறுதி இருப்பதுடன் இறைபக்தியும் இருந்தால் மாணவன் உயர்ந்த நிலைக்குச் செல்ல முடியும்- என்றார். (எ-51)

# முறைசாராக் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களில் தொழிற்பயிற்சிகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்

## மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம்,டிசெ.14

முறைசாராக் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களில் எமது பாரம்பரிய தொழில்கள் சார்ந்த தொழிற்பயிற்சிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார் வட மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் மு.இராதா கிருஷ்ணன்.

வலிகாமம் வலயத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட முறைசாராக் கல்விப் பயிற்சிகளின் நிறைவுக் கண்காட்சி மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மு.இராதா கிருஷ்ணன் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் உரையாற்றும் போது, எமது பிரதேசத்தின் பாரம்பரிய உற்பத்திகள் அருகிச் செல்கின்றன. இவற்றுக்குப் புத்துயிர் அளிக்கப்பட வேண்டும். முறைசார் கல்வி ஏற்பாடுகளில் செயற்படுத்த முடியாத பல விடயங்களை முறைசாராக் கல்வியூடாகச் செயற்படுத்த முடியும். அவ்வகையில் பிரதேச பாரம்பரிய உற்பத்திகள் சார்ந்த பயிற்சிகள் புத்தாக்க சிந்தனையுடன் முன்னெடுக்கப்பட வேண்டும்.

பனம்பொருள் முதல் வாழைநார் வரை எமது உற்பத்திகள் உல்லாசப் பயணிகளைக் கவரும் வகையில் உருவாக்குவதற்கு ஏற்ற பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும். இதன் மூலம் எமது பிரதேசத் தொழில்கள் மேம்படவும், எமது இளஞ் சந்ததியினர் வேலை வாய்ப்புப் பெறவும் முடிவதோடு உல்லாசப் பயணிகளிடத்து எமது கலைப் பொருள்கள் தொடர்பான உயர்வான ஆர்வத்தையும் ஏற்படுத்தலாம் - என்றார்.

இந்த நிகழ்வில் வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆனந்தி சிவஞானசுந்தரமும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். (எ-38)

# மொழி பெயர்ப்பாளர் நியமனம்

யாழ்ப்பாணம்,டிசெ.14

நீதிச் சேவை ஆணைக்குழு முகாமைத்துவ உதவியாளர் சேவையில் மொழி பெயர்ப்பாளராகச் செல்வி ஜெ.கதிர் காமராசா ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றில் நியமனம் பெற்றுள்ளார்.

ஒருமாதகால பயிற்சியைக் கொழும்பில் முடித்த பின்பு இவர் மேற்படி நீதிமன்றத்தில் நியமனம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-122)

# யாழ்.கல்வி வலய அழகியல் போட்டி முடிவுகள்

*(நேற்றைய தொடர்ச்சி)*

தனிப்பாட்டு

பிரிவுI - ச.அலஸ்ரீனா (இளையதம்பி இந்து வித்தி), சி.சர்மிலன் (நவக்கிரி அ.மி.த.க.பாடசாலை), உ.கபினா (ஆனைப்பந்தி மெ.மி.வித்தி), ச.ரிஷிகேசன் (முத்துத்தம்பி மகா வித்தி.), அ.ஜெனிஸ்ரன் குமார் (கொழும்புத்துறை சென். ஜோசெப் வித்தி.).

பிரிவு II- சோ.விஷ்ணுவன் (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தி), சு. அலிஸ் ஆஷிகா (கோண்டாவில் சி.சி.த.க.பாடசாலை), செ.லாவண்ஜா (கோப்பாய் தெற்கு றோ.க.த.க.பாடசாலை), த.பிரசாந் (நல்லூர் ஞானோதய வித்தி), து.நிஷாந்தன் (நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்கினேஸ்வர வித்தி.).

பிரிவுIII-கோ.சிரோன் பிரவீணா (திருக்குடும்ப கன்னியர் மடம்), ச.நிவர்த்திகா (கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தி.), அ.கஜானி (நாயன்மார்க்கட்டு மகேஸ்வரிவித்தி.), அ.கிஷாத் (கொழும்புத்துறை சென். ஜோசெப் வித்தி.), உ.பபிந்தா (கோண்டாவில் இந்து மகா வித்தி.).

பிரிவுIV-சோ.கோகிலவதனி (நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தி.), இ.குகாஜினி (அச்சுவேலி மத்திய கல்லூரி), ஜெ.லவசுயன் (அச்சுவேலி மத்திய கல்லூரி).

தனிநடனம்

பிரிவுI-யோ.அருண்யா (கொக்குவில் ஸ்தான சி.சி.த.த.பாடசாலை), க.றபேக்கா (அச்சுவேலி சரஸ்வதி வித்தி), சு.துர்க்காஜினி (நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை).

பிரிவுII- சு.அலிஸ்ஆஷிகா- (கோண்டாவில் சி.சி.த.க.பாடசாலை), ச.மயூரி (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), ர.விவேதா (ஊரெழு கணேச வித்தியாசாலை), செ.லாவண்ஜா (யா/கோப்பாய் தெற்கு றோ.க.த.க.பாடசாலை.).

பிரிவுIII-கிஷான் (கொழும்புத்துறை சென். ஜோசெப் வித்தி), ச.நிவர்த்திகா (கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தி.), அ.கஜானி (நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தி.), சி.டிலானி (முத்துத்தம்பி மகா வித்தி.).

பிரிவுIV-இ.குகாஜினி அச்சுவேலி மத்திய கல்லூரி.

குழுநடனம்

முத்துத்தம்பி மகா வித்தி.

நாடகம்

முத்துத்தம்பி மகா வித்தி.

(எ)

*(முற்றும்)*

# வறிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த இந்து ஆலயங்களின் ஒத்துழைப்பு, பங்களிப்பு அவசியம்

## நல்லூர் இந்து ஆலயங்களின் ஒன்றியம் இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்

ஆலயங்கள் பொதுப்பணிகளை முன்னெடுத்து கஷ்டமுறும் குடும்பங்களின் வளமான வாழ்வு நிலைக்கு உதவ முன்வரவேண்டும் என்பது இப்போது பரவலாக எழுந்துள்ள கோரிக்கையாகும்.

குடாநாட்டில் பெரும் எண்ணிக்கையாக இன்று ஆலயங்கள் உள்ளபோதும் ஒரு சில இந்து ஆலயங்களே பொதுப் பணிகளில் கவனம் செலுத்துகின்றன. இந்த நிலையில் நல்லூர் பிரதேசத்தில் உள்ள இந்து ஆலயங்களை ஒருங்கிணைக்கப்பட்டு நல்லூர் பிரதேச இந்து ஆலயங்களின் சமூக நலனோம்பு அபிவிருத்தி ஒன்றியம் என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.


இன்று ஆலயங்களூடாகப் பொதுப் பணிகளை முன்னெடுப்பதற்கான ஓர் அத்திபாரம்தான் இது.

அண்மையில் ஐம்பது இந்து ஆலயங்களை உள்ளடக்கியதாக நல்லூர் பிரதேச செயலகம் இந்த அமைப்பை உருவாக்கியிருந்தது. அதன் முக்கிய நோக்கம் வசதியற்ற மாணவர்களின் கல்விக்காக உதவுவதே எனக் கலாசார உத்தியோகத்தர் திருமதி ரஜனி குமாரசிங்கம் தெரிவித்தார்.

தற்சமயம் தாய், தந்தையற்ற குடும்பத்தில் உள்ள 29 வறிய மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்குத் தலா 500 ரூபாவை இந்த அமைப்பு வழங்கவுள்ளது. இதற்கான பணத்தை இந்த அமைப்பில் உள்ள 22 ஆலயங்களும் ஒன்றிரண்டு தனிப்பட்ட நபர்களும் வழங்கி உதவ உள்ளனர்.

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் சுமார் 250 ஆலயங்கள் உள்ளன. இவற்றில் சுமார் 50 ஆலயங்கள் இந்த அமைப்பில் தற்சமயம் இணைந்து கொண்டுள்ளன. ஏனைய ஆலயங்களையும் இதில் இணைத்து இந்தச் செயற்பாட்டை விரிவுபடுத்துவதே இந்த ஒன்றியத்தின் நோக்கமாகும் எனக் கூறப்பட்டது.

கல்விப் பணிக்கு பண உதவி செய்வதுடன் மட்டும் நில்லாது கல்வியில் குறித்த கண்காணிப்பு நடவடிக்கைகளும் இதன் மூலம் அவதானிக்கப்படவுள்ளன.



இன்று எமது சமூகத்தில் முக்கிய பிரச்சினை கலாசாரச் சீரழிவாகும். இந்தத் தலைமுறை போதைவஸ்து, மதுபாவனை உட்பட இன்னோரன்ன தவறான நடவடிக்கைகளில் தம்மை உட்படுத்திக் கொள்வது யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வருகின்றது.

எமது எதிர்காலம் ஒரு நல்ல சமுதாயத்தைக் கொண்டதாக அமைய வேண்டும் என்பதே எல்லோரதும் விருப்பமாகும். எனினும் அதுவெறும் பேச்சளவிலேயே இருக்கிறது. தினமும் கலாசார சீரழிவுகள் தொடர்பான தகவல்கள் வெளிவந்த வண்ணமாகவே உள்ளன.

இளந்தலைமுறைகளிடையே இறை பக்தியையும் இந்து தர்மங்களை உள்வாங்க வைக்கவும் அவை கூறும் நெறி முறைகளைக் கடைப்பிடித்து அவற்றைக் கைக்கொள்வதன் மூலம் சமூகத்தில் கிடைக்கக்கூடிய பலாபலன்களை இளந்தலைமுறையினருக்கு எடுத்துக் கூறவும் இந்து ஆலயங்கள் பங்களிப்பு வழங்க வேண்டும்.

சிறந்த மனிதர்களாக இளைஞர்களின் எதிர்காலம் அமைய இந்துக் கோயில்கள் தம்மால் முடிந்த பங்களிப்பை வழங்கக் கூடிய நடவடிக்கை தேவை

■ ல்க்ஸ்மன்

என இந்த அமைப்பின் தலைவரும் பிரதேச செயலருமான பா.செந்தில் நந்தனன் தெரிவித்தார். இதனைச் செயற்படுத்தக்கூடியதாக நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட அனைத்து இந்து ஆலயங்களையும் ஒன்றிணைக்கும் முயற்சி தொடரவுள்ளது.

இதற்கு இந்தப் பிரதேசத்தில் உள்ள அனைத்து இந்து ஆலயங்களினதும் அறங்காவல் சபையினர் ஒத்துழைப்பு நல்கி மாணவர்களின் கல்விக்கு உதவுவதுடன் சீரழிவு நிலைக்கு உட்பட்டுள்ள எமது கலாசாரத்தைக் காப்பாற்றி எதிர்காலச் சந்ததியிடம் அதனை நல்ல முறையில் ஒப்படைக்க முன்வரவேண்டும். நல்லூர் பிரதேச இந்து ஆலயங்களின் சமூக நலனோம்பு அபிவிருத்தி ஒன்றியத்தின் எதிர்பார்ப்பு இதுவே. ✱


# மரண அறிவித்தல்

## திருமதி நாகரெத்தினம் தருமலிங்கம்



புங்குடுதீவு, 11 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட நாகரெத்தினம் தருமலிங்கம் 11-12-2011 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பெடியர்-பரணம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பிள்ளையினார்- சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பிள்ளையினார் தருமலிங்கத்தின் (சுசிலா ஸ்ரோர்ஸ் - பொறளை முன்னாள் உரிமையாளர்) அன்பு மனைவியும், சிவநேசலிங்கம் (ஜேர்மனி), சிவமணி (கனடா), சிவயோகலிங்கம் (செட்டி-கணக்காளர், கனடா), சிவநிதி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான செல்லரெத்தினம், (கொழும்பு), சண்முகலிங்கம் (புங்குடுதீவு) மற்றும் தனலட்சுமி (கொழும்பு), வாமதேவன்(யாழ்ப்பாணம்), கமலாம்பிகை(கனடா), முத்திலிங்கம்(கனடா), மகேஸ்வரி(கொழும்பு), கனகலிங்கம்(கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி (கொழும்பு), கணவதிப்பிள்ளை(கொழும்பு), சேதுநாதன்(கொழும்பு) குமாரவேலு, ராசலிங்கம், பூமணி மற்றும் மணி(யாழ்ப்பாணம்), சிவயோகம்(கனடா), லெட்சுமணன்(கொழும்பு), சந்திராதேவி(கொழும்பு), ராணி(கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், வான்மதி(ஜேர்மனி), இராசலிங்கம்(கனடா), மதிவதனி(கனடா), கெங்காதரா(கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், கனகம்மா(கொழும்பு), மகேஸ்வரி (பாரிஸ்), காலஞ்சென்ற நடராசா ஆகியோரின் அன்புச் சகலியும், பிரசாத், பிரவீனா, துசியந்தி, நிசாந்தி, விஜியந்தி, குணாநந்தி, கிரிசாந், சந்தோஷ், தரண்யா, கௌதம், ஆதித்தியா, தட்சாயினி, தீபன், முருகதாஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஜெய்(ராகுல்), அமிரா, மிதுனன், விதுனன், கிருஷான், ஹரிஷான் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2011) புதன்கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் மணற்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

11 ஆம் வட்டாரம், புங்குடுதீவு.

தகவல்: குடும்பத்தினர்.

(11614) (617110)


fems தங்க மில்லியன்
மில்லியனுக்கும் அதிக பெறுமதியான தங்க ஆபரணங்கள்
வாரத்துக்கு 3 தங்கச் சங்கிலிகள்
இறுதிக் குலுக்கலில்
ரூ.250,000 பெறுமதியான தங்க ஆபரணம்
ஆறுதல் பரிசுகள்
10 தங்கப் பெண்டன்கள்
போட்டி விதிகள் மற்றும் நிபந்தனைகள்
• பரிசுக்கு பதிலாக பணம் அல்லது வேறு பரிசு வழங்கப்பட மாட்டாது.
• பரிசின் வடிவம் இருப்புக்கமைய வேறுபடலாம்.
• வழங்கப்படும் பரிசுகள் தொடர்பாக எவ்வித பொறுப்பையும் ஹேமாஸ் நிறுவனம் ஏற்காது.
• ஹேமாஸ் மெனு:.பெக்சரிங்(பிரைவேட்) லிமிட்ட் மற்றும் :.பீனிக்ஸ் நிறுவன ஊழியர்கள் இப் போட்டியில் பங்குபற்ற முடியாது.
• இப் போட்டியில் ஒருவர் எத்தனை தடவைகளும் பங்குபற்ற முடிவதுடன் அது தொடர்பான விண்ணப்பங்கள் அனைத்தும் தனித்தனியாக அனுப்பப்பட வேண்டும்.
• போட்டி தொடர்பாக நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
PHOENIX O&M WP/GT/3435
விங்ஸ் உடனான :.பெம்ஸ் நப்கின்கள் 10 அடங்கிய மேலுறை ஒன்றை அல்லது 5 அடங்கிய மேலுறைகள் இரண்டினை இன்றே இம் முகவரிக்கு அனுப்புங்கள்.
:.பெம்ஸ் தங்க மில்லியன் - த.பெ. 793, கொழும்பு.
2012 பெப்ரவரி 24 வரை மட்டுமே
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது
புதிய fems
உடலுக்கும் உள்ளத்திற்கும் சௌகரியம் தரும்

# நாரந்தனைக் கணேசா கனிஷ்ட வித்தியாலயத்துக்கு தொண்டு நிறுவனங்களின் உதவிகள் எப்போது கிடைக்கும்

(சென்றவாரத் தொடர்ச்சி)

இடப்பெயர்வுகளின் பின்னர் மீண்டும் 1998 ஆம் ஆண்டில் தன்னுடைய சொந்தக்கட்டடத்தில் இயங்க ஆரம்பித்தது, நாரந்தனை கணேசா கனிஷ்ட வித்தியாலயம். சேதமுற்றிருந்த நிலையில் பாடசாலைக் கட்டடங்களைத் திருத்தியமைக்க கல்வித் திணைக்களம் உதவியது.

இடம்பெயர்ந்து சொந்த இடத்தில் இயங்கிய போதும் பிள்ளைகள் மிகவும் குறைவாகவே காணப்பட்டனர். இந்தக் காலப்பகுதியில் இடம்பெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையிலும் சிறந்த பெறுபேறு பெற்றதுடன் கடந்த ஆண்டில் நடைபெற்ற சாதாரணதர பரீட்சையில் தோற்றிய மாணவர் ஒருவர் எட்டு 'ஏ' சித்திகளையும் பெற்றிருந்தார். ஊர்காவற்றுறைக் கோட்டத்தில் சிறப்பான சித்தி பெற்ற ஒரு பாடசாலையாக வளம் குறைந்த இந்தப் பாடசாலை விளங்கியது. இது கல்விப் பணிப்பாளருக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்திருந்தது.

பாடசாலை மீள ஆரம்பிக்கப்பட்டதும் அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்ட திருமதி சற்குணராஜாவுடன் எட்டு ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர். ஆசிரியர்கள் மிக நீண்ட தூரங்களில் இருந்து காலை வந்து மாலை திரும்புகிறார்கள். எனினும் தற்போது அங்கு பயிலும் 63 மாணவர்களினதும் கல்வியிலும் ஒழுக்க நெறிகளிலும் கூடுதல் கவனம் செலுத்துகிறார்கள். பாடசாலை முடிவடைந்தும் மாணவர்களுக்கு மேலதிக வகுப்புக்களை எடுத்தபின்னரே தமது வீடுகளுக்குத் திரும்புகின்றனர். ஒரு ஒதுக்குப்புறத்தில் உள்ளது தானே என்று ஒதுங்கி விடாமல் அதன் வளர்ச்சி முன்னேற்றம் கருதி உற்சாகமுடன் பணியாற்றுவது அதிபர் ஆசிரியர்களில் காணப்படும் தனிச் சிறப்பு என்பது ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதே.



விளையாட்டு மற்றும் இணைப்பாடவிதானக் கோட்ட வலய மட்டங்களில் சிறப்பான இடம் கிடைக்கிறது. மாவட்ட மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் கூட தங்கள் பாடசாலைக்கு சிறப்பான இடம் கிடைக்க வேண்டும் என்பதிலும் ஆசிரியர்கள் கவனம் செலுத்துகின்றனர். விளையாட்டு மைதானம் புனரமைப்பை எதிர்நோக்கிக் காத்திருக்கிறது. பனம் கொட்டுக்கள் காணி முழுவதும் நிறைந்து கானப்படுகின்றன சிரமதான அடிப்படையில் அதனைச் செய்வதற்கு அங்குள்ள பெற்றோரால் இயலாது. பணம் கொடுத்து கூலியாள்கள் மூலம் செய்விக்கக் கூடிய வசதி படைத்தவர்களுமல்லர் அவர்கள். பாடசாலை உரியமுறையில் புனரமைக்கப்படாததனால் கணினி பயன்பாடுகளைச் செய்ய முடியாமல் உள்ளது. மின் இணைப்புக்களை எலி பதம் பார்த்து விட்டதாகக் கூறப்படுகின்றது.

பாடசாலை வளவுக்குள் பெரிய கிடங்கு உள்ளது. தண்ணீர் நிறைந்து நிற்கின்றது. தொலைக்காட்சிப் பெட்டிபழுதடைந்துள்ளது. மின்சார வசதி போதிய அளவுக்கு இல்லை. கணினிக்கென தனி அறை தேவை. ''வாழக்கல்மின்'' மகுடவாசகமாக இருந்தபோதும் 63 மாணவர்கள் மட்டுமே உள்ள பாடசாலை என்பதால் போதிய மாணவர்களில்லாத இந்தப் பாடசாலைக்கு அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவுவதற்கு முன்வருவதில்லை. தமது பாடசாலைக்கு உதவிகள் கிடைப்பதில்லையே என்ற கவலை அதிபர், ஆசிரியர்களுக்கு மட்டுமன்றி மாணவர்களுக்கும் உண்டு. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு மகளிர் அமைப்பு மட்டும் மாணவர்களுக்குச் சில உதவிகள் வழங்கியுள்ளன.

அரச சார்பற்ற நிறுவனங்கள் பல்வேறு உதவிகளையும் வசதிவாய்ப்பும் மிக்க பாடசாலைகளுக்கு வழங்குவதிலும் பார்க்க வசதிகுறைந்த ஒரு பின் தங்கிய கிராமத்து மூலையிலே ஒதுங்கி இருக்கும் பாடசாலை ஒன்றுக்கு வழங்குவது அந்தக் கிராமத்தின் வளர்ச்சிக்கு ஆரோக்கியமானதாக அமையும். இன்று குடிதண்ணீர், மலசல கூட வசதிகள், கணினி அறைகள் என தொண்டு நிறுவனங்கள் ஏனைய பாடசாலைகளுக்கு உதவும் போது ஒரேயொரு தொண்டு நிறுவனம் மட்டுமே இந்தப் பாட சாலைக்கு உதவியுள்ளது.


ஏனைய நிறுவனங்களுக்கு எமது மாணவர்களின் நிலைமையைப் புரிய வைத்து அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்யக் கூடியதாகத் தொண்டு நிறுவனங்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதும் இந்தக் கிராமத்து மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

**லக்ஸ்மன்**

மிகவும் பின்தங்கியுள்ள ஒரு பகுதியில் மிகுந்த பிரயாசையுடன் உருவாக்கப்பட்ட ஒரு பாடசாலை அந்தப் பகுதியின் கல்வி வளர்ச்சியில் முக்கிய இடத்தை வகித்திருந்த ஒரு பாடசாலை பின்னாளில் ஏற்பட்ட சூழல்களால் நலிவடைந்து கொண்டிருப்பதைக் கண்டும் காணாதவர்களாக அனைத்துத் தரப்பினருமே இருக்கும் பட்சத்தில் 'வாழக் கல்மின்' மகுட வாசகமே வாழ முடியாத நிலை ஏற்பட்டுவிடும் அல்லவா?

(முற்றும்)

# மரண அறிவித்தல்



## வல்லிபுரம் செல்லத்துரை

(ஓய்வு பெற்ற ஊழியர், இ.போ.ச. யாழ். சாலை)

மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், தாமோதரம்பிள்ளை வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் செல்லத்துரை 08.12.2011 வியாழக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் -சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா-சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், உருத்திரபூபதி, பாஸ்கரன் (ஜேர்மனி), மனோகரன் (பிரான்ஸ்), மகேந்திரன் (லண்டன்), சக்கரவர்த்தி (கனடா), சகாதேவன் (யப்பான்) ஆகியோரின் அன்புத் தந்தையும், குணசீலன் (முன்னாள் இ.போ.ச ஊழியர்- பருத்தித்துறைசாலை), சங்கரி (ஜேர்மனி), இந்திரவதனி (பிரான்ஸ்), ரஜனி (லண்டன்), தர்சினி (கனடா),காலஞ்சென்ற சைத்தோமாக்கி ஆகியோரின் அன்பு மாமனும், சாந்தன் (அமெரிக்கா), நிருந்தன், அரன், வனித்தா, லக்‌ஷன், லனுஜன், விக்சா, விதுசா, தாரணி, அர்சியா, சைத்தோகுறுமி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற பொன்னம்மா , குமாரசாமி, அன்னப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், யோகேஸ்வரி (ஓய்வுபெற்ற கிளை முகாமையாளர், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்-வவுனியா கிளை), புவனேஸ்வரி (உப அஞ்சல் அதிபர், சங்கத்தானை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2011) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப 11 மணிக்கு சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தாமோதரம்பிள்ளை வீதி, சங்கத்தானை,
சாவகச்சேரி.

(C/6867)(6-7-8)

தகவல்:
பிள்ளைகள்.



வடமராட்சி நெல்லியடியில்...

3 ஆவது கிளை திறப்பு விழா அழைப்பு

நல்லூர்

# சரவணா ரெக்ஸ்

ஸ்வஸ்தீ ஸ்ரீ நிகழும் மங்களகரமான கர வருடம் கார்த்திகைத் திங்கள் 28 ஆம் நாள் புதன் கிழமை (14.12.2011) சித்தயோகமும் பூச நட்சத்திரமும் சதுர்த்தி திதியும் கூடிய காலை 9 மணிமுதல் 10 மணி வரையுள்ள சுபவேளையில் 171, பிரதான வீதி, நெல்லியடியில் எமது ஸ்தாபனம் மங்களகரமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதால் வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



கிளை I:
இல.526, 529, பருத்தித்துறை வீதி,
நல்லூர் (பின் வீதி), யாழ்ப்பாணம்.
TP :021 222 1723.

கிளை II:
இல.770, 772, கே.கே.எஸ்.வீதி,
(தட்டாதெருச் சந்தி), யாழ்ப்பாணம்.
TP: 021 222 0421

கிளை III:
இல.171, பிரதான வீதி,
நெல்லியடி.
021 226 2992

(சி-6860)(1.6)

# JAFFNA ELECTRICAL நிறுவனத்தின்
## (Show Room)

விசேட விலைக்கழிவும் (10% முதல் 30% வரை)

இலவச கொடுப்பனவுகளும்

01.12.2011 முதல் கையிருப்பு உள்ளவரை மட்டுமே!

LG No 1 Dealer in SriLanka




# LG JAFFNA ELECTRICAL
## (Show Room)

141,Power House Road, Jaffna.
T.P: 021 222 8378, 5766.

No.135, A-9 Road, Kilinochchi.
T.P: 021 228 0008

Authorized Dealer for Abans

# கேரள எல்லையை நேக்கிச் சென்ற பெண்கள்; முற்றுகையை முறியடித்த பொலிஸார் தடியடி!

## 100இற்கும் அதிகமானோர் காயம்!!



தேனி, டிசெ.14

தேனி மாவட்டத்தில் முல்லைப் பெரியாறு அணை போராட்டம் வலுப்பெற்றுள்ளது. கம்பம்மெட்டு, கேரள எல்லையில் நேற்று முன்தினம் முற்றுகையிடச் சென்ற பெண்கள் மீது பொலிஸார் தடியடி நடத்தியதால், கோபமடைந்த மக்கள், பொலிஸார் மீது கல் வீசி தாக்கினர். இதில், 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

முல்லைப் பெரியாறு உரிமைக்காக ஒரு வாரமாக தேனி மாவட்டத்தில் போராட்டம் நடந்து வருகிறது. கடந்த 2 தினங்களாக லட்சம் மக்கள் திரண்டு, குமுளி எல்லையில் முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். கடந்த ஞாயிற்றுக்கிழமை போராட்டப் பகுதிக்கு வந்த அமைச்சர் பன்னீர்செல்வம் மீது, மக்கள் தாக்குதல் நடத்தினர். பொலிஸார் தடியடி நடத்தி கூட்டத்தைக் கலைத்தனர். அங்கு பதற்றம் நிலவுகிறது. நேற்றுமுன்தினம் காலை அனுமந்தன்பட்டி, புதுப்பட்டி, காக்கில்சிக்கைய கவுண்டன்பட்டி கிராமங்களைச் சேர்ந்த 10 ஆயிரம் பேர், கேரள எல்லையான கம்பம்மெட்டில் போராட்டம் நடத்தச் சென்றனர். அவர்களை கம்பம் அரசு போக்குவரத்துக் கழக அலுவலகம் அருகில், டி.ஐ.ஜி., சத்தியமூர்த்தி தலைமையிலான பொலிஸார் தடுத்தனர்.


தடையை மீறி கும்பல் சென்றது. பின்னர் கம்பம் மெட்டு பொலிஸ் சோதனைச் சாவடியில், தேனி ஏ.டி.எஸ்.பி., செல்வராஜ் தலைமையிலான பொலிஸார் தடுத்தனர். அதையும் மீறி பொது மக்கள் ஊர்வலமாக கம்பம்மெட்டு நோக்கி சென்றனர். மலை ரோட்டில் ஐந்தாவது கிலோமீற்றரில் பொலிஸ் வாகனங்களை வீதியின் குறுக்கே நிறுத்தி, தடை ஏற்படுத்தினர். விழுப்புரம் சரக டி.ஐ.ஜி., அமல்ராஜ் தலைமை யிலான பொலிஸார் தடுத்து நிறுத்தினர். பொலிஸாருக்கும், பொதுமக்களுக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. அப்போது, 500 இற்கும் மேற்பட்ட பெண்கள், டி.ஐ.ஜி.,யுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அவர்களை கலைக்க பொலிஸார், பெண்கள் மீது லேசான தடியடி நடத்தினர். கோபமடைந்த மக்கள், கற்கள் மற்றும் செருப்புகளை பொலிஸார் மீது வீசி தாக்குதல் நடத்தினர். ஆத்திரமடைந்த பொலிஸார் மலைப்பாதையில் மக்கள் மீது தடியடி நடத்தினர்.

இதில், 100 இற்கும் அதிகமானோர் காய மடைந்து காட்டுக்குள் தப்பி ஓடினர். இதையறிந்த கீழே இருந்து புறப்பட்டு வந்த மற்றொரு கூட்டம், பொலிஸ் வாகனங்களை உருட்டுக் கட்டைகளாலும், கல் வீசியும் தாக்கினர்.

செங்கோட்டை பகுதியில் கேரள எல்லை யான புளியரை வரை பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். தமிழகத்தில் கேரள எல்லைப் பகுதியான குமுளியில் தமிழக விவசாயிகள் போராட்டம் நடத்தி, கேரள எல்லைகளை அடைக்க கோரி வருகின்றனர். இதனால், குமுளி, கம்பம்மெட்டு, போடி மெட்டு வழியாக சபரிமலை செல்லும் அய்யப்ப பக்தர்கள், மாற்றுப் பாதையில் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. (வ)

# கூடங்குளம் விவகாரத்தை திசை திருப்புகிறது மத்திய அரசு

## சீமான் குற்றச்சாட்டு



கும்பகோணம், டிசெ.14

முல்லைப் பெரியாறு விவகாரத்தை தூண்டி விட்டு கூடங்குளம் பிரச்சினையை மத்திய அரசு திசைதிருப்புகிறது என்று நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக கும்பகோணத்தில் அவர் அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளதாவது:

உச்சநீதிமன்றம் முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்திக் கொள்ளலாம் என்று உத்தரவிட்டுள்ளதே அந்த அணை பலமாக உள்ளதைக் காட்டுகிறது.

ஆனால் கேரள அரசும் அங்குள்ள கட்சிகளும் சுய லாபத்துக்காக முல்லைப்பெரியாறு அணை பிரச்னையை கிளப்பி உள்ளனர். கேரள அரசும் உச்சநீதி மன்ற தீர்ப்பை மதிக்காமல் தமிழகத்துக்கு தரவேண்டிய நீரையும் தர மறுக்கிறது.

முல்லைப் பெரியாறு அணை தமிழர்களால் தமிழ்நாட்டுக்காக கட்டப்பட்டது. ஆனால் கேரள அரசு எமது உரிமையில் தலையிட்டு அதுவும் உரிமை கொண்டாடுகிறது.

கேரள அரசு புதிதாக அணை கட்ட வேண்டும் என்றால் இப்போது உள்ள அணைக்கு உள்பக்கமாகக் கட்டிக் கொள்ளலாம் வெளிப்பக்கமாக அல்ல. முல்லைப் பெரியாறு அணை பிரச்சினையில் தமிழக அரசின் அணுகுமுறை சரியாக உள்ளது.

இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ போர்குற்றவாளி என்று தமிழகத்தில் அனைவரும் கூறி வந்தனர். மேலும் 3 பேரின் தூக்குத் தண்டனையை ரத்து செய்ய வேண்டும் என்று கூறிய போது மத்திய அரசு கூடங்குளம் பிரச்சினையை ஆரம்பித்து மக்களைத் திசை திருப் பியது. தற்போது கூடங்குளம் பிரச்சினை பெரிதானவுடன் முல்லைப்பெரியாறு அணை பிரச்சினையை தூக்கி விட்டு கூடங்குளம் பிரச்சினையை திசை திருப்புகிறது - என்றார் அவர். (வ)

# முல்லைப் பெரியாறு அணை விவகாரம் பிரதமருக்கு அப்துல் கலாம் கடிதம்

சென்னை, டிசெ.14

முல்லைப் பெரியாறு அணை பிரச்சினை தொடர்பாக , பிரதமர் மன்மோகன் சிங்குக்கு அப்துல்கலாம் கடிதம் எழுதி உள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: கேரளாவுக்கு அதிக மின்சாரம், தமிழகத்துக்கு அதிக தண்ணீர், இரண்டு மாநிலங்களுக்கும் பொதுவான அணை பாது காப்பு, ஆகிய விடயங்களைக் கருத்தில் கொண்டு, இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

முல்லைப் பெரியாறில் புதிய அணை கட்டுவதற்கு பதிலாக, அணையைப் பலப்படுத்தும் வகையில், தற்போதுள்ள அணையில் 162 அடி உயரத்துக்கு பக்கவாட்டு சுவர் எழுப்பலாம். நாட்டில் உள்ள அனைத்து அணைகள், புதிதாக அமையும் அணைகள் இவற்றின் கட்டுப்பாடுகளையும்,பராமரிப்பையும் ராணுவத்தின் வசம் ஒப்படைக்க வேண்டும். இதன் மூலம், நதிகள் இணைப்பு போன்ற நடவடிக்கைகளின்போது, எந்த பிரச்சினையும் ஏற்படுவதில்லை முல்லைப் பெரியாறு பிரச்சினையால் இரு மாநில உறவும் பாதிக்கப்பட்டு விடக்கூடாது. இரு மாநில மக்களும் அமைதி காத்து, தேசிய ஒருமைப்பாட்டை நிலை நாட்ட வேண்டும் - என்று அதில் குறிப்பிட்டுள்ளார். (வ)

# கேரளாவில் தமிழக மீனவர்கள் கைது

திருச்சூர், டிசெ.14

கேரளாவில் மீன் பிடிக்க முயன்ற தமிழகத்தை சேர்ந்த 8 மீனவர்களை கேரள பொலிஸார் கைது செய்தனர். கேரள மாநிலம் திருச்சூரை அடுத்ததாக பிளாங்கட் கடற்கரை அமைந்துள்ளது. அந்தப் பகுதியில் தமிழக மீனவர்கள் 8 பேர் மீன் பிடிக்க முயற்சி செய்தனர். அப்போது அவர்களை கேரள பொலிஸார் கைது செய்தனர். கைதானவர்கள் நெல்லை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

அவர்கள் வைத்திருந்த காலி பிளாஸ்டிக் போத்தல்கள், மீன் பிடி வலைகள், படகில் இருந்த என்ஜின்களை பொலிஸார் பறிமுதல் செய்தனர். இரு மாநில எல்லையிலும் பதற்றமான சூழல் நிலவி வருகிறது. இந்தநிலையில் 8 தமிழக மீனவர்களை கேரள பொலிஸார் கைது செய்துள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (வ)

# கேரள எல்லையை நோக்கி மக்கள் பேரணி

தேனி மாவட்டம் கம்பம்-கூடலூரில் இருந்து லோயர் கேம்ப் வழியாக பொதுமக்கள் நேற்று 4 ஆவது நாளாக கேரள எல்லையை நோக்கி பேரணியாகச் சென்றனர். இந்தப் பேரணியில் சுமார் 10 ஆயிரம் பேர் கலந்துகொண்டிருந்தனர்.

மேலும் கேரளத்தில் உள்ள தமிழர் களை மீட்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி கோம்பை தேவாரம் பகுதியில் இருந்து சாக்கலூத்து மெட்டு வழியாக கேரள எல்லையை நோக்கி பேரணியாக சென்று கொண்டிருக் கின்றனர். இந்த பேரணியிலும் 10 ஆயிரம் பேர் கலந்துகொண்டுள்ளனர்.

இதனிடையே முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் கேரள அரசின் போக்கை கண்டித்து தேனி மாவட்டம் முழுவதும் நேற்று கடைகள் அனைத்தும் அடைக்கப்பட்டுள்ளன.(வ)



கொல்கத்தாவில், தனியார் ஆஸ்பத்திரியில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு காந்தி சிலை அருகே மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி தலைமையில் சர்வமத பிரார்த்தனை இடம்பெற்றது.

# இடுக்கியை தமிழகத்துடன் இணைக்க வேண்டும்

## பிரதமரிடம் காங். எம்.பிகள் கோரிக்கை

டில்லி, டிசெ.14

தேர்தல் நடத்தி இடுக்கி மாவட்டத்தை தமிழ்நாட்டுடன் இணைக்க வேண்டும் என்று காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜே.எம்.ஆருண், என்.எஸ்.வி.சித்தன் ஆகியோர் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளனர்.

பிரதமரைச் சந்தித்த இருவரும் முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் மத்திய அரசு உடனே தலையிட்டு தீர்வுகாண வேண்டும் என்று வலியுறுத்தினர்.

மேலும் கேரளாவில் உள்ள இடுக்கி, தேவி குளம், பீர்மேடு பகுதிகளை மீண்டும் தமிழ்நாட்டுடன் இணைக்க வேண்டும். இதற்காக அங்கு மக்களிடம் வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தனர்.

முல்லைப் பெரியாறு அணைப் பகுதியில் மத்திய தொழிற்பாதுகாப்பு படையி னரை நிறுத்த வேண்டும் என்றும், அந்த அணை வலுவாகவே இருப்பதால் புதிய அணை கட்ட தேவை இல்லை என்றும் எடுத்துக் கூறினர்.

பின்னர் மத்திய அமைச்சர்கள் ஏ.கே.அந்தோணி, ப.சிதம்பரம் ஆகியோரை யும் சந்தித்து அணைப் பகுதியில் பதற்றத்தைத் தணிக்க இரு மாநில அரசுகளையும் மத்திய அரசு அழைத்து பேச்சு நடத்த வேண்டும் என்றும் வற்புறுத்தினர். (வ)

# 10 தினங்களுக்குள் தீர்வு தேவை இல்லையெனில் போராட்டம் தீவிரமாகும்

## கேரள நிதி அமைச்சர் எச்சரிக்கை

முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் 10 நாள்களுக்குள் தீர்வு காணவிட்டால் போராட்டம் தீவிரமடையும் என்று கேரள நிதியமைச்சர் கே.எம்.மாணி மத்திய அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கேரள நிதித்துறை அமைச்சரும், கேரள காங்கிரஸ் (எம்) கட்சி தலைவருமான கே.எம்.மாணி பாலக்காடு அருகேயுள்ள மன்னார்காட்டில் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்:

முல்லை பெரியாறில் புதிய அணை என்ற முடிவில் இருந்து அணு அளவும் அரசு பின்வாங்காது. புதிய அணைக்காக கடந்த பட்ஜெட்டில் ரூ.5 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எம்முடைய இடத்தில் அணை கட்ட யாருடைய முயற்சியும் தேவையில்லை. முல்லைப் பெரியாறு அணை தொடர்பான விவகாரத்தில் 10 நாள்களுக்குள் மத்திய அரசு சுமுகமான ஒரு முடிவை எடுக்காவிட்டால் கேரள காங் (எம்) கட்சி 2ஆம் கட்ட போராட்டத்தில் குதிக்கும். (வ)

## வெள்ளி விழா மலர் வெளியீடு

வடமராட்சி, டிசெ.14

மேலைப்புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் வெள்ளி விழாவையொட்டி மலர் வெளியிடப்படவுள்ளது.

இந்தச் சங்கத்தின் வெள்ளிவிழா எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ளது. (ச-236)


இலங்கையில் உள்ள ஒரே ஒரு தலைமுடியியல் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சிமையம் இதுவே

V Care



DR.HAIR

TRICHOLOGY CENTRE

Hair and Scalp Clinic

தலைமுடி உதிர்தல். ஆண்.பெண் வழுக்கை. பொடுகு. இளநரை. புளுவெட்டு. Psoriasis போன்ற பிரச்சினைகளுக்கு இலங்கை. இந்திய மருத்துவர்களின் நேரடி கண்காணிப்பில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

தலைமுடி உதிர்வதை எண்ணி கவலையா..? கவலையை விட்டுத்தள்ளுங்கள்!

எதிர்வரும் 16 ,17 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடைபெறவுள்ளது.

வவுனியாவில் 19 ஆம் திகதியில்.... முன்பதிவுகளுக்கு -021 -2220288

V care Colombo - No.190, George R.De Silva Mawatha colombo 13.
V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 4923416, 021 - 2220288.







## தெல்லிப்பழை வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளர் அதிகரிப்பு

அளவெட்டி, டிசெ.14

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற வரும் நோயாளர்கள் தொகை அண்மைக்காலமாக அதிகரித்துக் காணப்படுகின்றது.

வெளிநோயாளர் பிரிவிலும் சரி, விடுதிகளில் சிகிச்சை பெறும் நோயாளிகளின் தொகை அதிகரித்துக் காணப்படுகிறது.

தற்போதைய காலநிலைக்கு அமைய காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நோயாளர்களே அதிகமாக சிகிச்சைபெற வருவதாகவும் இவர்களில் டெங்கு, நெருப்புக் காய்ச்சல் நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளதாகவும் வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

வைத்தியசாலை விடுதியில் தங்கி சிகிச்சைபெறும் நோயாளர்கள் இடம் போதாமையால் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக அங்கு சிகிச்சை பெற்று வரும் நோயாளர்கள் தெரிவிக்கின்றனர். (எ-36)

### பெயர்மாற்றம்

12ஆம் வட்டாரம் புங்குடுதீவைச் சேர்ந்த விசுவன் வேலன் ஆகிய நான் எனது பெயரினை விசுவன் அன்னலிங்கம் என 14.12.2011 இல் இருந்து பெயர்மாற்றம் செய்துள்ளேன். இனி வரும் எல்லா ஆவணங்களிலும் விசுவன் அன்னலிங்கம் என கையொப்பமிடுவேன் என இத்தால் உறுதிப்படுத்துகிறேன். விசுவன் அன்னலிங்கம்.

## செயல் திறனில் தெரிவான ச.ச. நிலையங்கள்

உள்ளூராட்சி வாரத்தையொட்டி வலி.தென் மேற்கு பிரதேச சனசமூக நிலையங்களுக்கு இடையிலான செயல்திறன் மதிப்பீட்டுப் போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களின் பெயர் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் பிரதேச மட்டத்தில் முதலாம் இடத்தை வடலியடைப்பு கலைவாணி சனசமூக நிலையமும் இரண்டாம் இடத்தை சுதுமலை தெற்கு, அம்பாள் சன சமூக நிலையமும் மூன்றாம் இடத்தை மருதடி சன சமூக நிலையமும் பெற்றுக்கொண்டுள்ளன. (எ-100)

## இரு கடைகள் மூடப்பட்டன

ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் ஆலயத்துக்கு சமீபமாகவுள்ள இரு பிரபல்யமான உணவுக் கடைகள் சுகாதாரப் பகுதியினரின் உத்தரவுக்கு அமைய மூடப்பட்டுள்ளன.

இந்தக் கடைகளில் மலசல கூட வசதிகள் இல்லாததனால் அவற்றை அமைக்கும்வரை திறக்கப் படமாட்டா என்று தெரிவிக்கப்படுகிறது. (எ-100)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### ஸயந்தன் துஷானி

இலங்கை சட்டக்கல்லூரியில் சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிஸ், சத்தியப்பிரமாண ஆணையாளர் மற்றும் கம்பனிச் செயலாளர் ஆகியவற்றுக்கான பரீட்சையில் சிறப்புச் சித்தி பெற்று 14.12.2011 இன்று உயர்நீதிமன்றத்தில் நடைபெறும் சத்தியப்பிரமாண வைபவத்தில் சத்தியப்பிரமாணம் மேற்கொள்ளும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிறப்புச் சட்டமாணி [LLB (Hons)] பட்டம் பெற்று வெளியேறிய **சுந்தரமூர்த்தி – நாகசாந்தினி** தம்பதியரின் மகள் **ஸயந்தன் துஷானி** அவர்களை மனமுவந்து பாராட்டுவதோடு அவர் மேன்மேலும் பல பட்டங்களைத்தனது கல்வித்துறையில் பெற்று சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:

கணவர்,அப்பா,அம்மா, அக்கா துஷி குடும்பம்,
தம்பி மார்கள், சுலோபன்,கஜன், மாமா –மாமி,
பெரியமாமா குடும்பம், சின்னமாமா குடும்பம்,
பெரிய சித்தி குடும்பம், ஆசைச்சித்தி குடும்பம்,
வவாசித்தி குடும்பம்.

(1654)(3.6.7)

## நகராட்சி மன்றம் சாவகச்சேரி

### 2012 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி அறிவித்தல்

சாவகச்சேரி நகரசபையின் (255ஆம் அத்தியாயமான) நகரசபைக்கட்டளைச் சட்டத்தின் கீழ் உரிமையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் சார்பில் பின்வருமாறு முடிவு செய்திருப்பதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

01. கட்டளைச் சட்டத்தின் 160(3) ஆம் பிரிவின் நியதிப்படி சாவகச்சேரி நகரசபையின் பரிபாலன எல்லைக் குட்பட்டு அமைந்திருக்கும் நெற்காணிகள் தவிர்ந்த சகல அசையாச் சொத்துக்களிலிருந்தும் வருடாந்த பெறுமதியின் 10%மான வரியொன்றினை 2012 ஆம் ஆண்டு முறையே மார்ச் 31, யூன் 30, செப்ரெம்பர் 30, டிசெம்பர் 31 ஆகிய திகதிகளிலோ அல்லது அதற்கு முன்போ நான்கு கந்தாய தவணைகள் மூலம் செலுத்தப்பட வேண்டும்.

02. 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் நாளில் அல்லது அதற்கு முன்னர் வருடாந்த விகிதங்கள் முழுமையாக செலுத்தப்பட்டால் 10% கழிவு அனுமதிக்கப்படும் என்பதுடன் விகித வருமதியாகவுள்ள அக்க கந்தாயத் திற்குரிய முதல் மாதத்திற்குள்ளாக கந்தாய விகிதம் செலுத்தப்பட்டால் 5% கழிவும் அனுமதிக்கப்படும்.

03. மேற்சொல்லப்பட்ட பந்தி 1ன் பிரகாரம் சொல்லப்பட்ட காலங்களில் விகிதங்கள் செலுத்தப்படாதவிடத்து வெற்றுக்காணிகள், வதிவிடங்கள் மீது 15%மும் மற்றும் ஏனைய இடங்கள் மீது 20%மும் விறாந்துக் கட்டணம் அறவிடப்படும்.

04 ஆதனவரி சார்பாக சகல ஆட்சேபனைகளும் ஒவ்வொரு ஆதனத்திற்கும் தனித்தனியாக 31.01.2012 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கும்படி அன்புடன் வேண்டப்படுகின்றீர்கள்.

நகராட்சிமன்றம்,
சாவகச்சேரி.
12.12.2011

இ. தேவசகாயம்பிள்ளை,
தவிசாளர்,
நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.

(C/2886)(6-7-8)

### மேல்நீதிமன்றம் யாழ்ப்பாணம் - கேள்வி அறிவித்தல்

13.12.2011 உதயனில் 23ஆம் பக்கத்தில் பிரசுரமான மேற்படி விளம்பரத்தின் தவிசாளரின் பெயர் க. பரமராஜா என்றிருப் பது தவறாகும். அதனை சு. பரமராஜா என வாசிக்கவும்.


சாய் சங்கீதா




இசைக்கருவிகள் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.

U.G. 53, பீப்பிள்ஸ் பார்க், காஸ் வேக்ஸ் வீதி, கொழும்பு - 11.

Tel : 011 2384222 / 2445102


### காணி விற்பனைக்கு

சாவகச்சேரி அரசாங்க வைத்தியசாலைக்கு அருகில் ''காட்டுக்காணி'' என்னும் பெயருடைய 6 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0786677888
0777730491


Dr.Pimple

TRICHOLOGY CENTRE

Hair and Pimple Clinic

V Care



முகப்பருக்களுக்கு International Skin Peeling சிகிச்சை முறைமூலம் நிரந்தரத்தீர்வு

எதிர்வரும் 16 ,17 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடைபெறவுள்ளது.

வவுனியாவில் 19 ஆம் திகதியில்.... முன்பதிவுகளுக்கு -021 -2220288

V care Colombo - No.190, George R.De Silva Mawtha colombo 13.
V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 4923416, 021 - 2220288.

# அமெரிக்கா-பாகிஸ்தான் இடையே நம்பிக்கை குறைந்து வருகிறது

## என்கிறார் பிரதமர் கிலானி

இஸ்லாமாபாத், டிசெ.14
அமெரிக்கா- பாகிஸ்தான் இடையே பரஸ்பர நம்பிக்கை குறைந்து வருகிறது என்று பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானி கூறியுள்ளார். பிபிசி செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியின் போதே கிலானி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஆப்கன் எல்லையை ஒட்டியுள்ள பைசாய் என்ற இடத்தில் நேட்டோ படையின் விமானங்கள் கடந்த 26ஆம் திகதி குண்டுகளை வீசித் தாக்கின. இதையடுத்து பாகிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படை வெளியேற பாகிஸ்தான் அரசு 15 நாள் கெடு விதித்தது. கெடு முடிந்ததால் பலுசிஸ்தானில் உள்ள ஷம்சி தளத்தில் இருந்து அமெரிக்கப் படை வெளியேறியது. இது அமெரிக்கா- பாகிஸ்தான் உறவில் மேலும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறுகையில், அமெரிக்கா, பாகிஸ்தான் இரு நாடுகளுக்கும் பரஸ்பர நம்பிக்கை குறைந்திருக்கிறது. கணிசமான இடைவெளி ஏற்பட்டிருக்கிறது என்றார்.



இதேவேளை அமெரிக்கப் படைகள் வெளியேறியதை அடுத்து ஷம்சி தளம் பாகிஸ்தானின் முழுமையான கட்டுப்பாட்டில் வந்திருப்பதையும் கிலானி அதிகாரபூர்வமாக அறிவித்தார். (ந)

# ஈரான் அதிபர் நிஜாத் மீது இளைஞர் செருப்பு வீச்சு

தெஹ்ரான், டிசெ.14
ஈரான் அதிபர் அகமதி நிஜாத் மீது இளைஞர் ஒருவர் செருப்பு வீசிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அதிர்ஷ்டவசமாக அந்தச் செருப்பு அவர் மீது படவில்லை.

செருப்பை வீசிய நபர் நாட்டின் வடக்குப் பகுதியில் உள்ள சாரி நகரைச் சேர்ந்தவர் என்றும் டெக்ஸ்டைல் மில்லில் வேலைப் பார்த்த அவர், சமீபத்தில்தான் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருந்தார் என்பதும் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

விசாரணையின் போது இந்த் நபர், ஈரானில் வேலையின்மை விகிதம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. வேலை யில்லாதவர்களுக்கு அரசின் உதவிகள் சரிவர கிடைப்ப தில்லை என்று குற்றம் சாட்டியுள்ளான்.



ஈரான் நாட்டில் வேலையின்மை விகிதம் 11 சதவிகிதமாக பதிவாகி உள்ளது என சமீபத்தில் அரசு கூறி யிருந்த நிலையில் ஜனாதிபதி மீது தாக்குதல் முயற்சி நடந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (ந)

# சூனியம் பழகிய சவூதி பெண்ணுக்கு மரணதண்டனை

ரியாத், டிசெ.14
சவூதி அரேபியாவில், சூன்யம், மந்திரம் பழகியதாக எழுந்த புகாரின் பேரில் பெண் ஒருவருக்கு தலை துண்டிக்கப்பட்டு கொடூரதண்டனை அளிக்கப்பட்டது.

சவூதி அரேபிய வடக்கு மாகாணமான ஜாவ்ப் பகுதியைச் சேர்ந்த அபனா- பந்த்- அப்துல்லாஹிம் நாஸர் என்ற பெண் மந்திரம், பில்லி, சூனியம் போன்றவைகளை கற்றுக் கொண்டதாகத் தெரியவந்ததை அடுத்து அந்தப் பெண் கைது செய்யப்பட்டார்.

அவர் மீதான குற்றம் நிருபிக்கப்பட்டதால் தலை துண்டித்து கொலை செய்யப்பட்டார் என அந்நாட்டு உள்துறை அமைச்சகம் செய்தி வெளியிட்டுள்ளது. (ந)



பெரு தலைநகர் லிமாவில் உள்ள அரசு மாளிகையில் நடந்த புதிய அமைச்சரவை பதவியேற்பு விழாவில், அந்நாட்டு அதிபர் ஒலான்டா ஹூமாலா (நடுவில்), அவரது மனைவி நடினி ஹெரிடியா (இடது), மற்றும் பிரதமர் ஒஸ்கர் வால்டஸ் கலந்து கொண்டனர்.

# தனது மகளையே சீரழித்த கயவனுக்கு 2,080 கசையடி; 13 ஆண்டுகள் சிறை!

ரியாத், டிசெ.14
சவூதி அரேபியாவில் தனது மகளை 7 ஆண்டுகளாக பாலியல் பலாத்காரம் செய்து வந்தவருக்கு 13 ஆண்டுகள் சிறை மற்றும் 2,080 கசையடிகள் கொடுத்து அந்நாட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்தத் தகவலை அந்நாட்டு அரசின் அதிகாரபூர்வ செய்தித்தாள் வெளியிட்டுள்ளது.

சவூதியைச் சேர்ந்த ஒருவர் கடந்த 7 ஆண்டு காலமாகத் தான் பெற்ற மகளுக்கு போதைப் பொருள் கொடுத்து சீரழித்து வந்துள்ளார். இது பற்றி தெரிய வந்த உறவினர் ஒருவர் பொலிஸுக்குத் தகவல் கொடுத்தார்.

இது குறித்து தகவல் அறிந்த பொலிஸார் அந்த நபரைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிபதிகள் பெற்ற மகள் என்றும் கூடப்பாராமல் இளம்பெண்ணை சீரழித்த குற்றத்துக்காக அவருக்கு 13 ஆண்டு சிறை தண்டனையும், தண்டனை காலத்தின் போது 2,080 கசையடி கொடுக்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்தனர். (ந)

# இந்தியாவுக்கு ஆஸ்திரேலியா யுரேனியம் வழங்குவது அமெரிக்காவுக்கு பணிந்தே

## முன்னாள் பிரதமர் விமர்சனம்

மெல்போர்ன், டிசெ.14
"இந்தியாவுக்கு யுரேனியம் வழங்குவது என்ற ஆஸ்திரேலியப் பிரதமர் ஜூலியா கில்லார்டின் முடிவு அமெரிக்க நெருக்கடிக்குப் பணிந்து எடுக்கப்பட்டது என ஆஸ்திரேலிய முன்னாள் பிரதமர் மால்கம் பரேசர் விமர்சித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் 'தி ஏஜ்' பத்திரிகையில் வெளியிட்டுள்ள கட்டுரையில் எழுதியிருப்பதாவது:அமெரிக்க நெருக்கடிக்குப் பணிந்து ஆஸ்திரேலியா எடுத்த இந்த முடிவு வெட்கமானது. கில்லார்டின் இந்த முடிவு மிகப் பெரும் தவறு. தொழிலாளர் கட்சியில் ஏற்பட்டுள்ள பிளவைப் பயன் படுத்தி தனது நோக்கத்தை அவர் நிறைவேற்றிக் கொண்டது நேர்மையான அரசியல் அல்ல.

இந்த ஒப்பந்தத்தால் ஏற்படப் போகும் ஒப்பிட முடியாத நீண்டகால விளைவுகள், இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையில், அணு ஆயுதப் போட்டியைத் தான் உருவாக்கும். தெற்காசிய நாடுகளுக்கிடையில் அணு ஆயுதப் போட்டி ஏற்படும்.

கடந்த 1998இல் காஷ்மீருக்காக, இரு நாடுகளும் மோதிக் கொண்டன. அப்படி ஒரு நிலை எதிர்காலத்தில் வரும் போது, அணு ஆயுதங்கள் பயன்படுத்தப்படும் நிலையும் உருவாகும். பாகிஸ்தானும் உலகில் வேகமாக வளர்ந்து வரும் அணு ஆயுத நாடு தான். இரு நாடுகளுக்கிடையில் உருவாகும் போர், உலகளவில் பரவவும் வாய்ப்பிருக்கிறது. இவ்வாறு, மால்கம் பரேசர் எழுதியுள்ளார்.

# கடாபியின் மகன் அல் சாதிக்கு உதவிய கனடியப் பெண் கைது

லிபியாவின் முன்னாள் அதிபர் கடாபியின் மகன் மெக்சிக்கோ அல்சாஜி வருவதற்கு உதவி செய்ததாக சிந்தியா வேர்னியர் என்ற கனடிய பெண் கைது செய்யப்பட்டார்.


இவர் வீடு, மனை விற்பனை, வாடகை விடுதி என்று பல தொழில்களைச் செய்து வந்தபோது கடாபியின் மகனான அல் சாதி என்பவர் சட்டத்துக்குப் புறம்பாக மெக்சிக்கோ வருவதற்கு உதவிகள் செய்ததற்காகக் கைது செய்யப்பட்டுள்ளார்.

மெக்சிக்கோ அதிகாரிகள் நவம்பர் மாதம் 10 திகதி இவரைக் கைது செய்தனர். டிசெம்பர் 22 ஆம் திகதி வரை அவர் சிறையில் இருக்கக்கூடும்.

இதுகுறித்து மெக்சிக்கோவின் உள்துறை அமைச்சர் கூறுகையில், அல் சாதி மெக்சிகோ வருவதற்கு வேனியர் தான் உதவி புரிந்துள்ளார் என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

மேலும் வேனியருக்கு உதவி புரிந்த இரு மெக்சிக்கோ நாட்டவர்களும் கைது செய்யப்பட்டனர். (ந)

# பிரபல நடிகை மர்லின் மன்றோவின் உடை ஏலம்



பிரபல நடிகை மர்லின் மன்றோ, ரிவர்-ஒப் நோ ரிடர்ன் என்ற படத்தில் இடம்பெற்ற பாடல் காட்சி ஒன்றுக்கு அணிந்திருந்த பச்சை நிற உடை 2.5 கோடி ரூபாவுக்கு ஏலம் விடப்பட்டுள்ளது.

கடந்த 1950 ஆம் ஆண்டில் ஹொலிவுட் ரசிகர்களின் கனவுக் கன்னியாக வலம் வந்தவர் நடிகை மர்லின் மன்றோ. இவர் ரிவர் ஒப் நோ ரிடர்ன் என்ற படத்தில் இடம் பெற்ற ஒரு பாடல் காட்சிக்கு அணிந்திருந்த பச்சை நிற உடை அப்போது மிகவும் பிரபலமாகப் பேசப்பட்டது.

சமீபத்தில் சீனாவில் ஏலம் விடப்பட்ட இந்த உடையை அமெரிக்காவைச் சேர்ந்த ஒருவர் 2.5 கோடி ரூபாவுக்கு ஏலம் எடுத்துள்ளார். (ந)

# கிரீஸ் தூதரகத்தில் பொதி செய்யப்பட்ட குண்டு

பரிஸ், டிசெ.14
பிரான்ஸ் தலைநகர் பரிஸில் உள்ள கிரீஸ் தூதரகத்துக்கு வந்த பொதி செய்யப்பட்ட வெடிகுண்டினால் பரபரப்பு ஏற்பட்டது.

இது குறித்து பிரான்ஸ் பொலிஸார் கூறுகையில்; கிரீஸ் தூதரகத்துக்கு வந்த ஒரு பொதியில் வெடிகுண்டு இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. உடனடியாக சரியான நேரத்தில் செயலிழக்கச் செய்யப்பட்டது என்றனர். (ந)

# மசூதிகளில் ஒலிபெருக்கி பயன்படுத்த இஸ்ரேலில் தடை

## புதிய சட்டத்துக்கு பிரதமர் பெஞ்சமின் ஆதரவு

ஜெருசலேம், டிசெ.14
இஸ்ரேலில் உள்ள மசூதிகளில் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தத் தடை விதிக்கும் புதிய சட்டத்துக்குப் பிரதமர் பெஞ்சமின் நெடான்யாஹூ ஆதரவு தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலில் பெய்ட்டெய்னு கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அனஸ்டசியா மிக்கேலி இஸ்ரேல் நாட்டில் உள்ள மசூதிகளில், தொழுகைக்கு மக்களை அழைக்கப் பயன்படுத்தப்படும் ஒலிபெருக்கியைத் தடை செய்யும் விதத்தில் புதிய மசோதா ஒன்றைக் கொண்டு வந்துள்ளார். இந்தச் சட்டத்தின்படி எந்த விதமான மதத் தலங்களிலும் மக்களுக்கு இடையூறு செய்யும் வகையில் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தக் கூடாது. எனினும், மசூதிகளில் ஒலிபெருக்கிப் பயன்பாட்டைத் தடுக்கும் நோக்கில் இந்த மசோதா கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மசோதா குறித்து, மிக்கேலி கூறுகையில், ஒலிபெருக்கி அழைப்புகளால் இஸ்ரேல் மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்படுகிறது. மதச் சுதந்திரம் என்கிற பெயரால் வாழ்க்கைத் தரம் பாதிக்கப்படக் கூடாது என்ற உலக நோக்கில் இந்த மசோதா கொண்டு வரப்பட்டுள்ளது. இது மதப் பிரச்சினை அல்ல. சுற்றுச் சூழல் பிரச்சினை என்றார்.

மசோதாவை வரவேற்றுள்ள பிரதமர் பெஞ்சமின் நெடான் யாஹூ, "ஐரோப்பாவை விட, அதிக சுதந்திரம் இஸ்ரேலில் தேவையில்லை. இந்த ஒலி பெருக்கியால் அவஸ்திப் படும் மக்கள், என்னிடம் புகார் தெரிவித்துள்ளனர்.ஐரோப்பாவின் அனைத்து நாடுகளிலும், இதே பிரச்சினை இருந்து வருகிறது. பெல்ஜியம், பிரான்ஸ் போன்ற நாடுகள் சட்டப்பூர்வத் தடை கொண்டு வந்துள்ளன. அதே தடையை இங்கு ஏன் கொண்டு வரக் கூடாது" எனக் கேள்வி எழுப்பினார்.எனினும், துணைப் பிரதமர், அமைச்சர்கள் சிலர் இந்த மசோதாவுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதால் மசோதா மீதான விவாதத்தை நெடான்யாஹூ தள்ளி வைத்துள்ளார். (ந)

# சுப்பஸ்ராரை வென்றது நியூபைட்

யாழ்ப்பாணம்,டிசெ.14

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 11 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்றில் நியூபைட் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை வைரவப்புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டு மைதானத்தில் மின்ஒளியில் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் நியூபைட்விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சுப்பர்ஸ்ரார் விளையாட்டுக் கழகஅணி மோதிக் கொண்டது.

முதல்பாதி ஆட்டம் ஆரம்பமாகிய போது இரண்டு அணியினரும் அபாரமாக ஆடினர்.

முதற்பாதி ஆட்டத்தில் இரண்டு அணியினரும் தலா 2 கோல்களைப் பெற்றிருந்தனர்.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் தமது அணிக்கான கோல்களைப் பெறவேண்டும் என்ற எண்ணத்தோடு இரண்டு அணிகளும் களம் இறங்கியதால் ஆட்டம் சூடுபிடிக்க தொடங்கியது.

இரண்டு அணியினரும் எதிரணியின் கோல்பரப்பை மாறி மாறி ஆக்கிரமித்தவண்ணமிருந்தனர்.

இதன் பயனாக சூப்பர்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி தனது அணிக்கான மூன்றாவது கோலைப் பெற்றது.

நியூபைட் விளையாட்டுக் கழக அணி தமக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை சரியான முறையில் பயன்படுத்தி தனது அணிக்கான மூன்றாவது கோலைப் போட்டது. இதனால் ஆட்டம் சமநிலைபெற்றது.

இதன்போது நியூபைட் விளையாட்டுக் கழக அணி மேலும் ஒரு கோலைப் பெற்றது. ஆட்ட முடிவில் நியூபைட் விளையாட்டுக்கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

(த-23)

# முல்லைத்தீவின் விளையாட்டுத்துறை அபிவிருத்தி தொடர்பாக ஆராய்வு

யாழ்ப்பாணம்,டிசெ.14

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2012 ஆண்டில் விளையாட்டை அபிவிருத்தி செய்வது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகன் தலைமையில் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

வடமாகாண விளையாட்டு துறைப் பணிப்பாளர் சி.அண்ணாத்துரை, கரைத்துறைப் பற்று, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய பிரதேச செயலர் பிரிவு களின் விளையாட்டு உத்தி யோகஸ்தர்கள், முல்லைத் தீவு மாவட்ட உதைபந்தாட்டம், கபடி ஆகியவற்றின் பயிற்றுநர்கள் முல்லைத் தீவு, துணுக்காய் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், முல்லைத்தீவு மாவட்ட செயலக அதிகாரிகள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலின் போது 2012 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் வட மாகாண விளையாட்டுப் போட்டிகளின் முதல் நிகழ்வான ஊர் சுற்றும் போட்டி ஜனவரி மாதம் 7 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெறவுள்ளது என தெரிவிக்கப்பட்டது. அத்துடன் 2012 ஆம் ஆண்டுக்கான பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகளை நடத்துவது குறித்தும் இங்குகலந்துரையாடப்பட்டது. (த-23)

# மின்னல் வேக சதுரங்கப் போட்டி

யாழ்ப்பாணம்,டிச.14

யாழ். சதுரங்கச் சம்மேளனத்தினால் யாழ். மாவட்டத்தில் முதல் முறையாக மின்னல் வேக சதுரங்கப் போட்டி,20/20 சதுரங்கப் போட்டி என்பன நடத்தவுள்ளன.

டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் சர்வதேச சதுரங்கப் போட்டியை முன்னிட்டு மேற்படி போட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

20/ 20 சதுரங்கப்போட்டி 9,11,13,15,17 வயதுப் பிரிவுகளில் ஆண்,பெண் இருபாலருக்கும் இடம்பெறும்.

மின்னல்வேக சதுரங்கப் போட்டி திறந்த போட்டியாக இடம் பெறும் என யாழ்.சதுரங்க சம்மேளனத்தின் செயலாலர் கே.ஆதவன் தெரிவித்தார். (த-23)

# இன்றைய ஆட்டம்

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 11 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் இன்று புதன் கிழமை மாலை 6 மணிக்கு ரைவப்புளியங்குளம் யங்ஸ்ரார் மைதானத்தில் மின்ஒளியில் இடம்பெறவுள்ளது.

இதல் ஈகில் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சன்சையின் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டு அவை யாழ்.மாவட்டத்தில் அழைக்கப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திய அமரர் பொன்னம்பலம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான புருட்சல் உதைபந்தாட்டப் போட்டியில் மூன்றாம் இடத்தை மானிப்பாய் இந்துக் கல்லூரி பெற்றுக் கொண்டது. (த-86)

# 'பார்முலா-1' 2011 கார்ப் பந்தயப் போட்டி
# மீண்டும் களமிறங்குவாரா அஜித்குமார்?



2012ஆம் ஆண்டு நடைபெறவுள்ள 'பார்முலா-1' கார்ப் பந்தயப் போட்டியில் தென்னிந்தியத் திரைப்பட நடிகர் அஜித் களமிறங்கவுள்ளார் எனத் தெரியவருகிறது.

அடுத்த ஆண்டிற்கான 'பார்முலா-1' கார்ப்பந்தயப் போட்டியின் 17ஆவது சுற்று இந்தியாவில் நடைபெறவுள்ளது. இது அடுத்த வருடம் ஒக்டோபர் மாதம் 28ஆம் திகதி நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதி இந்தியாவில் முதல் முறையாக நடந்த கிராண்ட் பிரிக்ஸ் கார்ப் பந்தயப் போட்டி வெற்றிகரமாக நடத்தப்பட்டு அனைவரின் பாராட்டுக்களையும் பெற்றது.


இதனையடுத்து இந்தாண்டும் இப்போட்டியை இந்தியாவில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. மொத்தம் 20 சுற்றுக்களைக் கொண்டது இந்தப் போட்டி.

முதல் போட்டி மார்ச் மாதம் 18ஆம் திகதி ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் தொடங்குகிறது. பின்னர், சீனா, ஸ்பெயின், பக்ரைன், கனடா, இங்கிலாந்து, ஜேர்மனி, ஹங்கேரி, பெல்ஜியம், சிங்கப்பூர், ஜப்பான், கொரியா, பிரேஸில் உட்படப் பல்வேறு பகுதிகளிலும் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் இந்தியா சார்பாக நரேன் கார்த்திகேயனுடன் நடிகர் அஜித்குமார் களமிறங்க வாய்ப்பு உள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும், இதுகுறித்து உத்தியோகபூர்வ அறிவித்தல்கள் எதுவும் வெளிவரவில்லை.

# சினிமாவில் ரஜினி கிரிக்கெட்டில் யுவராஜ்







இந்தியச் சினிமா சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தையும், கிரிக்கெட் வீரரான யுவராஜ் சிங்கையும் ஒப்பிட்டு டோனி கருத்து வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் சென்னையில் வைத்து நேற்றுமுன்தினம் கூறுகையில்,

இன்று (நேற்றுமுன்தினம்) பிறந்த நாள் காணும் யுவராஜ் சிங் மற்றும் தென்னிந்தியாவின் மிகப் பெரிய நடிகரான ரஜினிகாந்த் ஆகியோருக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன் என நேற்று முன்தினம் சென்னையில் வைத்து டோனி தெரிவித்தார்.

அத்துடன், சினிமா உலகில் ரஜினிகாந்த் எப்படி சூப்பர் ஸ்டாராக இருக்கிறாரோ, அதே போல் இந்தியக் கிரிக்கெட் உலகின் சூப்பர் ஸ்டார் யுவராஜ் சிங் தான் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# உலக ஹொக்கி லீக் தொடர் அடுத்த ஆண்டுக்கு ஒத்திவைப்பு

ஆரம்பத்திலிருந்தே சர்ச்சைகளைச் சந்தித்து வந்த உலக சீரிஸ் ஹொக்கி லீக் தொடர், அடுத்த ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்திய ஹொக்கிக் கூட்டமைப்பு (ஐ.எச்.எவ்.) மற்றும் தனியார் நிறுவனம் இணைந்து உலக சீரிஸ் ஹொக்கி லீக் தொடரை (டபிள்யு.எஸ்.எச்.) நடத்தவிருந்தது.

இதற்காக இந்திய அணி வீரர்கள் உட்பட உலகின் பல அணிகளைச் சேர்ந்த, 200 பேர் ஒப்பந்தம் செய்யப்பட்டனர்.

எதிர்வரும் 17ஆம் திகதி இத்தொடர் நடைபெறவிருந்தது.

இத்தொடருக்கு, சர்வதேச ஹொக்கிக் கூட்டமைப்பும், ஹொக்கி இந்தியாவும் (எச்.ஐ.) அனுமதி வழங்கவில்லை.

இத்தொடரில் பங்கேற்கும் இந்திய வீரர்கள், தேசிய அணியில் சேர்க்கப்படமாட்டார்கள் என்று மிரட்டப்பட்டனர் எனவும் கூறப்படுகிறது. இதையடுத்து இந்திய முன்னணி வீரர்கள் விலகினர்.

இந்நிலையில், தற்போது இத்தொடர் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# சமையல் அறையில் சூடுவாங்கிய வோர்ன்

சென்னை, டிசெ.14

ஆஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளரான வோர்ண், உள்ளூரில் நடைபெறவுள்ள 'பிக் பாஸ்' இருபது-20 போட்டியில் விளையாட முடிவுசெய்திருந்தார்.

இந்நிலையில், அவர் வீட்டில் சமையல் செய்தபோது வலது கை விரலில் தீக்காயம் ஏற்பட்டது.

இதனால் அவர் பிக்பாஸ் போட்டியில் விளையாடுவது சந்தேகம் என்று கூறப்படுகிறது.


# மல்லாவியில் ஞாயிறன்று கரப்பந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம்,டிசெ.14

முல்லைத்தீவு மாவட்டத்துக்கான ஜனாதிபதி தங்க கிண்ணத்துக்காக பிரதேச செயலர் ரீதியாக நடைபெறும். ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மல்லாவி மத்திய கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

கரைத்துறைபற்று, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய 5 பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த ஆண், பெண் போட்டியாளர்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். (த-23)

# நல்லதோர் ஆட்டத்தை எதிர்கொண்ட திருப்தியுடன் இந்தியாவை விட்டு விடைபெறுகின்றோம்



"ஒவ்வொரு வீரரிட மிருந்தும் என்ன எதிர்பார்த் தேனோ அதை அவர்கள் செய்தார்கள்"

இந்தியாவில் நல்லதொரு ஆட்டத்தை எதிர்கொண்ட மனத் திருப்தியோடு நாங்கள் இந்தியாவை விட்டுச் செல்கி றோம்'' - என்று மேற்கிந்தி யத் தீவுகள் அணித்தலைவர் சமி தெரிவித்துள்ளார்.

இந்தியத் தொடரில் கண்ட தோல்வி குறித்துக் கருத்துக் கூறும்போதே அவர் இதனைத் தெரி வித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

இந்தியத் தொடரின் கடைசி ஆட்டத்தில் சதமடித்த பொலாட்டுக்கு வாழ்த்துத் தெரிவித்துக் கொள்கிறேன். அவரது ஆட்டத்தைப் பார்க் கும்போது மகிழ்ச்சியாக இருந்தது.

ஒவ்வொரு வீரரும் கடு மையாகப் போராடினார்கள். நாங்கள் ஒரு நல்ல ஆட் டத்தை எதிர்கொண்டோம். ஆனால், அதை வெற்றி கரமாக முடிக்கத் தவறிவிட் டோம். ஒவ்வொரு வீரரிடமி ருந்தும் என்ன எதிர்பார்த் தேனோ அதை அவர்கள் செய்தார்கள்.

அந்தத் திருப்தியோடு இந் தியாவைவிட்டுச் செல்கிறோம். சேவாக் மற்றும் அவரது அணிக்கு எங்களது வாழ்த் துக்கள் - என்றார். (15)


# முத்தரப்பு தொடரில் யுவராஜ்!



நுரையீரல் கட்டி காரணமாக மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான ஒருநாள் தொடரில் இடம்பெறாத யுவராஜ்சிங் ஆஸ்திரேலிய, இந்திய, இலங்கை அணிகளுக்கிடையிலான முத்தரப்பு ஒருநாள் தொடரில் பங்கேற்க முடிவு செய்துள்ளார்.

மும்பையில் நடந்த தனியார் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற அவர் ஆஸ்திரேலியாவில் பெப்ரவரி மாதத்தில் தொடங்கவிருக்கும் முத்தரப்பு ஒருநாள் தொடரில் விளையாட முடிவுசெய்துள்ளேன் எனத் தெரிவித்தார். (15)

# சேவாக் அதிரடியில் முன்னேற்றம்



சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளின் அடிப்படையில் வீரர்களின் தரவரிசையில் இந்திய வீரர் சேவாக் 12 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான 4 ஆவது ஒருநாள் ஆட்டத்தில் 219 ஓட்டங்களைக் குவித்து உலக சாதனை படைத்ததன் மூலம், அவர் தரவரிசையில் 20 ஆவது இடத்திலிருந்து 12 ஆவது இடத்துக்கு முன்னேறினார்.

டோனி 5 ஆவது இடத்திலும், கம்பீர் 18 ஆவது இடத்திலும் உள்ளனர். ரோஹித் சர்மா 36 ஆவது இடத்தில் உள்ளார்.

அதேவேளை, மேற்கிந்தியத் தீவுகள் வீரர்களான பொலாட் 51 ஆவது இடத்திலிருந்து 11 ஆவது இடத்துக்கும், பிராவோ 55 ஆவது இடத்திலிருந்து 14 ஆவது இடத்துக்கும், ருஷெல் 66 ஆவது இடத்திலிருந்து 44 ஆவது இடத்துக்கும் முன்னேறியுள்ளனர்.

பந்துவீச்சாளர்களுக்கான தர வரிசைப் பட்டியலில் இந்தியாவின் ரவீந்திர ஜடேஜா 13 ஆவது இடத்துக்கும், மேற்கிந்தியத் தீவுகள் வீரர் ரோச், 10 இடங்கள் முன்னேறி 25ஆவது இடத்துக்கும் முன்னேறியுள்ளனர். அதேபோல் ராம்போல், டரன் சமி ஆகியோரும் தரவரிசைப் பட்டியலில் முன்னேறியுள்ளனர். (15)

# ஆட்டத்தில் அனல் பறக்கும்; வார்த்தையில் சூடு இருக்காது

"எதிரணியினர் சிறப்பாகச் செயற்படா மல் நாங்கள் வெற்றி பெறவேண்டும் என்று விரும்பவில்லை."

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை வெல்ல இந்திய அணிக்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது என்று டோனி நம்பிக்கை தெரிவித்தார்.

டோனி தலைமையிலான இந்தியக் கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 4 டெஸ்ட் ஆட்டங்கள், இரண்டு 'ரி-20' ஆட்டங்கள் மற்றும் 3 நாடுகளுக்கிடை யிலான ஒருநாள் தொடரில் விளையாடவுள்ளது.

முதலில், இந்திய- ஆஸ்தி ரேலிய அணிகளுக்கிடையி லான முதலாவது டெஸ்ட் ஆட்டம் மெல்போர்னில் எதிர் வரும் 26 ஆம் திகதி தொடங்க வுள்ளது.

டெஸ்ட் ஆட்டத்துக்கு முன்ன தாக இந்திய அணி இரண்டு பயிற்சியாட்டங்களில் ஆஸ்தி ரேலிய கிரிக்கெட் சபைத் தலைவர் பதினொருவர் அணி யுடன் விளையாடவுள்ளது.

டெஸ்ட் ஆட்டத்துக்குத் தயாராகும் நோக்கில் டெண் டுல்கர், டிராவிட், லக்ஸ்மன், இஷாந்த் சர்மா, உமேஷ் யாதவ், விருத்திமான் சஹா, பிரக்யான் ஓஜா ஆகியோர் ஏற்கனவே ஆஸ்திரேலியா சென்றுவிட்டனர். அணித் தலை வர் டோனி, சேவாக், கௌதம் கம்பீர், விராத் ஹோக்லி, அஸ் வின், ரோஹித் ஷர்மா உள் ளிட்ட இந்திய அணி வீரர்கள் நேற்றுமுன் தினம் ஆஸ்தி ரேலியா நோக்கிப் புறப்பட்டுச் சென் றனர்.

இந்திய அணி புறப்படும் முன் னர் சென்னையில் வைத்து செய்தியாளர்களை டோனி சந்தித்தார்.



அப்போது அவர் கூறி யவை வருமாறு:-

கடந்த முறை ஆஸ்திரேலிய சுற்றுப்பயணத்தின் போதும் எங்களுக்கு சிறப்பான வாய்ப் புக்கள் இருந்தது. அதே வேளை, நாங்களும் சிறப் பாகச் செயற்பட்டோம்.

எதிரணியினர் சிறப்பாகச் செயற்படாமல் நாங்கள் வெற்றி பெறவேண்டும் என்று விரும்ப வில்லை. இந்த முறை டெஸ்ட் தொடரில் நாங்கள் வெற்றி பெற நல்ல வாய்ப்பு உள் ளது. எங் களிடம் உள்ள திறமையான வீரர்களைக் கொண்டு எங்களது சிறந்த ஆட்டத்தை நாங்கள் வெளிப் படுத்துவோம்.

எங்களது பலம் மற்றும் பலவீனத்தில் நாங்கள் கவ னம் செலுத்துவோம். எந்த மாதிரி எதிரணியினர் ஆடுவார் கள் என்பது குறித்து நாங்கள் கவலைப்படமாட்டோம்.

எங்களது பந்துவீச்சாளர் கள் திறமையானவர்கள். இளம் வீரர்கள் அதிக ஆட்டங் களில் விளையாட வாய்ப்புக் கிட்டும்போது அனுபவத்துடன் நல்ல நிலைக்கும் உயர முடி யும். அணியில் இடம் பிடித் துள்ள இளம் வீரர்களுக்கு ஆஸ்திரேலியப் பயணம் அவர்கள் திறமையை வெளிப் படுத்த நல்ல வாய்ப்பாகும்.

டெஸ்ட் தொடருக்கு முன்பு அதிக காயப்பிரச்சினை இருக் காது என்று நம்புகின்றேன். துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என்று 3 துறைகளி லும் நாங்கள் முன்னேற்றம் காண வேண்டியது அவசியமான தாகும். அதேவேளை, பிடி யெடுப்பு மிகவும் முக்கிய மானதாகும். அது ஆட்டத் தின் வெற்றியை நிர்ணயிப் பதாகும். சர்வதேச கிரிக்கெட் டில் ஒவ்வொரு நாளும் முன் னேற்றத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும். கடந்த முறைபோல் இந்த முறை களத்தில் வீரர் களிடையே வாக்குவாதம் இருக்காது என்று நம்புகிறேன். ஆட்டத் தில் அனல் பறக்கலாம். ஆனால், வார்த்தையில் சூடு இருக்காது - என்றார். (15)

# சுழல் மன்னனுக்கு தலையைச் சுற்றிய கும்பல்




இந்தியக் கிரிக்கெட் அணியின் சுழல் பந்துவீச்சாளரான ஹர்பஜன் சிங்கின் கார் உடைக்கப்பட்டு அதனுள் இருந்த அவரது முக்கியமான ஆவணங்கள் திருடப்பட்டுள்ளன.

இந்தியக் கிரிக்கெட் வீரர் ஹர்பஜன் சிங் நேற்றுமுன்தினம் மாலை நண்பர்க ளுடன் காரில் சென்று டில்லியிலுள்ள ஹோட்டல் ஒன்றின் முன்பாக காரை நிறுத்திவிட்டு உள்ளே சென்றார்.

பின்னர் அவர் திரும்பி வந்து பார்த்தபோது கார் உடைக்கப்பட்டிருந் தது. அத்துடன், உள்ளே வைத்திருந்த அவரது, கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப் பத்திரம், 10 கடனட்டைகள் என்பன காணமற்போயுள்ளன.

காரை நிறுத்திவிட்டுச் சென்ற 5 நிமிடங்களில் மர்ம மனிதர்கள் காரை உடைத்து திருட்டு விளையாட்டு விட் டுள்ளனர். இதுகுறித்து ஹர்பஜன்சிங் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

அதேவேளை, இந்தச் சம்ப வத்துடன் தொடர்புடையவர்கள் கடவுச் சீட்டையும், சாரதி அனுமதிப் பத்திரத் தையும் திருப் பித்தர வேண்டும் என்று ஹர்பஜன் சிங் கோரியுள்ளார். (15)

## மக்கள் பங்கேற்புடனான கலந்துரையாடல்

யாழ். மாநகர சபையால் நடத்தப்படும் J/104 கிராம சேவையாளர் பிரிவின் மக்கள் பங்கேற்புடனான கிராம அபிவிருத்தி திட்டமிடல் கூட்டம் இன்று (14.12.2011) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சைவபரிபாலன சபை, நீராவியடியில் (நாவலர் ஆச்சிரம மண்டபம் ) நடைபெறவுள்ளது. எனவே இந்தக் கூட்டத்தில் பங்குபற்றி தங்கள் பிரிவின் கிராம அபிவிருத்திக்கான ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா,
மாநகர முதல்வர், யாழ்ப்பாணம்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 26 | | 25 |
| 04 | | 11 |
| 1975 | | 2010 |



அமரர் பத்திநாதன் சோபாநோபேட் (யோகா)

ஆண்டொன்று சென்றாலும்
நீங்காத நினைவுகளுடன்

முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

என்றென்றும்
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 10 | | 14 |
| 05 | | 11 |
| 1931 | | 2011 |



அமரர் முருகர் நாகமுத்து

14.11.2011 அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் முருகர் நாகமுத்து அவர்களின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், ஏனைய வழிகளில் தங்களது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு இன்று (14.12.2011) புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறவிருக்கும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

12/9, மாரியம்மன் வீதி, திருநெல்வேலி.

குடும்பத்தினர்.

**பனையைப்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணியளவில் இடம்பெற்ற கோர விபத்தில் இருவர் அந்த இடத்திலேயே உடல் சிதைந்து உயிரிழந்தார்கள்.

மன்னார் மாவட்ட செயலகத்தின் 'நியாப்' திட்டத்துக்குச் சொந்தமான பஜிரோ வாகனமொன்று நெல்லியடியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்தது. இதேவேளை யாழ்ப்பாணம் செல்வதற்காக பஸ்ஸுக்குக் காத்திருந்த பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகைச் சேர்ந்த மாணவன் கோபிநாத், குறித்த பஜிரோ வாகனத்தில் ஏறிக்கொண்டார். அந்த பஜிரோ வாகனம் குஞ்சர் கடைச் சந்திக்கு அண்மையில் வந்த போது மழை பெய்து கொண்டிருந்தது. இந்த நிலையில் திடீரென வேகக் கட்டுப்பாட்டை இழந்த பஜிரோ எதிரே இருந்த பனை மரத்துடன் பலமாக மோதியது. பின்னர் எதிரே இருந்த மின் கம்பத்துடன் மோதி அதனை கீழே சாய்த்து அருகிலுள்ள கடையொன்றின் மதில் சுவர் மீது மோதிய பின்னே நின்றது.

இதேவேளை வாகனம் மோதியதில் பனை மரம் முறிந்து வாகனத்தின் மேல் சரிந்து விழுந்தது. இதனால் குறித்த வாகனம் உருத்தெரியாமல் சிதைந்து சின்னாபின்னமானது.

இந்தச் சம்பவத்தில் குறித்த வாகனத்தைச் செலுத்தி வந்த வாகனச் சாரதியான துன்னாலை வடக்கு பகுதியைச் சேர்ந்த கணேசமூர்த்தி பார்த்தீபன் (வயது 22) மற்றும் இந்த வாகனத்தில் இடை நடுவில் ஏறிக்கொண்ட பல்கலைக்கழக மாணவனான கரவெட்டிப் பகுதியைச் சேர்ந்த செல்வநாயகம் கோபிநாத் (வயது-21) ஆகிய இருவரும் அந்த இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

இவர்களுடன் சேர்ந்து வாகனத்தில் பயணித்த பிறிதொரு நபரான அல்வாய் தெற்கு, அல்வாயைச் சேர்ந்த அம்பிகைபாகன் செந்தூரன் (வயது - 21) படுகாயங்களுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஸ்தலத்துக்கு விரைந்த நெல்லியடிப் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் வீரசூர தலைமையிலான குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டனர். நேற்றுப் பகல் சம்பவ இடத்துக்கு விரைந்த பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி வ.பாஸ்கரன் மரண விசாரணைகளை மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின் சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. மிதமிஞ்சிய வேகமே கோரமான இந்த விபத்துக்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ங-209-236-311-319-86)

## தவறிவிட்டது

செசி இல: MD2DHDHZZPCC 26874, இயந்திர இல: DHG BPC 68946 யும் கொண்ட EP TC-0302 இலக்கமுடைய CBZ மோட்டார் வாகனத்தின் பதிவுச் சான்றிதழ் 09/12/2011 அன்று தவறவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்தரப்படும் முகவரிக்கோ அல்லது தொலைபேசி இலக்கத்துக்கோ அறிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தொலைபேசி இல: 0779385890/0773878374
முகவரி: மார்ட்டின் ஜெயராஜா
யஸ்தஸ் சின்னப்பு வீதி, புதுவளவு,
சுன்னாகம்.

## TYPE SETTING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக்கட்டுரைகள், புத்தகங்கள், மாணவர் கையேடு, பரீட்சை வினாத்தாள் மற்றும் பக்கவடிவமைப்புக்களும் கணனி மூலம் நியாயமான விலையில் நவீன தரத்துடன் செய்து கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு.

NORTH LEAD

Photocopy- 3/= Laser Print - 5/=

328, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel: 222 4459, 0772533390, Fax: 222 4460

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 11 | | 04 |
| 07 | | 12 |
| 1924 | | 2001 |



அமரர் சிதம்பரப்பிள்ளை கந்தையா
(கைதடி)

நேற்றுப்போல் இருக்கிறது நீங்கள் இருந்த நினைவுகள்
ஆண்டொன்று சென்றாலும் ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அப்பா என்று அழைப்பதற்கு நீங்கள் இல்லையே
எங்கள் மனதில் உங்கள் நினைவுகள் என்றும் நிலைத்திருக்கும்.
உங்கள் ஆத்மா சாந்தி பெற

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நிரந்தர முகவரி: கைதடி வடக்கு.
தற்காலிக முகவரி:
விளையாட்டு அரங்கு வீதி, கோப்பாய் தெற்கு.

குடும்பத்தினர்.

(625) (6-10)

## முக்கிய அறிவித்தல்
## வலிகாமம் தெற்கு பிரதேசசபை-சுன்னாகம்

**1) கட்டட அனுமதி/அமைவுச்சான்றிதழ் பெற்றுக்கொள்ளல்.**

வலிகாமம் தெற்கு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் புதிதாக அமைக்கப்படும் கட்டடங்கள், எல்லைச் சுவர்கள் போன்ற கட்டட அமைவுகள் யாவும் வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் முன் அனுமதி பெற்றுக்கொண்ட பின்னரே அமைக்கப்படவேண்டும். அத்துடன் கட்டட அனுமதிபெற்று. அமைக்கப்பட்ட கட்டடங்கள் யாவற்றுக்கும் அமைவுச் சான்றிதழ் பெற்றுக்கொள்ள வேண்டும். தவறின் 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரமும் வீடமைப்புக் கட்டளைச்சட்டம் (அ268) விதிகளின்படியும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

**2) பொது இடங்களில் கழிவுகள் போடுதல் தொடர்பான அறிவித்தல்.**

வலிகாமம் தெற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவுப்பொருள்களை அனுமதியின்றி கொண்டு செல்லல், கொட்டுதல் ஆகியன பொதுச்சுகாதாரத்தைக் கருத்திற்கொண்டு தடைசெய்யப்பட்டுள்ளது. தவறின் பிரதேச சபைக் கட்டளைச்சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச்சட்டம் போன்றவற்றின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

தி. பிரகாஷ்
தவிசாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

(C/6869) (6-10)

## Delivery van for sale in Jaffna

Registered, Unused, Dual AC. Price 2.7 M,
Contact- 0778594178

## REPAIRING

Contact : 021-222 4459, 0774192275

சகலவிதமான கணனிகளும், இலத்திரனியல் உபகரணங்களும் ஒரே நாளில் உடனுக்குடன் பழுதுபார்த்துக் கொடுக்கப்படும். உங்கள் கணனிகளை வீடுகளுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ வந்து, ஒரே நாளில் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.

NORTH LEAD
Computer Sales and Service Center
328, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)

## கிருஷ்ணா அடகு சேவை

இல.370, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம். பதிவு இல. J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2010ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 31ஆம் திகதி (31.10.2010) இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2012ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ஆம் திகதி (15.01.2012) இற்கு முன்பு மீட்கவும். மீட்க முடியாவிட்டால் தற்போதைய சந்தைப் பெறுமதிப்படி அடைவுத் தொகையைக் கூட்டிப் பெற்றுக்கொள்ளவும். இரண்டும் செய்யத் தவறின் 15.01.2012 ஆம் திகதி விற்கப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

இல.370, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே- 0212225046.

உரிமையாளர்.

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை மானிப்பாய்
## 2012ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

*2011.11.17 ஆம் திகதி உதயன், வலம்புரி பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கேள்விப் படிவக் கட்டணம், கேள்வி வைப்பு, வாடகை என்பன 2012ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தலின் நிபந்தனைக்கு அமைய பின்வரும் விவரப்படி 01.01.2012 தொடக்கம் 31.12.2012 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி கோரப்படுகின்றன. மேலதிக விவரங்களை உப அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

| | |
|---|---|
| கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித் திகதி- | 2011.12.21 ஆம் திகதி பி.ப 1 மணிவரை |
| கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி- | 2011.12.22 ஆம் திகதி ந.ப 12 மணிவரை |
| கேள்விகள் திறக்கப்படும் திகதி- | 2011.12.22 ஆம் திகதி பி.ப 2 மணி |

### 2012 ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அட்டவணை

| கேள்வி விவரம் | ஆகக் குறைந்த தொகை (NBT,VAT தவிர) |
|---|---|
| **மானிப்பாய் பட்டின உப அலுவலகம்** | |
| மானிப்பாய் பொதுச் சந்தை | 1405668.00 |
| மானிப்பாய் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 122452.00 |
| **மானிப்பாய் கிராம உப அலுவலகம்** | |
| சாவற்கட்டு சந்தை | 172040.00 |
| நவாலி பிரசாத் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 27600.00 |
| நவாலி பிரசாத் சந்தை கோழி இறைச்சிக்கடை | 19780.00 |
| ஆனைக்கோட்டை சந்தி ஆட்டிறைச்சிக்கடை | 55863.00 |
| **பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம்** | |
| பண்டத்தரிப்பு பொதுச்சந்தை (மரக்கறி) | 342562.00 |
| பண்டத்தரிப்பு பொதுச்சந்தை (மீன் சந்தை) | 1082081.00 |
| பண்டத்தரிப்பு சந்தை கருவாட்டுக் கடை இல-01 | 7500.00 |
| பண்டத்தரிப்பு சந்தை கருவாட்டுக்கடை இல-02 | 7500.00 |
| **பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்** | |
| மாசியப்பிட்டி சந்தை | 138158.00 |
| இளவாலை பொதுச் சந்தை | 258410.00 |
| மாசியப்பிட்டி சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 5600.00 |
| மாதகல் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 5600.00 |

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை,
மானிப்பாய். 13.12.2011

அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன், தவிசாளர்.

## வடக்கில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாவது:-

வடக்கில் அரசா லும் அரச படைகளாலும் மட்டும்தான் ஊடகங்கள் அச்சுறுத்தப்படுகின்றன, அடக்கப்படுகின்றன என்றில்லை. வடக்கில் நீதித்துறைக்கும் ஊடகங்களுக்கும் இடையிலும் இப்போது பனிப்போர் ஒன்று நடக்கின்றது. ஊடக சுதந்திரத்தில் நீதித்துறையின் தலையீடு எத்தகையது என்ற கேள்வியை இது எழுப்பியுள்ளது.

நீதிமன்ற அவமதிப்பு, மற்றும் மான நஷ்ட வழக்கு, அவதூறு வழக்குத் தொடர்பான பிரச்சினைகளை நான் இங்கு குறிப்பிடவில்லை. பொலிஸாரால் வழங்கப்பட்ட தகவல் அல்லது வேறு வழிகளில் கிடைக்கப்பெற்ற தகவல்களை வெளியே கொண்டுவரப்படுவதை நீதிமன்றங்களே தடுக்கின்றனவா என்ற அச்சத்தையும் நான் இங்கே வெளியிட்டேயாக வேண்டி இருக்கிறது.

வெளியிடப்பட்ட செய்திகளுக்காகப் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் நீதிமன்றங்களுக்கு அழைக்கப்பட்டு நீதிவான்களால் எச்சரிக்கப்பட்ட சம்பவங்கள் பல இந்த வருடத்தில் இடம் பெற்றுள்ளன. இதற்கு வடக்கு நீதித்துறையில் காணப்படும் அரசியல் தலையீடே காரணம் என்று வடக்குப் பத்திரிகையாளர்கள் கருதுகின்றனர். இத்தகைய ஒரு போக்கு தெற்கில் ஒருபோதும் காணப்படவில்லை. வடக்கில் இந்தப் போக்கு வளர்ந்து சென்றால் ஊடக சுதந்திரமும் நீதித்துறையும் மோதிக் கொள்ளும் ஒரு நிலை ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது.

### தமிழ் ஊடகங்களின் நிலைமை

மூன்று தசாப்தங்கள் தொடர்ந்த போர் முடிவுக்கு வந்த பின்னராவது ஊடக சுதந்திரம் கிடைக்கும், தமிழ் மக்களின் பிரச்சினைகளை வெளிப்படையாகப் பேச முடியும் என்று எண்ணி இருந்த தமிழ் ஊடகங்களுக்கு இன்றைய நிலையை நினைத்து அழுவதா சிரிப்பதா என்று இருக்கிறது. தமிழ் மக்களின் விருப்புக்களை, தமிழ் மக்களின் தேவைகளை, அவர்களின் அரசியல் அபிலாஷைகளை வெளிப்படுத்துகின்ற தமிழ்ப் பத்திரிகைகளை அடக்கியாளவே இந்த அரசு விரும்புகிறது.

எனக்குக் கிடைத்த தகவல் ஒன்றின்படி, அரசை விமர்சிக்கும் தமிழ் ஊடகம் ஒன்றின் ஆசிரியரைச் சந்தித்த ஜனாதிபதி, நேரிலேயே அவரிடம் ''எங்களை விமர்சிக்கும் போக்கை உங்கள் பத்திரிகை இன்னும் மாற்றவில்லை'' என்று கூறியுள்ளார்.

போர் முடிவடைந்த பின்னரும் நாளாந்தம் அரசின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் ஒரு துறையாக ஊடகத்துறை அச்சப்பட்டுக்கொண்டிருக்கிறது.

தமிழ் ஊடகவியலாளர்கள் தொடர்ந்தும் தாக்கப்படுகிறார்கள், அச்சுறுத்தப்படுகிறார்கள். மனித உரிமைகள் தினமான கடந்த 10ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்தைப் படமெடுக்க முயன்ற ஊடகவியலாளர்களை அங்கிருந்த பொலிஸார் பகிரங்கமாக மிரட்டியிருக்கிறார்கள். ''படம் எடுக்கக்கூடாது, செய்தி போடக்கூடாது. மீறி எடுத்தால் பிறகு உன்னைப் பார்த்துக் கொள்கிறேன்'' என்று யாழ். பொலிஸ் நிலைய தலைமை இன்ஸ்பெக்டர், நூற்றுக்கணக்கான மக்களின் முன்னிலையில் செய்தியாளர்களை மிரட்டியுள்ளார்.

பத்திரிகையாளர்களையும் ஊடகங்களையும் மிரட்டிப் பணிய வைப்பதற்கு அரசு ஏன் இவ்வளவு தீவிரமாக முயற்சிக்கிறது? தமிழில் ஒரு சொலவடை இருக்கிறது, குற்றமுள்ள நெஞ்சே குறுகுறுக்கும் என்று. அரசின் நடவடிக்கைகளைப் பார்க்கும்போது அதுதான் ஞாபகத்துக்கு வருகிறது. தமிழ் மக்களிடம் தன்னைப் பற்றிய உண்மைச் சொரூபத்தை மறைக்க தமிழ் ஊடகங்கள் உதவ வேண்டும் என்பதே இன்றைய அரசின் முழு நோக்கமாக இருக்கிறது.

### வடக்கு - கிழக்கில் தமிழ்ப் பத்திரிகையாளர்களின் நிலை

போர் முடிவடைந்து சண்டை ஓய்ந்துவிட்டபோதும் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ்ப் பத்திரிகையாளர்களின் நிலைமையில் இன்னும் முன்னேற்றம் ஏதுமில்லை. அவர்கள் தொடர்ந்தும் துன்பத்திலேயே உழல்கிறார்கள். தொடர்ந்து தாக்கப்படுகிறார்கள், அச்சுறுத்தப்படுகிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகும் உதயன் பத்திரிகையின் பத்திரிகையாளர்கள் இருவர் கடந்த வருடத்தில் தாக்கப்பட்டுள்ளார்கள். அவர்களில் ஒருவரைக் கொலை செய்யும் நோக்குடனேயே தாக்குதலாளிகள் செயற்பட்டுள்ளனர். ஆனால், இதுவரையில் இரு சம்பவங்கள் தொடர்பிலும் குற்றவாளிகள் எவரும் நீதியின் முன்னால் நிறுத்தப்படவில்லை.

உதயனின் செய்தி ஆசிரியர் குகநாதன் தாக்கப்பட்டது தொடர்பான சம்பவத்தில் தாங்கள் தாக்குதலாளி ஒருவரைக் கைது செய்துள்ளதாகவும் தாக்குதலை நடத்தச் சொன்னவர் ஒரு சட்டத்தரணி என்றும் ஜனாதிபதி என்னிடம் நேரிலேயே கூறி இருந்தார். பொலிஸ் மா அதிபரும் அப்போது உடன் இருந்தார். விரைவில் குற்றவாளிகளைப் பிடித்துவிடுவோம் என்று ஜனாதிபதி முன்பாகப் பொலிஸ் மா அதிபர் என்னிடம் தெரிவித்திருந்தார்.

### குகநாதனைத் தாக்கியவர் யார்? எங்கே அவர்?

ஆனால் இதுவரையில் எதுவும் நடக்கவில்லை. சந்தேக நபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தி இந்த வழக்கைத் தீவிரத்துடன் முன்னெடுக்க பொலிஸார் முயற்சிக்கவேயில்லை. வழக்கு கிடப்பில் போடப்பட்டுள்ளது. குகநாதனைத் தாக்கச் சொன்னவர் என்று கூறப்பட்ட சட்டத்தரணிக்கு என்ன ஆனது என்று தெரியவேயில்லை. இந்த வழக்குத் தொடர்பில் எந்த ஒரு சட்டத்தரணியும் இதுவரை விசாரணை செய்யப்படவில்லை. அப்படி விசாரிக்கப்பட்டதாக நீதிமன்றத்தில்கூட பொலிஸார் அறிக்கை சமர்ப்பிக்கவில்லை.

குகநாதன் மீதான தாக்குதல் ஓர் அரசியல் நடவடிக்கை அல்ல என்று காட்டுவதற்காக இந்த அரசு சட்டத்தரணி கதையைச் சோடித்ததா? அல்லது உண்மையிலேயே ஒரு சட்டத்தரணி இதில் சம்பந்தப்பட்டிருந்து, அவர் எவராவது ஓர் அமைச்சருக்கு வேண்டப்பட்டவர் என்பதால் அவர் காப்பாற்றப்பட்டாரா? ஏனெனில் இந்தச் சம்பவத்தில் ஒரு சட்டத்தரணிதான், அதுவும் கூட்டமைப்பைச் சேர்ந்த சட்டத்தரணிதான் தொடர்புபட்டிருந்தார் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பறை தட்டிச் சொல்லி வந்தார். ஆனால், அந்தச் சட்டத்தரணி யார் என்பதை அவரும் பொலிஸாருக்குச் சொல்லவில்லைப் போல் உள்ளது. அதனால் அவர்களும் விசாரணை செய்யவில்லை.

இந்தச் சம்பவம் ஓர் உண்மையைத் தமிழ் ஊடக உலகுக்குச் சொல்லி நிற்கிறது. அதாவது, அரசை விமர்சிக்கும் தமிழ் ஊடகவியலாளர்கள் அரசால் தாக்கப்படுவார்கள். அத்தகைய ஊடகங்கள் எதிர்க் கட்சியினரைச் சேர்ந்தவர்களால் தாக்கப்பட்டால் தாக்கியவர், எதிரியாக இருந்தாலும்கூட பாதுகாக்கப்படுவார். ஆக மொத்தத்தில் தமிழ் பத்திரிகையாளர்களை யார் வேண்டுமானாலும் தாக்கலாம், ஆனால் தாக்கப்படுபவர் அரசுக்கு எதிராக எழுதுபவரா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியது மட்டுமே தாக்குதலாளியின் பொறுப்பாக இருக்கும் - என்றார்.

# மரண அறிவித்தல்கள்

## செல்வநாயகம் கோபிநாத்

(மாணவன், விளையாட்டு விஞ்ஞான அலகு, யாழ். பல்கலைக்கழகம்)



கரவெட்டி தெற்கு, கரவெட்டியைச் சேர்ந்த செல்வநாயகம் கோபிநாத் நேற்று (13.12.2011) செவ்வாய்க் கிழமை அகால மரணமானார்.

அன்னார் செல்வநாயகம்- சறோஜா தேவி தம்பதியரின் அன்பு மகனும், கோகிலா, யோகேஸ்வரன், ஊர்மிளா, மோகனா, தனுசா, தர்சனா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2011) புதன்கிழமை மு.ப 11 மணிக்கு நடைபெற்று பூதவுடல் சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரவெட்டி தெற்கு,
கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

## கணேசமூர்த்தி பார்த்தீபன் (சாரதி- NEHRP)



வல்லியானந்தம் துன்னாலை வடக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணேசமூர்த்தி பார்த்தீபன் நேற்று (13.12.2011) செவ்வாய்க்கிழமை அகாலமரணடைந்தார்.

அன்னார் கணேசமூர்த்தி- வசந்தமலர் தம்பதியரின் இளைய புதல்வனும், வசந்தநாயகி, கணேஸ்வரி, வளர்மதி(லண்டன்), வாமதேவன் (பிரான்ஸ்) வாசுகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2011) புதன்கிழமை பி.ப 3மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கியான்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வல்லியானந்தம்,
துன்னாலை வடக்கு, கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

## சுந்தரம் இராமசாமி



குரும்பசிட்டி,புலோலி தெற்கு புலோலியைப் பிறப்பிடமாகவும் தம்பசிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் இராமசாமி நேற்று 13.12.2011 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை தெய்வானையின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நற்குணத்தின் பாசமிகு கணவரும், கதிர்காமத்தம்பி(ஓய்வு பெற்ற தபால் அதிபர்) சிவக்கொழுந்து ஆகியோரின் அன்புச் சகோதரரும் சண்முகசுந்தரம்(ஆங்கில ஆசிரியர்) இந்திராணி(தாதிய சகோதரி யாழ்.போதனா வைத்தியசாலை) மங்களநாயகி(பிராந்திய பொது சுகாதார தாதிய சகோதரி வவுனியா),கிருஷ்ணானந்தம்(ஆசிரியர்), காலஞ்சென்ற சிறிபத்மநாதன் (இ.போ.சபை பருத்தித்துறை பொறியியல் துறை மாணவன்), நவரட்ணம்(லண்டன்),கருணாநிதி (பிரதம பொது முகாமைத்துவ உதவியாளர்), இ.பத்மராஜன் (காணிமாவட்ட பதிவகம் கச்சேரி,யாழ்ப்பாணம்),சிறிகாந்தரூபன்,ஜெயந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் ச.வசந்தினி, கி.சியாமளா, சுகிர்தா(லண்டன்), பிரசாந்தி, மயில்வாகனம்(காங்கேசன் துறை சீமெந்து கூட்டுத் தாபனம்), ஜெயக்குமார், சிறிகாந்தரூபன் ஆகியோரின் அன்பு மாமனாரும் தர்சிகன், கோபிராம்,கோரட்சன்(லண்டன்), பிரசாத்,க பிலன், வர்ணகுலராம், சேதுகானன், சதுஷன்,தேனுஷன், பவிஷன்,மயூரா, பிரசாந்தி(தேசிய கல்வியியற் கல்லூரி வவுனியா), லோசிகா,திருத்திகா, பௌசிகா,சேது, சாருகா, பிரியசுகி,பிரியந்தி, ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2011) புதன்கிழமை மதியம் 12.00 மணியளவில் தம்பசிட்டியில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கருகம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குடும்பத்தினர்.

## வாக்காளராக... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேரடியாக எனக்கு கடிதம் மூலம் அனுப்பி வைக்கலாம்.

என்ன காரணத்துக்காக தாம் வாக்காளர்களாக பதிவு செய்யவில்லை என்பதை அவர்கள் தெரியப்படுத்தினால்தான், அதனை அடிப்படையாகக் கொண்டு அடுத்த ஆண்டு வாக்காளர் பதிவு நடவடிக்கைகளில் மாற்றத்தினை கொண்டுவரமுடியும். அத்துடன் வாக்காளர்களின் முறைப்பாடுகளை தேர்தல் ஆணையாளருக்கு தெரியப்படுத்தி புதிய வாக்காளர் பதிவில் சில மாற்றங்களை நடைமுறைப்படுத்த முடியும். அத்துடன் கிராம சேவையாளர்களுக்கும் சரியான அறிவுறுத்தல்களை வழங்க முடியும்.

மேலும் தமது பதிவு மேற்கொள்ளப்படாமைக்குரிய காரணங்களை மக்கள் கடிதம் மூலம் தெரியப்படுத்தினால்தான் அடுத்த வருடத்தில் அவர்களை வாக்காளர் பட்டியலில் இணைத்துக் கொள்வதற்கு இலகுவாக இருக்கும்-என்றார். (ங-15)

## இறுதிப்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்தார்.

சீன இராணுவத்தின் இரண்டாம் நிலைத் தளபதி ஜெனரல் மா ஹிசியாவோரியன் மற்றும் ஏழு உயர்மட்ட அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது.

ஜெனரல் மா ஹிசியாவோரியன் கடந்த ஆறு மாதங்களில் இலங்கைக்கு மேற்கொள்ளும் இரண்டாவது பயணம் இதுவாகும்.

இலங்கைக்கு நிபுணத்துவப் பயற்சிகள், போர் ஒத்திகைகள், மேலதிக இராணுவ உதவிகளை ஊக்குவிப்பதே இந்தக் குழுவினது பயணத்தின் நோக்கம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இருநாட்டு இராணுவங்களுக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்திக் கொள்வது மற்றும் இலங்கை இராணுவத்துக்கான வாய்ப்புகளை அதிகரிப்பது குறித்து இலங்கை இராணுவத் தளபதியுடன் சீன அதிகாரிகள் குழு கலந்துரையாடியது.

சிறிது காலத்துக்கு முன்னதாக இதுபோன்று சீனக் கடற்படையின் உயர்மட்ட அதிகாரிகள் குழு நடத்திய பேச்சுக்களின் விளைவாக, ஆண்டு தோறும் நடத்தப்படும் ஒப்பரேசன் நீர்க்காகம் போன்ற போர்ப்பயிற்சிகளுக்கு சீனாவின் பிரதிநிதிகளை அனுப்புவதற்கு இணக்கம் காணப்பட்டிருந்தது.

இலங்கை இராணுவத் தளபதியுடனான சந்திப்பின்போது புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் இலங்கை இராணுவத்தின் அனுபவங்களைக் கேட்டறிந்துகொள்வதில் சீன இராணுவ அதிகாரிகள் ஆர்வம் காட்டியதாகவும் கூறப்படுகின்றது. (ங-சி)

## வவுனியா... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வகம் ஒன்றில் சமையலாளராகப் பணிபுரிந்து வருகிறார். நேற்றுமுன்தினம் வேலை முடிந்த பின்னர் அவர் சின்னக்கடைப் பகுதியில் உள்ள உறவினரைப் பார்ப்பதற்குச் சென்றுள்ளார்.

இரவு மது அருந்திவிட்டுக் குறித்த நபர் படுக்கச் சென்றதாகவும், காலையில் எழுந்து பார்த்தபோது அவர் இறந்து கிடந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணப் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து காலையில் குறித்த இடத்துக்கு வந்த பொலிஸார் சடலத்தை மீட்டனர்.

அத்துடன் சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஆனந்தராஜா பிரேதபரிசோதனைக்காக சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ங-15)

JAFFNA SOCIAL ACTION CENTRE
18/1, Kailasapillaiyar Kovil Road, Nallur, Jaffna.
JSAC

**Vacancy for the post of Finance officer / Accountant**

Applications are invited for the post of finance officer / Accountant from the suitable candidates with the following qualification.

1. The person shoud have degree or diploma in finance / Accounting.
2. Good interpersonal and liaison skills with and excellent of written and spoken English.
3. Age should be not less than 22 years.
4. Good Analytical skills & profound knowledge of Ms office & Excel as wel as experience with an established book keeping software.
5. Excellent interpersonal skills and ability to work in a multicultural setting & able to deal multi donor Accounting system.
6. Previous experience required preferably with local 'NGO's or international 'NGO's.

Applications should be forwarded to **co-ordinator, Jaffna social Action Centre, 18, Kailasappillaiyar kovil Road, Nallur, Jaffna.** on or before 20th of December 2011. also mention as "The Application for the post of Finance officer / Accountant" at the upper left corner of the envelope. only selected candidates will be called forthe interview.

JOB VACANCY - JAFFNA

SRM Lanka [Pvt] Ltd.

**Lecturers**
Software Development | Business Management | Hardware and Networking | Multimedia
Qualification : Degree / Higher Diploma - with Experience

**Student Counselor**
Qualification: Degree / Higher Diploma
Fluency in English & Tamil
Previous experience is an added qualification

**Marketing Executive**
Qualification: Degree / Higher Diploma
Fluency in English & Tamil
Previous experience is an added qualification

**Receptionist**
Qualification: G.C.E A/L / Diploma
Fluency in English & Tamil
Previous experience is an added qualification

**Office Assistant**
Qualification : G.C.E O/L

Interested applicants must forward their complete resumes including the contact no, together with a photograph within 5 days of the advertisement to reach the following address or the given email address. Post applied for to be indicated on the top left hand corner of the envelope.

SRM LANKA
SRM Lanka (Pvt) Ltd.
#329 - 1st Floor, Meewella Building, Galle Road, Colombo 4.
#75/6 - K.K.S Road, Jaffna
Tel: 011 259 2323 | Mob: 0718554508 | E-mail: info@srmlanka.com

*யாழ்ப்பாணத் தனியார் கல்வி நிலைய வரலாற்றில் முதன் முறையாக*

**தரம் 6 (ஆங்கில மொழி மூலம்) மாணவர்களுக்கு அகலத்திரையில் புறஜெக்ரர் மூலம் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் போன்ற பாடங்கள் ஆரம்பமாகின்றன.**

- கல்வியாளர், அதிகாரிகள், இந்த நவீன கற்பித்தல் முறையை அதிகம் வரவேற்கின்றனர்.
- ஒரு பிரிவில் 25 பேர் மட்டுமே.
- ஏற்கனவே இரண்டு பிரிவுகள் எம்மிடம் தரம் 5 இல் கற்கின்ற மாணவர்கள் இணைத்துக் கொள்ளப் பட்டுள்ளனர்.
- தொலைபேசி மூலம் பதிவுகள் ஏற்கப்படமாட்டாது.
- விண்ணப்பங்கள் ஏற்கும் கடைசித் திகதி 16.12.2011 வெள்ளிக்கிழமை பி.ப. 5.30 மணி.

## திசைகாட்டி பிறைவேற் லிமிட்டெட்



முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்

37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
E-Mail: thisaikaddi@sltnet.lk
Web: www.thisaikaddi.lk
T.P.: 0214914527, 0212219016

## மரண அறிவித்தல்கள்

### *அந்தோனிப்பிள்ளை யோசெப் சேவியர் (சாண்டோ)*

(உரிமையாளர், மரியா ரேடஸ், நெல்லியடி)



யாழ்ப்பாணம், இராசாவின் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் நெல்லியடி சயன்ஸ் சென்ரர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை யோசெப் சேவியர் (சாண்டோ) (12.12.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை-மரியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு. திருமதி அந்தோனிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற மேரிகிறேஸ் தங்கராணியின் பாசமிகு கணவரும், றோசான் யூட் (கனடா), றொபின்சன் யூட் (பிரான்ஸ்), றொபேட்சன் யூட் (மரியா றேடஸ்-நெல்லியடி), மரியா காமலின் ஆகியோரின் பாசமிகு தகப்பனும், அனித்தா (கொழும்பு), டிலீசி, ஜெமி ஆகியோரின் மாமனும், றொசனாவின் பேரனும், காலஞ்சென்ற ஜீவரத்தினம், தங்கரத்தினம், பொன்பொஸ்கோ (சில்லாலை), மலர் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற பொன்ராசா, ஞானராசா, காலஞ்சென்ற யோகராசா, இந்திராணி, ஒலிவர் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (15.12.2011) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் இருந்து இரங்கல் திருப்பலிக்காக புனித அந்தோனியார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் கரவெட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சயன்ஸ் சென்ரர் வீதி,
நெல்லியடி.

தகவல்:
**பிள்ளைகள்.**

### *குமாரசாமி பத்தர் அற்புதராசா (கிப்பி)*

(கிப்பி நகைத் தொழிலகம், கச்சாய் வீதி, சாவகச்சேரி)



சங்கத்தானை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி பத்தர் அற்புதராசா (12.12.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி பத்தர்-யோகம்மா தம்பதியரின் அன்பு மகனும், வரலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும், பிரதீபன், சுமலதா (பிரான்ஸ்), இந்துமதி (பிரான்ஸ்), யமுனா (Surveyor Assistant-Smec Cons.Ltd), காலஞ்சென்ற திலீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயந்திரன் (பிரான்ஸ்), தவக்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், சனுசாந்தின் பேரனும், சண்முகலிங்கம் (ராசன்), தேவதாஸ் (சிறி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தியாகராஜா (பொறியியலாளர்), ரேவதி சபேசன் ஆகியோரின் மைத்துனரும், செல்வராசா (செல்வன்), வாணி ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2011) புதன்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெற்றோரினார் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

## வருகிறார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கும் அனுப்பிவைக்க அரசு தீர்மானித்துள்ளது.

ஜெனிவாவில் உள்ள ஐ.நாவுக்கான பிரதிநிதி, ஆணைக்குழுவின் அறிக்கையை நவநீதம்பிள்ளையிடம் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் கையளிப்பார் என அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை ஆழமாக ஆராய்ந்த பின்னர் அறிக்கை குறித்து ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் நிலைப்பாட்டை நவநீதம்பிள்ளை அறிவிப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் விவாதிப்பது தொடர்பில் இலங்கை அரசின் நிலைப்பாட்டை நவநீதம்பிள்ளை கொழும்பு வரும்போது கேட்டறிவார் எனத் தெரிவிக்கப்படும் அதேவேளை, அறிக்கை குறித்து தனது நிலைப்பாட்டை இலங்கை அரசிடம் உத்தியோகபூர்வமாகவும் அவர் அறிவிப்பார் எனத் தெரிய வருகிறது. இலங்கை விஜயத்தின்போது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் உட்பட முக்கிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்துவதற்கும் நவநீதம்பிள்ளை திட்டமிட்டுள்ளார். நவநீதம்பிள்ளையின் இலங்கை விஜயம் ஜனவரி மாதம் முதல் வாரத்திலேயே இடம்பெறவிருந்தது. எனினும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை விவகாரத்தால் அவரின் விஜயம் பிற்போடப்பட்டது.

தற்போது பெப்ரவரி மாதம் முதல் வாரத்தில் அவர் இலங்கை வருவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை விரைவில் வெளியிடுவோம் என்றும், அந்த அறிக்கையின் பிரதியொன்றை ஐ.நா.மனித உரிமைகள் பேரவைக்கு கையளிப்போம் என்றும் இலங்கை அரசு உறுதியளித்துள்ளதை அடுத்தே, நவநீதம்பிள்ளை இலங்கைக்கு விஜயம் செய்வதற்குத் தீர்மானித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ங-சி)

## கண்ணீர் அஞ்சலி



எமது 'உதயன்' நிறுவனத்தில் கணினிப்பிரிவில் பணியாற்றும் செ.ஊர்மிளா அவர்களின் சகோதரர்

**கோபிநாத்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாக இயக்குநர், பணியாளர்கள், உதயன்.

## SPOKEN ENGLISH WITH DIPLOMA CERTIFICATE

பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர், பட்டதாரிகள், இளைஞர் யுவதிகள் மற்றும், A/L எழுதிய மாணவர்கான

வார, மற்றும் சனி ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம்

15.12.2011 வியாழன் : காலை 9.00-11.00
17.12.2011 சனி : காலை 9.00-11.00 மற்றும் மாலை 3.00-5.00

முதல் வகுப்பு அனுமதி. புத்தகம். மற்றும் சான்றிதழ் இலவசம்

MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

*யாழ்.நகரில் புதிய உதயம்*

## Jet D Express
### Courier Service



ஒரு மாத காலத்திற்கு கட்டணச் சலுகை

*14.12.2011 இன்று காலை 10.30 - 11.30 வரையுள்ள சுபவேளையில்* எமது ஸ்தாபனம் திறந்து வைக்கப்படுகின்றது.

உங்கள் உறவுகளுக்கு நீங்கள் அனுப்பும் பொருள்கள் **5 நாள்களில்** சென்றடைவதற்கு எம்மை நாடுங்கள்

No. 77E, Manning Place,
Wellawatta, Colombo-06.
T.P.: 0112363873

இல.27, முதலாம் மாடி., நவீன சந்தை
(தனம் ரெக்ஸ் மேல், யாழ்ப்பாணம்)
தொ.பே: 0212219150, 0772187301

## SK வயோதிபர் இல்லம்,

### அறிவியல் நகர்-கிளிநொச்சி
### வயோதிபர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பம் கோரல்

2012.01.03 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, கிளிநொச்சியில் S.K. வயோதிபர் இல்லம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்த வயோதிபர் இல்லத்தில் வதிவதற்கு விரும்பும் வயோதிபர்கள் 20.12.2011 ஆம் திகதிக்கு முன்னர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

க.இராஜேந்திரம் - **0770757434**
சி.இதயராஜா - **0714419204**
தா.நிகேதன் - **0778394113**

## ICT, GIT வகுப்புக்கள்

தரம் 10, 11 இற்குரிய ICT தரம் 12 இற்குரிய GIT வகுப்புக்கள் தமிழ், ஆங்கில மொழி மூலங்களில் குழுக்களாகவும், பிரத்தியேக வகுப்புக்களாகவும் கற்பிக்கப்படும்.

186/24, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(ஆனைப்பந்தி சந்திக்குச் சமீபமாக)
தொ.பே. இல: 0776180147

## NEC கல்வி நிலையம்

கிளி/மத்திய கல்லூரி முன்பாக-கிளிநொச்சி

A/L 2012 ஆம் ஆண்டுக்கான புதிய வகுப்புக்கள் எமது நிறுவனத்தின் தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழாத்தினால் (25.12.2011) இல் ஆரம்பமாகின்றன.

கணிதம், விஞ்ஞானம், கலை, வர்த்தகம் ஆகிய பிரிவு மாணவர்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

நிர்வாகம்.

## வேலை வாய்ப்பு

பிரபல நிறுவனம் ஒன்றுக்கு

- கணினி ரைப்செற்றிங் செய்வதில் திறமை உள்ளவர்.
  (முன் அனுபவம் உள்ளவருக்கு முன்னுரிமை)
- அலுவலகத்தில் பணி புரியக்கூடியவர்கள் தேவை.

**தொடர்பு: 0775040714**

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1977, புனர்பூசம் நட்சத்திரமுடைய, அழகிய, அரசாங்கத் தொழில் புரியும் மகளுக்கு பெற்றோர் பொருத்தமான மணமகனைத் தேடுகின்றனர். தகுந்த சீதனம் வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு: 0779116820**

## மலிவு விலையில் HP Computer

**HP COMPLETE SYSTEM**

3.2 GHz LGA Processor
HP LGA 775 DDR 2 Board
1 GB DDR 2 Ram
80 GB hard Disk
DVD ROM
17" HP LCD Monitor (Square)
USB Keyboard
USB Mouse
USB Speaker

**23,000/=** Free 12Mp Web Camera

| | |
|---|---|
| E173 - 7.2 Dongle | 4,000.00 |
| 7.2 - O2 Dongle | 3,650.00 |
| 5 Mp Web Camera | 1,200.00 |
| 12 Mp Web Camera | 2,500.00 |
| Quality Speaker | 300.00 |
| Head Phone | 250.00 |
| UPS Battery | 1,500.00 |
| Computer Table | 2,600.00 |
| Kaspersky (Single User) | 1,800.00 |
| 10m VGA Cable | 1,500.00 |
| HDMI Cable | 1,250.00 |

*Computer Repair*

PC MATE SYSTEMS
Computer Sales & Repair

174/16, கோவில் வீதி, நல்லூர்.
(கைலாசபிள்ளையார் கோவில் அருகில்)
021 222 4692 / 077 053 0566

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.12.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.